பக்கங்கள்: 24+VIII=32

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 15 ஞாயிற்றுக்கிழமை (31.07.2005)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :247

## ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் ஜே.வி.பியினரை இணைப்பதா?

### சு.க. தலைமைக்குள் இழுபறி நீடிக்கிறது

கொழும்பு,ஜூலை31

ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவு செய்துள்ள போதிலும் அவருக்கு ஆதரவாகப் பிரசாரப் பணிகளை முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்துப் பிரசாரம் செய்யும் போது ஜே.வி.பியினர் அப்பிரசாரங்களில் பங்குகொள்வதை ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்று ஜனாதிபதி முடிவு செய்துள்ளார். தனது இந்த முடிவை கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

ஆனால், ஜே.வி.பியுடன் இணைந்தே பிரசாரங்களை மேற்கொள்ளவேண்டும் என்பதிலும் அவர்களின் ஆதரவு இல்லாமல் வெற்றிபெற முடியாது என்பதிலும் - மஹிந்த ராஜபக்ஷ உறுதியாக இருக்கின்றார் என்று கூறப்படுகிறது.

எதிரும் புதிருமான இந்த நிலைப்பாடு காரணமாக ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை -

பிரசார உத்திகளை வகுப்பது மற்றும் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பது போன்ற பணிகளை மேற்கொள்ள 11 பேர் கொண்டகுழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு ஜனாதிபதியின் நேரடிமேற்பார்வையில் செயற்படும் என்பதும் -

(20ஆம் பக்கம் பார்க்க)

## இவ்வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல்?

### தேர்தல் ஆணையாளரின் அறிவிப்பு அடுத்த வாரம்

கொழும்பு,ஜூலை31

ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறும் என்பது குறித்த முக்கிய அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அடுத்த வாரம் - பெரும்பாலும் 8ஆம் திகதிக்குப் பின்னர் வெளியிடுவார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலும் ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடமே நடத்தப்படும் சாத்தியம் உள்ளது என்றும் -

இது தொடர்பான அறிவிப்பு வெளியானவுடன் எவராவது நீதிமன்றத்தை அணுகினால் அதற்கு பதில் அளிக்க சட்டத்தில் உள்ள வாய்ப்புகள் குறித்து தேர்தல் ஆணையாளர் சட்டமா அதிபருடன் ஆராய்ந்து வருகின்றார்

(20ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு. நகரிலும்

# எழுச்சி மாநாடு!

## தமிழ் - முஸ்லிம் பேராளர்கள் செவ்வாயன்று கூடிப் பிரகடனம்

மட்டக்களப்பு,ஜூலை31

**தமிழ்மக்களின் சுதந்திரப் போரையும் சுயநிர்ணய உரிமையையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மட்டக்களப்பிலும் மாபெரும் எழுச்சி மாநாடு நடத்தப்படவுள்ளது.**

**இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இந்த மாநாடு கூட்டப்படுகிறது. தமிழ் - முஸ்லிம் பிரமுகர்கள் உட்பட சுமார் ஆயிரம் பேராளர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு பொதுப் பிரகடனம் ஒன்றை வெளியிடவிருக்கின்றனர்.**

கிழக்கில் மட்டக்களப்பு உட்பட இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் நடவடிக்கைகளுக்காகத் தங்கியிருந்த தமது உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் திருப்பி அழைத்துள்ள சூழ்நிலையில் அங்கு இடம்பெறவிருக்கின்ற இந்த எழுச்சி மாநாடு அதிக முக்கியத்துவம் பெறுகிறது என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட வெகுஜன அமைப்புகள் இணைந்து இந்த எழுச்சி மாநாட்டை ஏற்பாடு செய்கின்றன.

பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாணவர்கள் மற்றும் மதத் தலைவர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் என பல்வேறு தரப்பினர் இந்த மாநாட்டில் பங்குபற்றவிருக்கின்றனர்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை எடுத்து விளக்கி விடுதலையின் அவசியத்தை சர்வதேச சமூகத்துக்கு வலியு றுத்தும் வகையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டின் இறுதியில் சர்வதேச சமூகத்துக்கு பொதுப் பிரகடனம் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இதேபோன்ற ஓர் எழுச்சி மாநாடு கடந்த புதன்கிழமை வவுனியாவில் நடைபெற்றது தெரிந்ததே. (ஐ-3)

## உள்ளே சூரியகாந்தியில்

- ஈழத்தமிழர் விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் போக்கு மாறவேண்டும்!
- உலகப் பொலீஸ்காரனை வளைக்கப் பார்க்கிறதா இந்தியா?
- 'தந்தால் வாங்கலாம்' என்ற கையேந்து நிலை வேண்டாம்.
- அத்திலாந்திக் கடல் தாண்டி அமெரிக்கா சென்ற அன்னபூரணி அம்பாள் - *தொடர்.*
- புலிகளைப் புறந்தள்ளிச் செய்த ஒப்பந்தத்தின் தோல்வி.

இவற்றுடன் -
- திலகம் * சிறுவர் பொழில்
- யாரொடு நோவோம்
- யாழ். பாணம்.

## அமைதி வழியில் செயற்படும் அமைப்புகளுக்கு அமெரிக்கர்கள் ஆதரவளிக்க உரிமையுண்டு

### அந்நாட்டு நீதிமன்றம் தெரிவிப்பு

லொஸ்ஏஞ்சல்ஸ்,ஜூலை31

அமெரிக்காவில் உள்ள அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் அமைதி வழியில் செயற்படும் அமைப்புகளுக்கு ஆதரவளிக்க உரிமையுண்டு என்று அமெரிக்க நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தீர்ப்பு வழங்கியுள்ளது.

இலங்கையில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் துருக்கி நாட்டிலுள்ள குர்டிஸ்தான் அமைப்பின் பகுதிகளிலும் இயங்கும் அரசியல் அமைப்புகளுக்கு உதவி வழங்குவதில் இருந்த தடைகளுக்கு எதிராக சட்ட பூர்வ உரிமைகளுக்கான மையத்தினால் தொடரப்பட்ட மனு ஒன்றுக்கு ஆதரவாகவே லொஸ்ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

குறிப்பாக கடந்த ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலையினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்கு - கிழக்கு கரையோரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருப்பது பற்றியும் அங்கு பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகளின் முக்கியத்துவத்தினையும் இந்த வழக்கில்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் கையெழுத்துப் போராட்டம்

கொழும்பு,ஜூலை31

அரசை வீட்டுக்கு அனுப்புவோம் என்ற தொனிப் பொருளில் கையெழுத்துச் சேகரிக்கும் போராட்டம் ஒன்றை எதிர்வரும் 8 ஆம் திகதி எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி ஆரம்பிக்கின்றது.

நான்கு லொறிகளில் வெற்றுக் காகிதங்கள் ஏற்றப்பட்டு, நாட்டின் சகல பகுதிகளுக்கும் சென்று பொதுமக்களிடம் கையெழுத்து சேகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை -

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி மக்கள்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழு அலுவலகம் முன் ஈ.பி.டி.பியினர் விட்டுச் சென்ற சடலத்தில் குண்டுப் பரிசோதனை

### நீதிமன்ற உத்தரவை அடுத்து நிபந்தனையுடன் சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை31

கோயில் வீதியில் அமைந்துள்ள இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் முன்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரால் (ஈ.பி.டி.பி.) பிரேதப்பெட்டியுடன் வைக்கப்பட்ட சடலம் நேற்று யாழ். நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் - உடனடியாக அடக்கம் செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் - குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். நகரில் கடந்த வியாழனன்று தினமுரசுப் பத்திரிகைப் பிரதிகளை விற்பனை செய்துகொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினரின் சடலமே நேற்று முன்தினம் காண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக வைக்கப்பட்டிருந்தது.

பெட்டியுடன் சடலத்தை அங்கு எடுத்து வந்த ஈ.பி.டி.பியினர் அலுவலகம் முன்பாக அதனை வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது உறுப்பினர்கள் கொல்லப்படுவதை நிறுத்துவதற்கு உறுதிமொழி வழங்குமாறு ஈ.பி.டி.பியினர் கண்காணிப்புக் குழுவிடம் கோரினர். உறுதிமொழி தரப்படும்வரை சடலத்தை அங்கிருந்து அகற்றப்போவதில்லை என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஈ.பி.டி.பியினர் தெரிவித்தனர். எனினும் இரவு நேரம் நெருங்கும் வரை உறுதிமொழி எதுவும் கிட்டாத நிலையில் சடலத்தை அந்த இடத்திலேயே கைவிட்டு அவர்கள் அங்கிருந்து அகன்றுவிட்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக சடலம் அநாதரவாக விடப்பட்டதால் பொலீஸாருக்குப் பெரும் சிக்கல் ஏற்பட்டது. பெரும் சிரமங்களுக்கு உள்ளான பொலீஸார் நீதிமன்றத்தின் உதவியை நாடினர்.

(20ஆம் பக்கம் பார்க்க)




திருமறைக் கலாமன்றத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று மாலை யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. விழாவில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மங்களவாத்தியங்கள் சகிதம் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம். யாழ். திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களின் கிராமிய நடன நிகழ்வுகளை இரண்டாவது படத்திலும் பிரதம விருந் தினரான யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா உரையாற்றுவதையும், திருமறைக் கலாமன்ற மேலதிக பிரதி இயக்குநர் ஜனாப் முகமட் சாபீர், அநுராதபுரம் திருமறைக் கலாமன்ற ஆலோசகர் வண. மில்லவே தர்மகீர்த்தி தேரர் ஆகியோர் ஆசியுரை வழங்குவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள் : தமிழினியன்)





# சில தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகள்: ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோர் அதிருப்தி

திருகோணமலை மாவட்டத்தில் ஆழிப் பேரலைகளின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் தொடர்பாக சில அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற் கொண்டு வரும் பணிகள் தொடர்பாக பாதிக் கபபட்ட மக்கள் கவலையடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.குறிப்பாக நிவாரணப் பணிகளுக்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போது விழுந்தடித்துக்கொண்டு சென்ற இந்த நிறுவனங்களில் ஒரு சில நிறுவனங்கள் அச மந்தப் போக்குடன் செயற்பட்டு வருவதாக வும் இந்த மக்கள் கவலை தெரிவிக்கின்ற னர்.

வேலூர் கிராமம் ஆழிப்பேரலைகளின் தாக்கத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக் கப்பட்ட கிராமமாகும். இந்தக் கிராம மக்கள் தற்போது இடம்பெயர்ந்து அடம்போடை அகதி முகாமிலும் பெரியகுளம் அகதி முகா மிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

பெரியகுளம் பகுதியில் வாழும் மக்களுக் கான தற்காலிக குடியிருப்புகள் பெரும் இழு பறிகள் மத்தியில் அமைக்கப்பட்ட போதும் இவர்களுக்கான எந்தவித அடிப்படை வசதி யும் செய்து கொடுக்கப்படவில்லை என இவர் கள் கவலை தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பாக இவர்கள் பல்வேறு மட்டங்களி லும் தொடர்புகொண்டபோதிலும் கூட தமக் கான அடிப்படை வசதிகள் எதுவும் இதுவரை செய்து தரப்படவில்லை எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இத்தகைய நிறுவனங்கள் தங்கள் அச மந்தப் போக்கினைக் கைவிட்டு வாக்குறுதி அளித்ததன் பிரகாரம் தமக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இவர்கள் கோரி வருகின்றனர்.

குறிப்பாக இங்கு பல மீனவக் குடும்பங் கள் வாழ்ந்து வருகின்ற போதிலும் கூட, இவர்கள் தமது வாழ்வினை மீளக் கட்டி எழுப்புவதற்கான மீன் பிடிப்படகுகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படவில்லை எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்

இதேபோன்று தோட்டச் செய்கையில் ஈடுபட்டோருக்கான உதவிகள் வழங்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்ட போதிலும்கூட இந்த வாக்குறுதியும் முழுமையாக நிறை வேற்றப்படவில்லை எனவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையே ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட மக்களுக்கான உளவள சிகிச்சைகள் வழங் கப்பட்டுள்ள நிலையில் இந்த மக்களை இயல்பு வாழ்வுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருகோணமலை அரசினர் பொது மருத்துவ மனையின் உள வள சிகிச்சை நிபுணர் டாக்டர் கடம்பநாதன் தெரிவிக்கின் றார்.

இவ்வாறு உள வள சிகிச்சை வழங்கப் பட்ட குடும்பங்கள் மற்றும் மாணவர்களுக் கான ஒன்றுகூடல் நிகழ்வு சனியன்று திரு கோணமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் இடம்பெற்றிருக்கின்றது.

மூவாயிரம் பாடசாலை மாணவர்கள் மற்றும் இரண்டாயிரம் குடும்பங்களும் இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டன.

திருகோணமலை நகரம் இந்த நிகழ்வி னால் விழாக் கோலம் பூண்டிருந்தது. 'யுனி செவ்' நிறுவனம் சமூக வலுவூட்டல் வலைப் பின்னல் அமைப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இணைந்து இந்த நிகழ்வினை வெற்றி விழாவாக உருவாக்கின.

**திருமலையிலிருந்து சங்கீத்**

இத்தகைய நிகழ்வானது ஆழிப்பேரலை யால் பாதிக்கப்பட்ட மக்களிடையேயும் மாண வர்களிடையேயும் புத்துணர்வினை ஏற்படுத் தின என்றே கூறவேண்டும்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மாண வர்களின் ஆடல் பாடல் மற்றும் கலை நிகழ் வுகளுடன் இவர்களின் கைவண்ணத்தில் உருவான பொருள்களின் கண்காட்சியும் இங்கு இடம்பெற்றது.

'யுனிசெவ்' நிறுவனம் சமூக வலுவூட்டல் அமைப்பு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒன்றிணைந்து மேற்கொண்ட இநத முயற்சி பாராட்டுக்குரியதாகவே அமைந் தது.

இதே வேளை -

ஆழிப்பேரலையின் தாக்கத்தினால் மன மொடிந்திருந்த பாடசாலை மாணவர்கள் மற் றும் அவர்களது குடும்பங்களிடையேயும் இந்த நிகழ்வு ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத் தியுள்ளது என்றே கூறவேண்டும். ★

# கூட்டுறவாளர் இன்று பேரணி நடத்துவர்

யாழ்ப்பாணம்,ஜூலை31

கூட்டுறவு தின விழாவை ஒட்டி கூட்டுற வாளர்கள் இணைந்து மாபெரும் எழுச்சிப் பேரணி ஒன்றை இன்று நடத்தவிருக்கின்ற னர்.

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்தில் நண் பகல் ஒரு மணியளவில் ஆரம்பமாகும் பேரணி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் முடிவடையும்.

அதைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் ஒன்று அங்கு இடம்பெறும்.

யாழ். மாவட்டத்தின் அனைத்து கூட்டுற வுச் சங்கப் பிரதிநிதிகள், பணியாளர்கள் இதில் கலந்துகொள்வார்கள். அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி பல நோ.கூ. சங்கம், சுன்னாகம் பலநோ.கூ. சங்கம், வலி காமம் கொத்தணி, பண்டத்தரிப்பு பலநோ. கூ. சங்கங்கம் ஆகியனவற்றின் கூட்டுறவு தொடர்பாக காட்சிகளைச் சித்திரிக்கும் ஊர் திப் பவனிகளும் இடம்பெறவுள்ளன.

(3-111)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு 35 சைக்கிள்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூலை31

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக் கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் களுக்குக் 'கியூமெடிக்கா' நிறுவனம், சர்வ தேச தமிழீழ மாணவர் பேரவையுடன் இணைந்து 35 சைக்கிள்களை வழங்கியுள் ளது.

சைக்கிள்களை வழங்கும் வைபவம் நேற்று மாலை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்திற்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் பிரதிநிதி செல்வக் குமார் தலைமை வகித்தார்.

'கியூமெடிக்கா' நிறுவனத்தின் இலங்கைக் கான இணைப்பாளர் சாம் ஜெயசூரியர், யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறைப் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், விடுத லைப் புலிகளின் யாழ். மாவட்ட மகளிர் அர சியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பா ளர் கண்ணன் ஆகியோர் கலந்துகொண்ட னர்.

வைபவத்தின் இறுதியில் மாணவர் களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

சைக்கிள் வழங்கலை 'கியூமெடிக்கா' நிறு வனத்தின் இலங்கைக்கான இணைப்பாளர் சாம் ஜெயசூரியர் ஆரம்பித்துவைத்தார்.

(ஐ-7)

# மல்லாகம் நீதிமன்றத்துக்கு விரைவில் ரூ.5 கோடி செலவில் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

மல்லாகம் நீதிமன்றத்துக்கான புதிய கட்டடம் தமிழர்களின் கலாசாரத்தைப் பிரதி பலிக்கத்தக்கவாறு 5 கோடி ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவிருக்கின்றது.

இராணுவ நடவடிக்கைகளினால் முழுமை யாக கட்டடங்கள் சேதமடைந்த இடத்திலேயே புதிய கட்டடம் அமைக்கப்படவிருக்கின்றது.

கட்டடம் அமைப்பதற்கான வரைபடங் கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. நிதி ஒதுக் கீடும் வழங்கப்பட்டுள்ளன.

கட்டட வேலைகள் அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன் றம் ஆகியன புதிய கட்டடத்தில் இயங்கவிருக் கின்றன.

இக்கட்டடத்தை அமைப்பதற்கான நிதியை புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு, நீதி அமைச்சு ஆகியன வழங்கியுள்ளன. (ஐ-3)

# போராளி சாவடைந்தார்

யாழ்ப்பாணம்,ஜூலை31

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் பின் போராளி ஒருவர் கடந்த வியாழக்கிழமை சுகயீனம் காரணமாக சாவடைந்தார்.

வீரவேங்கை இசைமுடி என்றழைக்கப் படும் தங்கவேல் தயாசீலன்(குச்சவெளி, வீரன்சோலை 2ஆம் வட்டாரம் திருகோண மலை) என்பவரே சாவடைந்தார் என அறி விக்கப்பட்டுள்ளது. (3-204)

# ஆசிரியருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை31

ஆசிரிய சேவை உள்ளீர்ப்பு பதவி உயர்வு மறுசீரமைப்பு சுற்றறிக்கை தொடர்பான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கொக்குவில் இந்துக் கல் லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையினால் நடத்தப்படும் இக் கருத்தரங்கில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது தேவைகளை இரண்டு பிரதிகளில் எழுத்து மூலம் சமர்ப்பிக்கலாம் என்றும் -

இந்தக் கருத்தரங்கில் சகல ஆசிரியர் களையும் பங்குபற்றித் தேவையான விளக் கங்களையும் பெற்றுக்கொள்ளுமாறும் -

சங்கத்தின் செயலாளர் அ.பாலச்சந்திரன் கேட்டுள்ளார்.

(ஐ-13)




ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு 'கியூமெடிக்கா' நிறுவனம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையுடன் இணைந்து சைக்கிகளை வழங்கியது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறைப் பேராசிரியர் சண்முகலிங்கன் ஆகியோர் சைக்கிள்களை வழங்குகின் றனர். 'கியூமெடிக்கா' நிறுவனத்தின் இலங்கைக்கானஇணைப்பாளர் சாம் ஜெயசூரியர், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படங்கள்: பிரபா)

# மனவளர்ச்சி குன்றிய சிறார்களின் வாழ்வை வளமாக்கும் பணியில் சிவபூமி பாடசாலை



சிவபூமியில் கற்கும் மாணவர்களில் ஒரு பகுதியினர்.

இறைவனின் இனிய படைப்புகளை அனுபவிக்கின்ற மனிதகுலம் இறைவனிற்குச் செய்கின்ற கைம்மாறாக உதவி வேண்டுவோருக்கு உதவுவது கடமையாகும். இந்த நோக்கைக் கருத்திற்கொண்டு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனால் உருவாக்கப்பட்டது சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை.

மனவளர்ச்சி குறைந்த குழந்தையின் தாய் ஒருவர், வல்லமை உள்ளோர்க்குப் பலர் உதவுகின்றார்கள். வல்லமை இல்லாத இக்குழந்தை போன்றோரை யாரும் கவனிப்பதில்லை எனக் கண்ணீர் மல்கக் கூறியுள்ளார். இதேபோல், பலரின் மன வேதனை - மனவளர்ச்சி குன்றியோரின் கவனிப்பாரற்ற நிலையைப் பலர் ஆறு.திருமுருகனிடம் எடுத்துக்கூறியுள்ளனர்.

இவற்றைச் செவிமடுத்து மனதில் இருத்திய ஆறு.திருமுருகன் பல சிறுவர் இல்லங்களை அணுகி மனவளர்ச்சி குறைந்த சிறார்களுக்கு ஒரு பாடசாலை அமையுங்கள் என வேண்டியபோது, அது சிரமமான காரியம் எனக் கூறி மறுத்தார்கள். இந்நிலையில் கடந்த ஆண்டுகளில் சிங்கப்பூர் செண்பக விநாயகர் ஆலயத்துக்கு உரையாற்றச் சென்றபோது, மனவளர்ச்சி குறைந்த சிறார்களின் பாடசாலைக்கு அவர் நேரில் சென்று அங்குள்ள நிலைகளைக் கண்டார்.

சீனப் பெண்மணியொருவர் அதிபராகப் பணியாற்றும் அப்பாடசாலையில் 600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள்



கணனிக் கற்கைநெறியில் மாணவர்கள்.

கற்று வந்தார்கள். மூன்று மாடி கொண்ட கட்டடம், பஸ் சேவை, நிரந்தர வைத்தியர் எனப் பல்வேறு நவீன வசதிகளுடன் அப்பாடசாலை இயங்கி வந்தது.

எங்கள் மண்ணிலும் எங்கள் சிறார்களுக்கு இவ்வாறு சகல வசதிகளுடனும் ஒரு பாடசாலை அமைக்கப்படவேண்டும் என்ற விருப்பும் உத்வேகமும் ஆறு.திருமுருகனிடம் தோன்றியது.

தொடர்ந்து லண்டன் மாநகரிற்கு உரையாற்றச் சென்ற அவர், இப்படியான ஒரு பாடசாலையை எமது நாட்டில் ஆரம்பிக்க வேண்டும் என்று சமூக சேவையாளர் மகாதேவன் ஜெயசீலன் என்பவருடன் கலந்துரையாடியுள்ளார். அவரும் எங்களால் இயன்றவரை உதவுவோம். நீங்கள் ஆரம்பியுங்கள் என்று உதவ முன்வந்தார்.

மேலும் லண்டனில் வாழும் பாலசிங்கம் (கணக்காளர்) இப்பணிக்குத் தானாக முன்வந்து 5 ஆயிரம் பவுண் பணத்தை ஒப்படைத்துப் புதிய பாடசாலையை உருவாக்குங்கள் என்று உற்சாகமூட்டினார். இப்பாடசாலையை அமைப்பதற்கான காணியைத் தங்களின் உறவினரது காணியைக் கண் வைத்திய நிபுணர் டாக்டர் குகதாசன் தம்பதிகள் வழங்கினர்.

2003ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி பாடசாலைக்கான அடிக்கல்லை நட்டார். லண்டனில் வாழும் அருளானந்தம் இப்பாடசாலைக்கென

## இவர்களுக்கும் ஒரு மனமுண்டு அதிலும் பல ஆசைகளுண்டு

ஒரு லட்சம் ரூபாவை வழங்கினார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி புதிய பாடசாலை - சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

கருணையும் அன்பும் இரக்கமும் காட்டி மேலை நாட்டவர்கள் இத்தகைய குழந்தைகளுக்கு முன்னுரிமை கொடுக்கின்றபோது, எம்மவர்கள் இவர்களைப் புறக்கணிக்கின்றார்கள். பல வீடுகளில் இவ்வாறான குழந்தைகளை அறைகளுக்குள் பூட்டி வைக்கின்ற நிலையும் காணப்படுகின்றது.

இந்தச் சிறார்களுக்கும் மனமுண்டு, அதிலும் பல ஆசைகள் உண்டு என்பதை உணர்ந்து அவர்களுக்காக - அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதே இப்பாடசாலை.

ஒரு வருடத்தைக் கடந்துள்ள இப்பாடசாலையில் 86 பிள்ளைகள் கல்விகற்று வருகின்றார்கள். இவர்களை வழிநடத்த 13 ஆசிரியர்களும் நிர்வாக உத்தியோகத்தர், காவலாளி எனப் பலர் பணியாற்றுகின்றனர். இவ்வாசிரியர்களுக்கான பயிற்சிகள் கொழும்பில் வழங்கப்பட்டன.

இப் பாடசாலை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.30

**தீபா - கங்கா**

மணிவரை செயற்படுகின்றது. பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைக்கு வருவதற்குப் போக்குவரத்து ஒழுங்கும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்து மாமன்றத்தின் உதவியுடன் தினமும் பாடசாலை நாள்களில் -மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகின்றது. மாணவர்களுக்கான மருத்துவ வசதிகளை யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறையினர் நேரடியாக வருகைதந்து வழங்குகின்றனர். மாணவர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குப் போதிய கட்டட வசதிகள் இல்லாமையைக் கருத்திற் கொண்டு தற்போது 3 மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இங்கிலாந்தில் வசிக்கும் இசைவித்தகி சிவசக்தி சிவனேசன், அமெரிக்காவில் வசிக்கும் வைத்திய கலாநிதி க.தேவகாந்தன் தம்பதிகள், லண்டனில் வசிக்கும் கா.விஜயானந்தன் ஆகியோர் மாடிக் கட்டடங்கள் அமைக்க நிதியுதவியை வழங்கியுள்ளார்கள்.

பாடசாலைக்கான விளையாட்டு மைதானத்திற்கான காணி அரசடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு வடக்கே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இங்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் பூங்கா அமைக்கப்படுகின்றது.

இங்கு கற்கும் மாணவர்கள் ஒவ்வொரு தவணையும் கல்விச் சுற்றுலா மேற்கொள்கின்றார்கள். கடந்த தவணையில் கூட வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்குக் கல்விச் சுற்றுலா சென்று வந்துள்ளார்கள்.

மாணவர்களுக்கான பாண்ட் வாத்திய இசைக்குழு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

கணனிப் பயிற்சி, மனையியல் பயிற்சி போன்ற பல்வேறு பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. எதிர்காலத்தில் இந்த மாணவர்கள் தமது வாழ்வை வளமுடன் அமைக்க வசதியாக சிறு சிறு தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கு நிர்வாகத்தினர் திட்டமிட்டுவருகின்றனர்.

இம் மாணவர்கள் மன வளர்ச்சி குன்றிய நிலையில் உள்ளதால், தமது அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவதைக்கூட அவர்கள் புரிந்து செயற்படமாட்டார்கள். எனவே, இவர்களுக்



மாணவர்கள் கலைநிகழ்வுகளில் பங்குபற்றியபோது...

குக் கடமைகளை எவ்வாறு நாம் செய்யவேண்டும், எப்படி எமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும் என்பது போன்ற பயிற்சிகள் இங்கு ஆசிரியர்களால் வழங்கப்படுகின்றன.

குறிப்பிட்டுக் கூறக்கூடிய இன்னுமோர் அம்சம் மாணவர்களை வழிநடத்துவதுடன் இப்பாடசாலை நின்றுவிடவில்லை. பாடசாலை நேரம் தவிர்ந்து வீட்டில் பிள்ளைகள் நிற்கும் சமயத்தில் அப்பிள்ளைகளை எவ்வாறு வழிநடத்தவேண்டும் என்று பெற்றோருக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

அதாவது, மாதாந்தம் பெற்றோர்களுக்கான ஒன்றுகூடல் நடத்தப்படுகின்றது. அந்த ஒன்றுகூடலில் மாணவர்களை வழிநடத்துவது என்பது குறித்து அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது.

இப்பாடசாலையில் மாணவர்களை இணைப்பதற்கோ தொடர்ந்து கற்பதற்கோ எவ்வித கட்டணமும் அறவிடப்படுவதில்லை.

முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இப்பாடசாலை எமது பிள்ளைகளுக்கு - மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு - ஒரு அன்பு தரும் கோயிலாக விளங்குகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. *

---

# சுவாமி சாந்தானந்தா மகா சமாதியடைந்தார்

சுவாமி சிவானந்தரின் பிரதம சிஷ்யர்களில் ஒருவரான சுவாமி சாந்தானந்தா சரஸ்வதி கடந்த 27ஆம் திகதி கோயம்புத்தூரில் மகாசமாதியடைந்தார்.

இவரின் அருள் இசைமழையில் நனைந்த அடியவர்கள் எண்ணற்றோர். இவர் 1970, 1980ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்துக்கும் வருகைதந்து குடாநாட்டு அடியவர்களுக்கு அருள் இசைகளை வழங்கியமை நினைவில், கொள்ளத்தக்கது.

சுவாமிகளின் மகாசமாதிப் பூசை இன்று ஞாயிற்றுக்கிழமை கோயம்புத்தூர் சிவாஞ்சலியில் இடம்பெறவுள்ளது.

இதையொட்டிய பிரார்த்தனைக் கூட்டம் இன்று காலை 6 மணியளவில் திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் இடம்பெறும்.(அ)

## துணுக்காய் வலய முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

துணுக்காய், ஜூலை31

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மல்லாவி வண்ணன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டுவிழா தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முன் பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிறுவனங்களின் ஒழுங்கமைப்பில் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடத்தப்படவுள்ளது.

(8-322-202)

## வவுனியாவில் பயிற்சிப்பாசறை

யாழ்ப்பாணம், ஜூலை31

வடக்கு-கிழக்கு மாகாண பெண்கள் சாரணிய அமைப்பின் ஏற்பாட்டில் பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கான பயிற்சிப்பாசறை நாளை திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சிப் பாசறையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 25 பெண் சாரணிய வழிகாட்டுநர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

(3-190-204)

---

### 'சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர்

# லஸந்த மீதான தாக்குதல் வழக்கில் 2 குற்றவாளிகளுக்கும் 6 மாதச் சிறை!

கொழும்பு,ஜூலை31

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்ரமதுங்க, அவரது மனைவி ஷேன் விக்ரமதுங்க ஆகியோரைத் தாக்கி அவர்களது இல்லத்திற்கு சேதம் விளைவிக்க முயன்ற குற்றச்சாட்டுக்களில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட இருவருக்கு ஆறுமாதக் கடூழியச் சிறைத்தண்டனையும், தலா இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறினால் மேலும் ஒருமாதம் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கங்கொடவில நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான்திருமதி ரத்மினி ரணவக்க குணதிலக்க இந்தத் தீர்ப்பை நேற்று வழங்கினார்.

ஊடகச் சுதந்திரத்துக்கும்; நீதித்துறைக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதைக் கவனத்தில் கொண்டே இந்தத் தீர்ப்பைத் தாம் வழங்குகின்றார். என நீதிவான் தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

1995ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக வழக்கைக் குற்றப் புலனாய்வுப் பொலீஸார் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கின் இரண்டு சந்தேகநபர்களும் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர் எனக் கடந்த 14ஆம் திகதி அறிவித்த நீதிவான் தண்டனை விவரத்தை அறிவிப்பதை நேற்றுவரை ஒத்திவைத்திருந்தார். நேற்றுத் தண்டனை விவரம் அறிவிக்கப்பட்டது.

தாம் குற்றவாளியாகக் காணப்பட்டதையடுத்து, அதனை ஆட்சேபித்து இரு எதிரிகள் சார்பிலும் மேன்முறையீடு செய்யப்பட்டது. அதனடிப்படையில், தலா பத்தாயிரம் ரூபா காசுப்பிணையில் செல்ல அவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

லஸந்த விக்ரமதுங்க சார்பில் சட்டத் தரணிகளின் லத்துவஹெட்டி ஆஜராகியிருந்தார்.

(எ-க)



மதுரை மீனாட்சி அம்மன்
அருள்தரும் ஜோதிடமும்
K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி

இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்துப்பாருங்கள்.

தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre)
T.P: 776446525. (38376) (54-16-18) Back side.



EVER SPECIAL
Aaaa Dii
Offer

Printer/Scanner/Table (large)/
High Quality Woofer/ 17" Dell Flat monitor
உடன் UPS, Screen Filter, CD Cleaner,
Dust cover & etc Totally Free

- இந்தியாவின் கணனி பொறியியல் துறைப் பட்டம் மற்றும் இரண்டு தசாப்த கால இந்திய கணனித்துறை அனுபவம்
- உலக கணனித்துறை முன்னணி நிறுவனங்களான IBM, Dell, Compaq, hp மற்றும் Intel உடன் இணை தயாரிப்பில் ஈடுபட்டவர்கள்
- இந்தியாவில் உயரிய நெட்வேர்க் (வலைப்பின்னலமைப்புகளை) வடிவமைத்தவர்கள்

UNIT
347, K.K.S Road, Manohara Theatre Junction, Jaffna
: 021-4590720 / 0773134737
Intel Digitel System
Multi Sport
A9, Chavakachcheri.


# மரண அறிவித்தல்கள்

## துரையப்பா இராஜரட்டினம் (சந்திரன்)

(ஓய்வுபெற்ற தபாலக ஊழியர், யாழ்ப்பாணம்)

பிளச்சஸ் லேன், சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் 2A, அம்பொன்சோ லேன் கவுடானா, தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா இராஜரட்டினம் அவர்கள் 28.07.2005 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் கல்கிஸை மகிந்த மலர்ச்சாலையிலிருந்து தெகிவளை பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.தொ.இல.2737670.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

(38373) (39.14.46.26)

## கதிரவேலு இரத்தினம் (நவாலி வடக்கு)



நவாலி, வடக்கைச் சேர்ந்த கதிரவேலு இரத்தினம் 30.07.2005 இல் இயற்கை எய்தினார்.

அன்னார் கோப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஐயா - சுந்தரம்மா ஆகியோரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற நவாலியூர் சின்னத்தம்பி (தலைமை ஆசிரியர்) கதிரலேலுவின் மனைவியும் காலஞ்சென்ற டாக்டர் சறோஜினிதேவி சுப்பிரமணியம் (R.M.P.) மற்றும் நவாலியூர் க.கௌரிகாந்தன், க.சிறீகாந்தன் க.ஜெயகாந்தன், க.சந்திரகுமாரி (ஆசிரியை, நவாலி ம.வி.) ஆகியோரின் அன்புத் தாயாரும் தம்பிஐயா-சுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர்), சந்திரகுமாரி, இராசேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஐங்கரன் (விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம், விரிவுரையாளர் IIS), சுபாஷினி (ஆசிரியை, கிளி/ இராமநாதபுரம், மேற்கு அ.த.க.பாடசாலை), சாரங்கன் (கனடா), அனுருத்தன் (ஜேர்மனி), அச்சுதன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.07.2005) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி வழுக்கை ஆற்றங்கரை ஆரியம்பிட்டி மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
நவாலியூர் **க.கௌரிகாந்தன்** (மகன்),
**சு.ஐங்கரன்** (பேரன்).

(38523) (39.14.46.26)

## மார்க்கண்டு பரமசாமி (சின்னமணி ஐயா)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பரமசாமி அவர்கள் 28.07.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் கலைவாணி, கலையரசன் (ஆசிரியர், யா/இணுவில் இந்துக் கல்லூரி), கலைச்செல்வன், கலைமதி (சமுர்த்தி உத்தியோகத்தர், சமுர்த்தி வங்கி, இணுவில்), கந்தரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற யோகம்மா, துரைராசா மற்றும் தங்கராசா ஆகியோரின் சகோதரனும் சிறீசேகரன், மணிவண்ணன், சுகன்ஜா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இடம்பெற்று, சமாதிக்கிரியைகள் கடந்த 29.07.2005 வெள்ளிக்கிழமை தாவடி இந்துமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கமலவாசா,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
**ப.கலையரசன்.**

(38370) (39.14.46.26)

# தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய பவளவிழா

தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலையின் பவள விழாவும், பெற்றோர் தினவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் மு.ஜெயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரமும் சிறப்பு விருந்தினராக காட்டுப்புலம் அ.த.க. பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் அ.சுப்பிரமணியமும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்தைச் சேர்ந்தவரான சிவஸ்ரீ சு.சுந்தரராசக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். (8-203)

# குடித்தொகைக் கற்கைநெறி விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ். பல்கலைக்கழகக் குடித்தொகையின் பட்டக் கற்கை நெறிக்கான விரிவுரைகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவிருக்கின்றன.

வழமையான நேர அட்டவணைப்படி விரிவுரைகள் நடைபெறவுள்ளதால் உரிய மாணவர்களைக் கற்கைநெறியில் கலந்துகொள்ளுமாறு கற்கை நெறியின் இணைப்பாளர் பேராசிரியர் கா.குகபாலன் கேட்டுள்ளார். (8-204)

# இலங்கை வங்கியின் 66 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை31

இலங்கை வங்கியின் 66 ஆவது ஆண்டு நிறைவுநாள் நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக்கிளையில் நடைபெறவுள்ளன.

வாடிக்கையாளர் சேவையில் 66 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இலங்கை வங்கியின் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (8-203)

# இரசாயனவியல் அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை31

இலங்கை இரசாயனவியல் கழகம் நடத்தும் ஆஸ்திரேலியன் தேசிய இரசாயனவியல் அறிவுப் போட்டிப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பல்வேறு நாடுகளுக்கிடையில் நடத்தப்படும் இப்பரீட்சையில் யாழ்ப்பாணத்திலிருந்து 525 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சை ஜி.சீ.ஈ. (உயர்தர) கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு சிரேஷ்ட பிரிவாகவும் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கு கனிஷ்ட பிரிவாகவும் நடத்தப்படவுள்ளது. (3-202)


அரசியல் மூலதத்துவங்கள்
T.திருமுருகன்
A/L 2006 Day 2007 (நடைபெறுகின்றன)
- ஒப்பீட்டு அரசியல்
- இலங்கை அரசியல் - பகுதி-II
- பகுதிI-M.C.Q. (8 வருட வினாவிடை)

வகுப்புகள் சனி, ஞாயிறு, திங்., புதன் - 4-6p.m.
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S.வீதி, இணுவில். (38359)



THE ROYAL COLLEGE OF JAFFNA
O/L மாணவர்களுக்கான ஆங்கில இலக்கண, வினாவிடை வகுப்புகள் By: விக்னேஸ்வரன் ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை, 426 K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.



விற்பனைக்கு
CG 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
92 Sri விலை 40,000/-(விலை பேசித் தீர்மானிக்கப்படும்)
நல்ல நிலையில் உள்ள என்ஜின்
தொடர்புகளுக்கு:
(சி-44144) 011 2598742.


## துயர் பகிர்வு

எமது பள்ளியின் ஆசிரியர்
திரு.சி.கணேந்திரராசா
அவர்களின் சகோதரி
திருமதி
**கமலராணி ஆசைப்பிள்ளை**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/பெரியபுலம் ம.வி.
பள்ளிக்குழுமம்.

(38372)

# உ வில்லூன்றி புனித தீர்த்தம் ஆடி அமாவாசைப் பெருவிழா

04-08-2005 வியாழக்கிழமை

## தீர்த்தோற்சவம்

காலை 6.45 மணி வசந்த மண்டபப் பூசை
காலை 8 மணி தீர்த்த வாரி
காலை 9 மணி முதல் 10 மணி வரை தீர்த்தக் கட்டடத்தில் அனுக்கிரகம்
காலை 10 மணி சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல்

## பிதிர்க்கடன்கள்

காலை 8.15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்துகொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்மபரிபாலன சபை, வில்லூன்றி தேவஸ்தானம்,
பரிபாலனசபை, வில்லூன்றி புனித தீர்த்தம்.

(38378)(26.14.46)

# கண்ணீர் அஞ்சலி



பண்டிதர்
**சரவணமுத்து சுப்பிரமணியம்**
(முன்னாள் ஆசிரியர்,
ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி,
புத்தூர்)

செந்தமிழும் வடமொழியுஞ் சீரிய நல் லாங்கிலமும்
வந்தனைசெய் கல்லூரியன் னைக்கீதமு மிங்கிதமாய்
தந்துவந்த நல்லாசன் பொன்னுலகம் பயணித்தார்
சிந்தையா லஞ்சலித்தோம் சிவனடியைச் சேவித்தோம்.

எங்கள் கல்லூரியில் 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் சேவையாற்றிய எங்கள் ஆசானின் ஆன்மா சாந்தியடைய ஸ்ரீ சோமஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

சேவையிலுள்ள பழைய மாணவர்கள்,
யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.

(38377) (39.14.46.26)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்
12 - 08 - 1916

விண்ணுலகில்
11 - 08 - 2004

திருமதி
**முத்தம்மா அருணாசலம்**
(பழை, மாவிட்டபுரம்)

அன்பாலே அரவணைத்து அறிவாலே வழிகாட்டி
எமை ஆளாக்கி வாழ வைத்த அன்புத்தெய்வமே!
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
ஆத்ம சாந்திக்காய் என்றும் பிரார்த்திப்போம்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(38370) (39.14.46.26)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# மொழியை அழிப்பதன் மூலம் இனத்தைச் சிதைக்கும் திட்டம்

"ஓர் இனத்தின் வாழ்வு அந்த இனத்தின் மொழியோடு பின்னிப் பிணைந்து கிடக்கிறது. மொழி அழிக்கப்படும் போது இனமும் அழிக்கப்படுகின்றது."

- இவ்வாறு தெளிவுபடுத்துகிறார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான மா.க.ஈழவேந்தன்.

மொழி, ஓர் இனத்தின் வாழ்வோடு பின்னிப்பிணைந்த ஒன்று மட்டுமல்ல, அந்த இனத்தைப் பின்னிப்பிணைத்து ஒரு கலாசார விருட்சத்துக்குள் கட்டிவைத்திருக்கும் தளையும் கூட. அந்தக் கட்டு அறுந்தால் - தளை அறுக்கப்பட்டால் - அது கட்டி வைத்திருந்த இனத்தின் தனித்துவமும் பண்பாட்டு விழுமியங்களும் வாழ்வுப் போக்கும் கூட சின்னா பின்னமாகச் சிதறி அழிந்துபோகும்.

சுருக்கமாகக் கூறுவதானால் இனம் என்ற உடலின் ஆன்மாவாக - உயிராக -விளங்குவது அந்த இனத்தின் மொழிதான்.

இனங்கள் வளர்ந்ததும், நாகரிகங்கள் தோன்றி, பண்பாட்டுப் புரட்சிகள் மலர்ந்ததும், அவற்றின் தனித்துவம் சிறந்ததும் கூட இந்த மொழியென்ற ஊடகத்தின் ஊடாகத்தான்.

மொழி என்று உயிரைச் சிதைப்பதன் மூலம் - அழிப்பதன் மூலம் - உடலாகிய இனத்தை அழித்துவிடுவதே இன அழிப்பு எதிரிகளின் மூலோபாயத் திட்டம். இது குறித்தே எச்சரிக்கை விடுக்கிறார் ஈழவேந்தன் எம்.பி.

யூதர்களின் மொழி ஹீப்ரூ. யூதர்கள் சின்னாபின்னமாக்கப்படுகின்றபோது அந்த மொழியும் மெல்லமெல்ல வழக்கொழிந்து போனதையும், ஏதோ ஒரு மண்ணை ஆக்கிரமித்துத் தமக்கென - தமது இனத்துக்கென - ஒரு தாயகத்தை அவர்கள் உறுதிப்படுத்துகின்றபோது ஹீப்ரூ மொழி மெல்ல மெல்ல மீண்டும் நிலை நிறுத்தப்படுவதையும் நாம் அனுபவத்தில் காண்கிறோம்.

யூதர்கள் பந்தாடப்பட்ட காலத்தில் அவர்கள் ஹீப்ரூ மொழியை மறந்து ஆங்கிலம் மற்றும் பிறமொழிகளின் கலாசார அடையாளத்துக்குள் சிக்க முற்பட்டதையும் -

இப்போது இஸ்ரேல் என்ற ஒரு நாடு தங்களுக்கெனத் தோற்றம் பெற்றதும் அங்குள்ள கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் ஹீப்ரூ நடைமுறை மொழியாக மாற்றப்படுவதையும் நாம் பார்க்கின்றோம்.

இனத்தை அழிக்க முற்படுகின்ற எதிரி அந்த இனத்தின் மொழியை அழிக்க முற்படுகின்றான். இனத்தின் தனித்துவ அடையாளமாக இருக்கும் மொழியைச் சிதைப்பதன் மூலம் இனத்தின் அடிப்படைக் கட்டமைப்பே சிதைக்கப்படுகின்றது. அதுதான் எதிரியின் இலக்கு.

தமிழர் தாயகத்திலும், மலையகத்திலும் இன அழிப்பு நடவடிக்கை மொழிச் சிதைப்பின் மூலம்தான் அரங்கேறுகின்றது.

தமிழ்பேசும் மக்களாகிய முஸ்லிம்கள் இன்று சிங்களம் பேசும் முஸ்லிம்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். மலையகத்திலும் பாடசாலைக் கல்வி சிங்களத்திற்கு மாறும் அவலம் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

தமிழினம் என்ற இனக்கட்டமைப்பு தமிழ்மொழி என்ற அத்திபாரத்திலேயே கட்டப்பட்டு நிமிர்ந்து நிற்கின்றது. மொழியைச் சிதைப்பதன் மூலம் - அழிப்பதன் மூலம் - இன அழிவைப் பெறுவதற்கு நாமே துணை போகலாமா?

இதுதான் தமிழ் மக்கள் இன்று சிந்தித்துப் பார்க்கவேண்டிய முக்கிய கேள்வி.

எதிலும் அந்நிய மோகத்தில் மூழ்கியிருக்கும் நாம் ஆடம்பரப் பொருள்கள் முதல் பேசும் மொழி வரை - இசைக்கும் பாடல் வரை - சகலதிலும் அந்நிய ஆதிக்கத்துக்கு நாமாகவே ஆட்பட்டு அடிமைப்பட்டு வருகிறோம். அதன்மூலம் எமது சுயத்தை - எமது தனித்துவத்தை - எமது சிறப்பை - மெல்லமெல்லத் தொலைத்து நமது இன அழிப்புக்கு நாமே காலாகின்றோம்; வழி செய்கின்றோம்.

தமிழைத் தமிழாக எழுதவும், உச்சரிக்கவும், வாசிக்கவும், பயன்படுத்தவும் பின்நிற்கும் நாம், தமிழ் பேசும் இனத்தை எப்படிக் காப்பாற்றப்போகின்றோம் ? நாம் ஒவ்வொருவரும் நமக்குள் எழுப்பவேண்டிய கேள்வி இது.

அந்நிய ஆதிக்க மோகத்தில் நமது மக்களைச் சிக்க வைப்பதன் மூலம் இன அடையாளத்தைப் பறிகொடுக்கச் செய்யும் குள்ளநரித் திட்டம் தமிழர் தாயகத்தில் எம்மை அறியாமலேயே விரிக்கப்படுகிறது. இந்த வலையில் சிக்காமல் நமது மொழியையும் அதன் மூலம் நமது இனத்தையும் பாதுகாக்கவேண்டிய வரலாற்றுப் பொறுப்பு எமக்கு இருக்கிறது.

சினிமா, வீடியோ - ஓடியோ, ஒலித்தட்டுகள் , இறுவட்டுகள் என்ற அறிவார்ந்த கருவிகள் ஊடாக மொழியின் தனித்துவத்தையும் சிறப்பையும் செயலிழக்கச் செய்து, அந்நிய ஆக்கிரமிப்பை ஊடுருவச் செய்யும் அந்தரங்கத்திட்டம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. தொலைக்காட்சிகள், வானொலிகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவும் இந்த அழிவுச் செயற்பாட்டுக்குத் துணைபோகும் வேதனைப்போக்கும் கூடத் தொடர்கின்றது.

இந்த இனச் சீரழிவுக்கும் இனச்சிதைப்புக்கும் எதிரான திட்டவட்டமான - உறுதியான - செயற்பாட்டு நடவடிக்கைக்ள் இன்று ஈழத்தமிழரின் அதிகார மையமான வன்னி மண்ணிலிருந்து முன்னெடுக்கப்பட்டு, விரிவாக்கப்பட்டு வருகின்றன.

சிங்கள 'ஸ்ரீ' சட்டத்துக்கு எதிரான போராட்டத்தில் இருந்து - இந்த மொழியைக் காக்கும் - நமது இனத்தின் சளையாத செயற்பாடு எமக்கு எதிர்பார்த்த வெற்றியை இதுவரை தரவில்லை என்பது உண்மைதான்.

ஆனால், எமது மொழியை உரியமுறையில் நிலைநிறுத்துவதன் மூலம் அந்நிய மொழியின் ஆதிக்கத்துக்கும் கபளீகரத்துக்கும் இடமளிக்காமல் தனித்துவம் பேணுகின்ற திட்டங்கள் வன்னியிலிருந்து முகிழ்ந்து, இப்போது முறைப்படி முன்னெடுக்கப்படுவதான தகவல் வரவேற்புக்குரியது.

தமிழைத் தமிழாக - செம்மொழியாக - பிரயோகிக்கும், செயற்படுத்தும் திட்டம் விடுதலைப் போராட்டம் என்ற பின்புலத்தில் - பின் பலத்தில் - வெற்றிகரமாக செயலுருப்பெறும், அதன் வாயிலாக எங்கள் உயிருக்கு நேரான தமிழ் மேலும் உயிரூட்டம் பெறும் என்று நம்பலாம்.

# யாழ்.குடாநாட்டில் கால்நடை வளர்ப்போரின் நலன்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

## சங்கங்களை இணைத்து சமாசம் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போரின் நலன்களை மேம்படுத்தவும் நல்லினக் கால்நடை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டும் கால்நடை வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அமைக்கப்படவுள்ளது.

இச்சமாசத்தின் அங்குரார்ப்பண ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பலாலி வீதி, திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.துரைமணி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், தமிழீழ நிர்வாக சேவையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சி.விஜிதரன் ஆகியோர் கலந்துகொள்வர்.சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி, யாழ்.பல்கலைக் கழக விவசாய பீட பீடாதிபதி எஸ்.இராதுரை, யாழ்ப்பாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் பொ.இராமநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.செல்வராசா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் க.சங்கர் ஆகியோர் கலந்துகொள்வர்.

(8-204)

# சிவபூமி பாடசாலை ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை31

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் முதலாவது ஆண்டு நிறைவு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதமவிருந்தினராக பிரிட்டனில் வசிக்கும் சூரியப்பிள்ளை பாலசிங்கம் தம்பதிகளும், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ். தெய்வேந்திரம், லண்டன் தொழில் அதிபர் ம.ஜெயசீலன் தம்பதிகள் ஆகியோரும், கௌரவவிருந்தினராக கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார், வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராஜா, யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் வி.நித்தியானந்தன்,ஹற்றன் நஷனல் வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் இ.கணேசமூர்த்தி ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வில் சிவபூமி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(8-202)

# சமுர்த்தி முத்திரை பெறத் தவறியோரின் விவரங்களைத் திரட்டுமாறு பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை31

சமுர்த்தி முத்திரைபெறத் தகுதி இருந் தும் தவறிய வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களின் விவரங்களை உடன் திரட்டுமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதேச செயலர்களுக்குப் பணிந்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு சமுர்த்தி முத்திரைகள் மாவட்டச்செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி முத்திரை பெறத் தகுதி இருந்தும் தவறிய வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களின் விவரங்களை தத்தம் பிரிவிலுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூலம் திரட்டி மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பிவைக்குமாறும் அவ்வாறு தவறவிடப்பட்டவர்களுக்கான நிவாரண முத்திரைகளை உடன் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

(8-13)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சைகள் அடுத்தமாதம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சைக ளில் பகுதிநேரம்-1, முழுநேரம் என்பன எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்கான புதிய நேர அட்டவணையை பீடாதிபதி அலுவலகம் உயர்பட்டப் படிப்புகள் பீடத்திலும் வவுனியா வளாக வியாபாரக் கற்கைகள் பீட விளம்பரப் பலகையிலும் பார்வையிடலாம் என உயர்பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி க.கந்தசாமி தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைகள் முன்னர் நடைபெற இருந்தது தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(8-204)

## உதயவாக்கு

*அழகுடையது கலை; ஆனால் அழகுமட்டும் கலையல்ல; அழகு படுத்துவதுதான் கலை.*

- கலைவாணர்

## நாளை

ஆடி 16
திங்கட்கிழமை
01.08.2005
திதி: துவாதசி
பின்னிரவு: 03.53 வரை
நட்சத்திரம் : மிருகசீரிடம்
முன்னிரவு : 10.25 வரை
சுபநேரம் : 12.03 - 01.33
ராகுகாலம்:07.33 - 09.03
(யாவும் பழைய நேரப்படி)

## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

# ஆடித் திருக்கார்த்திகை விழாவில் பெரும் எண்ணிக்கையில் பக்தர் பங்கேற்பு

வலி.தெற்கு,ஜூலை31

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆடித் திருக்கார்த்திகை விழாவில் குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெருந்திரளான அடியார்கள் கலந்து கொண்டனர்.

சேந்தான்குளம், தெல்லிப்பழை இராணுவச் சோதனை சாவடிகளூடாக மோட்டார் சைக்கிள், ஆட்டோ, தனியார் பேருந்துகளில் மக்கள் வருகை தந்திருந்தனர்.

வடமராட்சி, தென்மராட்சி, காரைநகர் போன்ற இடங்களில் இருந்தும் அடியார் கூட்டம் பெருமளவில் கலந்து கொண்டனர்.

மாவைக் கந்தனுக்கு ஸ்நபனாபிஷேகம் நடைபெற்று விசேட பூசைகள் நடைபெற்றன. ஆலயத்தின் கிழக்கு, தெற்கு மண்டபங்களில் ஏராளமான பக்தர்கள் மாவிளக்கு தீபம், நெய் தீபங்கள் ஏற்றி தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொண்டனர்.

உருத்திரவீணை, கடம், கஞ்சிரா, மிருதங்கம் போன்ற இசை வல்லுநர்களுடைய திருப்புகழ் அஞ்சலியுடன் சண்முகப் பெருமானுக்கு செந்தாமரை இதழ்களால் சண்முகார்ச்சனை நடைபெற்றது.

மாவைக் கந்தனது சேவைக்காக வருகைதந்துள்ள தமிழ்நாடு சென்னை நங்கநல்லூர் கே.ஆர்.சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கு மாவை ஆதீனகர்தா மஹாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக் குருக்கள் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்தார்.

ஸ்கந்தனுக்கு கந்த திருக்கார்த்திகை என்ற தலைப்பில் விசேட சொற்பொழிவாற்றிய சிவானந்தவாருதி வ.குமாரசாமிக்கு காங்கேயவாகீசர் என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

இணுவில் மகாதேவ சிவாச்சார்ய சோமசுந்தர சர்மா குழுவினரின் உருத்திரவீணை நாதஸ்வர சக்கரவர்த்தி, அளவெட்டி எம்.பி.பாலகிருஷ்ணன் குழுவினருடைய நாதஸ்வராஞ்சலி என்பன விசேட நிகழ்ச்சிகளாக நடைபெற்றன.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'கந்தரனுபூதி பற்றி' சொற்பொழிவாற்றினார்.

ஆடித்திருக் கார்த்திகை விழாவில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் கலந்துகொண்டனர்.

கார்த்திகைக் குமரன் இந்திர மயூரம்மீதமர்ந்து வீதியுலா வந்த காட்சியும் இடம்பெற்றது.

(8-152)

# 15வயதில் இனி அடையாள அட்டை

கொழும்பு,ஜூலை31

தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான வயது 15ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் - ஒழுங்குகள் அமைச்சரும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் சிபாரிசுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இப்போது தேசிய அடையாள அட்டை பெறும் வயது 16 ஆகும்.

பாடசாலை மாணவர்களின் நலன்கருதியே இந்த மாற்றம்கொண்டுவரப்பட்டுள்ளது. ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இப்பொழுது தபாற்கந்தோர்களினால் வழங்கப்படும் அடையாள அட்டைகளையே பெறுகின்றனர். ஆனால், அடுத்த வருடமும் - 16 வயதை அடைந்ததும் - ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற தேசிய அடையாள அட் டைகளைப் பெறவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்படுகின்றது.

ஒரே மாணவன் இரண்டு அடையாள அட்டைகளைப் பெறவேண்டிய நிர்ப்பந்தத்தையும், கால தாமதங்களையும் தவிர்க்கும் வகையிலும் 15வயதை அடைந்த அனைவருக்கும் நேரடியாகவே தேசிய அடையாள அட்டைகளை வழங்கவேண்டும் என அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அமைச்சரவையில் பிரேரணை சமர்ப்பித்தார்.

அமைச்சரின் சிபாரிசு அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பான திருத்தச் சட்டவரைவு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. என அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறினார்.

## கல்விச் செயற்பாடு மீண்டும் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்காக விஞ்ஞான பீட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்று பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார். (202)

## கணபதி ஜோதிட நிலையம்

**பண்டிட் ஐயப்ப சாஸ்திரி**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (38307)(42.14.46.26)

## இளங்கலைஞர் மன்ற மாதாந்த கலை நிகழ்ச்சி

இன்று (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை
மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும்.
இடம்: மன்றக் கலா மண்டபம்
தலைவர்: மகாராணி K. சோமசேகரம் J.P.
பிரதம விருந்தினர்: திரு. S.வெற்றிவேலாயுதம் அவர்கள்
(இயக்குநர், வலம்புரி பத்திரிகை)
நிகழ்ச்சிகள்
மாலை 6 மணி இசைக்கச்சேரி: திரு.குணராஜா நக்கீரன்
சிறந்த பக்கவாத்திய சகிதம் நடைபெறும்.
மாலை 7 மணி இசை நாடகம்: பவளக்கொடி
கலாபூஷணம் **செல்லையா மெற்றாஸ் மயில்** தயாரித்து வழங்குகின்றார்.
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
சட்டநாதர் வீதி, நல்லூர். **மன்றத்தினர்.**
(38343)(26.14.46)

ஓம்
ஸ்ரீராம ஜெயம்
யாழ்ப்பாணம் - வண்ணை
**ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**
**ஏகாதசி உற்சவம்**

**நிகழும் பார்த்திப வருடம் ஆடி மாதம் 15ஆம் நாள் (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.15 மணிக்கு மேற்படி ஆலயத்தில் ஏகாதசி உற்சவம் நடைபெறும்.**
**அடியார்கள் இவ்வுற்சவத்தில் பங்குபற்றி ஸ்ரீமந் நாராயணன் அருள் பெற்று ஸ்ரீமகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.**

**பெருமாள் கோயில்,**
**யாழ்ப்பாணம்.** (சி.44108)(26.14.46) ஆதீன மகா சபை.

## யா/இணுவில் மத்திய கல்லூரி
## பவள விழா - 2005
### அதிபர், ஆசிரியர்கள் கௌரவிப்பு

***இன்று (31-07-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பம்***

**நிகழ்ச்சி நிரல்**

*காலை நிகழ்வுகள்*
**ஆரம்பப் பிரிவு மண்டபம்**

9.00: சிவன் ஆலயத்தில் பூசை வழிபாடு. அதிபர், ஆசிரியர்களை மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்து வருதல்
9.30: மங்கள விளக்கேற்றல்
இறை வணக்கம்
தமிழ்த்தாய் வாழ்த்து
9.45: வரவேற்புரை:
திரு.ந.தவசோதிநாதன்
(செயலாளர், பழைய மாணவர் சங்கம்)
9.50: ஆசியுரை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(நல்லை ஆதீன முதல்வர்)
சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்
(காயத்திரிபீடம் - இணுவில்)
10.10: தலைமையுரை:
திரு.துரைஎங்கரசு
(தலைவர், பவளவிழாச் சபை)
10.15: கௌரவிப்பு நிகழ்வு:
பொன்னாடை போர்த்தல்
நினைவுச் சின்னம் வழங்கல்
கல்லூரி ஆசிரியர்களைக் கௌரவித்தல்
11.30: வாழ்த்துரைகள்:
பேராசிரியர் அ.சண்முகதாஸ்
பேராசிரியர் சபா ஜெயராசா
திருமதி சரோஜினி இளங்கோவன்
(மாவட்ட நீதிபதி, மல்லாகம்)
திரு.கு.சண்முகநாதன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)
கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
(உதவி அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
12.15: ஏற்புரை:
ஓய்வுபெற்றோர் சார்பில்
திரு.செ.சோதிப்பெருமாள்
கல்லூரி சார்பில்
திருமதி ரேணுகா குபேரநாதன்
12.30: நன்றியுரை:
திரு.செ.இலகுநாதன்
(செயலாளர், பவளவிழாச் சபை)

*மாலை நிகழ்வுகள்*
***சரஸ்வதி கலையரங்கம்***

6.00: மங்கள விளக்கேற்றல்
இறைவணக்கம்
6.15: வரவேற்புரை:
திரு.க.சண்முகநாதன்
(பிரதி அதிபர்)
6.30: தலைமையுரை:
திரு.துரைஎங்கரசு (அதிபர்)
6.45: சிறப்புரைகள்:
திரு.க.தேவராசா
பீடாதிபதி, வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
டாக்டர் வை.லோகநாதன்
பிரதம முகாமையாளர், தலைமையகம், இலங்கை வங்கி, கொழும்பு)
கலாநிதி வ.மகேஸ்வரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)
திரு.செ.குபேரநாதன்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவிற்கோட்டம்)

**கலை நிகழ்வுகள்:**
**வாழ்த்துப் பாடல்:**
**குழுப்பாடல்**
சுனாமி -
கொண்டாட்டம்
இசையமுதம்
**English: Group Songs and Action Songs**
நடனம்: தீப நடனம்
தனி நடனம்
கொழுந்து நடனம்
நாடகம்: **"விடிவைத் தேடி"**
பக்திப் பாடல்கள்
நன்றியுரை: திரு.ச.சந்திரகுமார் (செயலாளர்,பா.அ.சங்கம்)

***விழா சிறக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

**பவள விழாச் சபை,**
இணுவில். **யா/ இணுவில் மத்திய கல்லூரி.**
(சி/44107) (24-14-46-26)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை 31

யாழ்ப்பாணம், கோட்டை முனீஸ்வரன் ஆலய மணவாளக்கோல அலங்காரத் திருவிழா கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

25 ஆம் நாள் திருவிழாவாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சங்காபிசேகமும் 12 மணிக்கு விசேட பூசையும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னதானம் நடைபெறும்.

அன்று பிற்பகல் 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து ரத பவனி நடைபெறும். (8-203)

❁ ❁ ❁

மானிப்பாய், புனித அன்னாள் ஆலய வருடாந்தத் திருவிழாவின் நவநாள் ஆராதனைகள் நடைபெற்றுவருகின்றன.

நேற்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் இடம்பெற்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி, திருச்சொரூப ஆசீர் என்பனவற்றுடன் விழா நிறைவடையும். (8-203)

❁ ❁ ❁

அளவெட்டி, வடக்கு ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

திருவிழாக் காலங்களில் இராமாயணம் என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறும். (8-203)

❁ ❁ ❁

பருத்தித்துறை சிவன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பாளுக்கான வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (8-78)

❁ ❁ ❁

யாழ்ப்பாணம்,ஜூலை31

ஆவரங்கால் பர்வதவர்த்தனை அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக்காலங்களில் 7 மணிக்குத் தேவிபராக்கிரமம் என்றதலைப்பில்கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா தொடர் சொற்பொழிவாற்றுவார். (8-203)

### சுவிஸில்

சுவிஸில் அடிஸ்வில் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித்தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவிழா நாள்களில் தினமும் காலை 9 மணி தொடக்கம் ஒரு மணி வரை அபிசேகம், பூஜை, ஆன்மீகச்சிந்தனை, வசந்த மண்டபப் பூசை, சுவாமி வீதியுலா வருதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். மாலை 4 மணிக்கும் பூசை, ஆன்மீக அருளுரை, சுவாமி வீதியுலா வருதல் போன்றன இடம்பெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி மாலை சப்பரத் திருவிழாவும் சனிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக்காலங்களில் சர்வதேச இந்து மத குருபீடாதிபதி அருள்மொழித்திலகம் கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் ஆன்மீக அருளுரை வழங்குவார். (8-203)

## PRESIDENT CFL



பல்புகள் இப்போது
இலகு தவணையில் கிடைக்கும்
- SLS இன் FIVE STAR தரச்சான்று
- DNY Norway யின் Iso9000 சான்று
- 8000 Hours Life time
- President Lighting Singapore நிறுவனத்துடன் சேர்ந்து ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்டது.
- இலங்கை உற்பத்தி ஒரு வருட உத்தரவாதம்.

உங்களது விலாசத்தை உறுதிப்படுத்தும் இறுதிமாத மின்சாரப் பட்டியலுடன் அடையாள அட்டையும் கொண்டு வரவேண்டும். (38346)(26.14.46)

தொடர்பு: **Light Line,**
530, K.K.S. Road, Jaffna. T.P.: 0777 224556.

## உடனடி வேலை வாய்ப்பு

மார்க்பொன் கட்டட அலங்காரப் பொருள்கள் உற்பத்தி நிறுவனத்தில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.

*வேலை பழகும் துடிப்பு மிக்க வாலிபர்களுக்கு -*
*முதல் மூன்று மாதம் வரை சம்பளம் 3000/- ரூபா*
*மூன்றாம் மாதம் முதல் ஆறாம் மாதம் வரை 6000/- ரூபா*
*ஆறாம் மாதம் முதல் பன்னிரண்டாம் மாதம் வரை 7500/- ரூபா*
*ஒரு வருடத்தின் பின்னர் 10,000/- ரூபா*
*முதல் 12,000/- ரூபா வரை சம்பளம் கிடைக்கும்.*
*50 வயதுக்கு மேற்பட்ட மேசன்மார்களும் தேவை.*
*ரூபா 15,000இற்கு மேல் ஊதியம் பெறலாம்.*

நல்ல அனுபவமும் திறமையும் உள்ளவருக்குத் தங்குமிட வசதிசெய்து தரப்படும்.
விரும்புவோர் நேர்முகப் பரீட்சைக்கு
01.08.2005, 02.08.2005
திங்கள், செவ்வாய்
காலை 10 மணிக்கு நேரில் வரவும்.
(38331)(26.14.46)

முகவரி: **மார்க்போன் கட்டட அலங்காரப் பொருள்கள்**
உற்பத்தி நிலையம்,
பழைய நீதிமன்ற வீதி, மல்லாகம்.

## குருநகர் தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள நான்கு கடைகளை விற்பதற்கான
## கேள்வி கோரல்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான குருநகர் தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்திலமைந்துள்ள நான்கு கடைகளை விற்பனை செய்வதற்காக இத்தால் கேள்வி கோரப்படுகின்றது.

ஒவ்வொரு கடையினதும் ஆகக்குறைந்த விலையாக ரூபா இரண்டு லட்சத்து அறுபதினாயிரமாக (260,000) மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆகக்கூடிய விலை கோரும் விண்ணப்பதாரிக்கே கடை வழங்கப்படும். விண்ணப்பதாரியைத் தெரிவுசெய்யும் உரிமை எமது அதிகாரசபையின் விற்பனை விலையை நிர்ணயிக்கும் குழுவிற்கே உரியதாகும். விண்ணப்பங்கள் 12-08-2005 ஆம் திகதி பி.ப. 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அப்போது விண்ணப்பதாரிகள் சமுகமளிக்கலாம். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி முழுத்தொகையையும் ஒரே தடவையில் செலுத்துபவராக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மீளளிக்கப்படும் தொகையாக ரூபா 10,000 பிணைப் பணமாகச் செலுத்தவேண்டும். அதேநேரம் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரி கோரிய விலையைச்செலுத்திக் கடையைப் பெற்றுக்கொள்ளத் தவறுமிடத்து இப்பிணைப்பணம் அவர்களுக்கு மீளளிக்கப்படாதென்பதையும் அறியத்தருகின்றோம். விண்ணப்பதாரிகள் தாம் வாங்கவுள்ள கடையின் இலக்கத்தை விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் அவசியமாகும். இந்த விண்ணப்பத்தினைக் கீழ்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கையளிக்கலாம் . விண்ணப்ப உறையில் இடது மூலையில் '*கேள்விகோரல் விண்ணப்பம்*' எனக் குறிப்பிடல் வேண்டும். இதற்குரிய விண்ணப்பப்பத்திரத்தை எமது மாவட்ட அலுவலகத்தில் பிணைப்பணம் செலுத்திய பின்பு பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை 10-08-2005 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக '*மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்*' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**சு.மாசிலாமணி**, மாவட்ட முகாமையாளர்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம். (சி-44109) (14.46.26)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 - 11 - 1961



உதிர்வு 30 - 07 - 1997

**செல்வி மைதிலி கந்தசாமி**
திதி: 31.07.2005

ஆண்டுகள் எட்டுச் சென்றும்
ஆறவில்லை உன் துயரம்
மீண்டும் நீ வாராயோ என்று
ஏங்குகின்றோம்.

*உன்பிரிவால் வாடும்:*
*அம்மா,*
*சகோதர, சகோதரிகள்.*

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(38306)(26.14.46)


# காற்றாடியின் மூலம் மின் உற்பத்தி முத்தையன்கட்டில் புதிய சாதனை



முத்தையன்கட்டு வலது இரண்டாம் கண்டம் பகுதியில் வசித்த பசுபதி இராதாகிருஷ்ணன் என்பவர் தன்னிடம் உள்ள வளங்களைக் கொண்டு முத்தையன்கட்டுக்குளத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரைப் பயன்படுத்தி காற்றாடி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

கடந்த ஆண்டுமுதல் அவர் இந்த முயற்சியை மேற்கொண்டுவருகின்றார். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் மிகவும் நுட்பமான முறையில் மின்சார உற்பத்தியைப் பெற சாதனங்களைப் பொருத்தி தனது முயற்சியை மேலும் வலுப்படுத்தி வருகின்றார். இந்தக் காற்றாடி மூலமான மின்சார உற்பத்தி மூலம் தற்போது 5கிலோவாற்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இவரது இந்த முயற்சிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி வழங்கியுள்ளது. இவரது இந்த முயற்சியைப் பார்வையிடுவதற்காக தென்னிலங்கையிலிருந்தும் பலர் வந்து செல்கின்றனர். தனது இந்த முயற்சி தொடர்பாக அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வி இது:-




குளத்திலிருந்து வெளியேறும் நீரின் மூலம் காற்றாடி சுழல வைக்கப்பட்டபோது....

✱ கேள்வி:- உங்களைப்பற்றி....

• பதில்:- எனது பெயர் பசுபதி இராதாகிருஷ்ணன். வயது -40. சொந்த இடம் நெடுந்தீவு. இப்போது முத்தையன்கட்டில் வசித்து வருகின்றேன். எனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

மின் உற்பத்திக்குப் பயன்படுத்தும் டைனமோ



✱ கேள்வி:- இந்த முயற்சியில் உங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

• பதில்:- எனக்கு பொதுவாகத் தொழில்நுட்ப வேலைகளைச் செய்யக்கூடிய வல்லமை உண்டு. எந்தவொரு வேலையைச் செய்தாலும் அதனை ஆர்வத்தோடும் வல்லமையோடும் செய்து அதில் வெற்றிகண்டு விடுவேன்.

முன்னர் போரினால் பொருளாதாரத் தடை ஏற்பட்ட காலத்தில் பயிர்ச் செய்கையினை மேற்கொண்டபோது எரிபொருள் விலையேற்றம் ஏற்பட்டது. இதனால், நீரிறைக்க முடியாத நிலை. அத்துடன், உப உணவுப் பொருள்களையும் சந்தைப்படுத்த முடியாமல் இருந்தது. அவ்வாறான நிலையில் நீர்ப்பம்பி ஒன்றைக் கழற்றி அதில் இருக்கும் பிஸ்ரனை அகற்றிவிட்டுச் சக்கரம் ஒன்றைப் பொருத்தி அதன் மூலம் நீர்ப் பம்பியை இயக்கி 500 கன்று நிலத்தில் உள்ள பயிருக்கு 45 நிமிடத்தில் நீர் பாய்ச்சினேன். அத்துடன், முத்தையன் கட்டுக்குளத்தில் மீன்பிடிப்பதற்குப் படகு ஒன்றினையும் பிளாஸ்ரிக் மூலம் செய்து கொடுத்துள்ளேன்.

இப்படிப்பல முயற்சிகளைச் செய்திருக்கிறேன். ஆயினும், இந்தக் காற்றாடி மூலமான மின் உற்பத்தி எனக்குச் சிறந்த பலனை அளித்துள்ளது.


## ஒரு தனிமனிதனின் விடா முயற்சி சமூகத்துக்குப் பயனளிக்கின்றது

✱ கேள்வி:- இந்தத் திட்டங்களை யாராவது சொல்லித் தந்தார்களா? அல்லது நீங்களாகவே ஆரம்பித்தீர்களா?

• பதில்:- எனது மூளையையும் இங்குள்ள வளங்களையும் பயன்படுத்தித்தான் நான் இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன். நீண்டகாலமாக நான் இந்த மின்சார உற்பத்தியில் ஈடுபட்டுவருகின்றேன். இப்போது அருகில் உள்ள பிள்ளையார் ஆலயத்துக்கு மின் வழங்கிய படியால்தான் இது வெளியில் தெரியவேண்டி ஏற்பட்டது. ஆரம்பத்தில் 18 மின்குமிழ்கள் எரியக்கூடிய மின்சாரத்தை டைனமோ மூலம் உற்பத்திசெய்தேன். தற்போது 3 கிலோவாற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்து அருகில் உள்ள வீடுகளுக்கு மின் விநியோகம் வழங்குகின்றேன். தற்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒரு லட்சம் ரூபா பணத்தை வழங்கியுள்ளது. அத்துடன், ஒரு துவிச்சக்கரவண்டியையும் அவர்கள் தந்துள்ளனர்.

**செவ்வி:**
**இ.தனபாலசிங்கம்**

மின் உற்பத்தியாகும் இடத்தில் முயற்சியாளர்



✱ கேள்வி:- தற்போது மின் விநியோகத்தை எவ்வாறு மேற்கொள்கிறீர்கள்?

• பதில்:- மின் விநியோகத்தை மேற்கொள்வதற்குப் போதிய கம்பிகள் இல்லை. இதனால், தற்போது 5 கிலோவாற்ஸ் மின்சாரத்தை உற்பத்திசெய்யக்கூடிய நிலை இருந்தும் அதற்கான விநியோகத்தை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.

தற்போது எனக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் 35கிலோ கம்பிகளைத் தந்துள்ளனர்.

மின் விநியோகத்துக்கான கம்பங்களாக பச்சை முள்முருக்குத் தடிகளைத்தான் நாட்டியுள்ளேன். அவை முளைத்துத் தளைத்ததும் அவற்றை வெட்டி அகற்றி விடுவேன். இதனால் கம்பங்களை அடிக்கடி மாற்ற வேண்டிய தேவையில்லை.

✱ கேள்வி:- இத்தனைக்கும் உங்களுக்கு பணச்செலவு ஏற்பட்டதா?

• பதில்:- ஆம் இவ்வளவிற்கும் எனது சொந்தச் செலவுவாக 45ஆயிரம் ரூபா ஏற்பட்டது. இப்போது மேலும் 75ஆயிரம் ரூபாவுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்துள்ளேன். அதன்மூலம் எனது முயற்சியை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்து வருகின்றேன்.

✱ கேள்வி:- உங்களுடைய திட்டத்தை மேலும் விஸ்தரிக்க எண்ணியுள்ளீர்களா?

• பதில்:- நான் ஒரு தனிமனிதன். முத்தையன்கட்டு ஒரு பரந்த பிரதேசம். ஒரு குறுகிய இடமாக இருந்தால் எனது இந்தத் திட்டத்தின் மூலம் பெரும் வருவாய் கிடைக்கும். ஒவ்வொரு வீட்டிற்கும் மின்னிணைப்பை ஏற்படுத்துவதென்றால் சுமார் 300 மீற்றர் கம்பி தேவைப்படும். இங்கு தூரம் தூரமாக வீடுகள் அமைந்துள்ளன.

முதன் முதலில் பொருத்தப்பட்ட காற்றாடியுடன் இராதாகிருஷ்ணன்



✱ கேள்வி:- உங்களது இந்த முயற்சிக்கு யாராவது உதவ வேண்டும் என்று விரும்புகிறீர்களா?

• பதில்:- நான் ஓர் பொழுதுபோக்காக ஆரம்பித்த இந்த முயற்சி சிறிது சிறிதாக வளர்ந்து இப்போது ஒரு பெரிய கட்டத்தை அடைந்துள்ளது. இப்போது 30 கிலோவாற்ஸ் மின்சாரத்தை உற்பத்திசெய்யக்கூடிய நிலை என்னிடம் உள்ளது. எனவே, இந்த முயற்சியை ஒரு நிறுவனம் பொறுப்பேற்று அதனை ஒரு நிர்வாகக் கட்டமைப்பின் கீழ்க் கொண்டுவந்து, ஒழுங்காக இயங்கவைப்பதன் மூலம் இப்பிரதேசத்தில் உள்ள மக்கள் அனைவரும் பயனடையமுடியும். நான் ஆரம்பித்த இந்த முயற்சியைப் பலப்படுத்திப் பேணவேண்டும் என்பதே எனது முக்கிய நோக்கம். இதன் மூலம் நான் முன்னேற விரும்பவில்லை. என்னை ஊக்குவிப்பது அல்லது எனக்கு உதவிசெய்வதைவிட இதனைப் பலப்படுத்தி மக்களுக்குப் பயனுள்ளதாக மாற்றுவதே முக்கியம். இத்திட்டத்திற்கென குளத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரை நான் முழுமையாகப் பாவிக்கவில்லை. மூன்றில் ஒரு பங்கு நீர் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. முழுமையாக நீரைப் பாவிப்பதானால் மின்வழங்கல் விஸ்தரிப்புச் செய்யப்படவேண் டும். அதற்கு வேண்டிய பொருளாதார வளம் என்னிடம் இல்லை.

✱ கேள்வி:- இந்த மின் விநியோகம் துண்டிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளதா?

• பதில்:- இல்லை. எந்தக் காலத்திலும் நா வந்துகொண்டே இருக்கும் நீர்வீழ்ச்சி தொடர்ந்து நடைபெற்றால் மின்துண்டிப்பு இடம்பெறாது.

## இயந்திர மூலம் குழாய்க்கிணறு அமைத்தல்

இயந்திர மூலம் 6" விட்டமான குழாய்க்கிணறு 3 மணித்தியாலத்தில் அமைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**ந. பாலகிருஷ்ணன்**
கலைவாணி மில் ஒழுங்கை
(Farm School Lane),
கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.
T.P:- 0777290266, 0777512943

(36937) (54-


## குடித்தொகை கற்கைநெறி மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிகளான குடித்தொகை அபிவிருத்தி கற்கை நெறி மற்றும் பொதுநிர்வாகக் கற்கை நெறி என்பன வழமையான நேர அட்டவணைப்படி நடை பெறும் என உயர் பட்டப்படிப்புகள் பதில் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

இக்கற்கை நெறிகள் தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு வகுப்புகள் நடைபெறாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-204)


## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள சிறிய யாழ்.தமிழ்க் குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பெண் உதவியாளர் தேவை. 18-45 வயதிற்குட்பட்ட, குடும்பப் பொறுப்புகள் அற்ற, தேக ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (C/44350)

தொடர்பு: 0777 330559 (21-14-19-42)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீட, இராமநாதன் நுண்கலைக்கழக பரீட்சைகள் - 2005

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக் கழக மாணவர்களுக்கான கீழ்வரும் பரீட்சைகள் பின்வரும் ஒழுங்கில் ஆரம்பமாகின்றன.

1. முதலாம் வருட முதலாம் அரையாண்டு - கலை 15.08.2005
2. மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு - கலை 25.08.2005
3. நான்காம் வருட முதலாம் அரையாண்டு - கலை 05.09.2005
4. இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு - கலை 12.09.2005
5. மீள்பரீட்சைகள் (பழையபாடத்திட்டம் மற்றும் அரையாண்டு) - கலை மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழகம் 22.08.2005ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகின்றன.

- பதிவாளர்.

(ச-44121)(42-14-19) 29.07.2005



இலங்கை - சாவகச்சேரி

## அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

### மகோற்சவ விழா விஞ்ஞாபனம் - 2005

அம்பிகை அடியார்களே!

சாவகச்சேரி அன்னை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவியின் வருடாந்த மகோற்சவம் நிகழும் பார்த்திப வருஷம் ஆடி மாதம் 11 ஆம் நாள் (26.07.2005) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பத்து நாள்கள் திருவிழா நடைபெற எல்லாம் வல்ல அம்பிகையின் திருவருள் கை கூடியுள்ளது. திருவிழாச் சிறப்பாக நடைபெற உபயகாரர்கள், அடியார்கள் ஒத்துழைப்பு நல்கவும்.

கொடியேற்றம் ஆடி 11ஆம் நாள் 26.07.2005
செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி

தேர்த்திருவிழா ஆடி 19ஆம் நாள் 03.08.2005
புதன்கிழமை காலை 10.30 மணி

தீர்த்தத் திருவிழா ஆடி 20ஆம் நாள் 04.08.2005
வியாழக்கிழமை காலை 9.30 மணி
(ஆடி அமாவாசை தினத்தன்று)

பூங்காவனம் ஆடி 21ஆம் நாள் 05.08.2005
வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணி

குறிப்பு:
விழாக்கள் யாவும் புதிய நேரப்படி நடைபெறும். அடியார்கள் இயன்றவரை பூமாலை, பூக்கள், பலாப்பழம், பால், தயிர், இளநீர்,பழவகை கொடுத்து உதவி புரியவும்.

அனைவரும் வருக! அன்னையருள் பெறுக!

தாழையம்பதி வீதி,
சாவகச்சேரி.

- ஆலய தர்மகர்த்தா.

(38052)(42.14.19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 - 01 - 1931

மறைவு 11 - 08 - 2004

### நடராசா இரத்தினேஸ்வரி

ஓராண்டு ஆனபின்னும் ஓயாத
உம் நினைவும்...
உண்ணுகிறோம்! உறங்குகிறோம்
விண்ணதை விழித்துக் கொண்டு
நோக்குகின்றோம் - மீண்டும்
நீர் வருவீரென......!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

க.நடராசா (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(38354)(42-14-19)


# Study in India

இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு

A/L சித்தியடைந்த மாணவர்களும், 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

- Garden City College Affiliated to Bangalore University
- SSM College of Engineering affiliated to Anna Engineering University
- Muthayammal Art and Science College affiliated to Periyar University
- Bishop Heber College affiliated to Bharathidasan University

**Courses**

• B.E. Information Technology, • B.E. Computer Science and Engineering, • B.E. Electronics and Communication Engineering, • B.E. Mechanical Engineering, • B.Sc. Information Technology, • B.Sc. Computer Technology, • B.Sc. Apparel and Fashion Technology, • M.S.C. Information Technology • B.Sc. (Computer Science), • B.Sc. (Fashion & Apparel Design), • B.Sc. (Microbiology), • B.Sc. (Genetics), • B.Sc. (Biotechnology), • BCA. (Bachelor of Computer Applicants), • BBM. (Bachelor of Business Management), • BHM. (Bachelor of Hotel Management), • B.A. (Journalism), • B.Com (Computers) • B.Sc. Maths, • B.Sc. Phys • B.Sc. Electronics • B.Sc. Chemistry • B.Sc. Computer Science

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical Collegeல் சேர்ந்து 3 வருட Diplomaவை பூர்த்திசெய்து, மேலும் 3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்விபயில்கின்றனர்.

- ஆண்கள் - பெண்களிற்கு தனியான விடுதி வசதிகள்
- Student Visa எமது நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும்
- கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்

2005ல் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் Pending Results உடன் இவ்வருடமே கல்லூரிகளில் சேர்ந்து பாடநெறிகளை தொடர முடியும். இதனால் மாணவர்கள் ஒரு வருடத்தை சேமிக்க முடியும்

அனேகமான கல்லூரிகள் யூலைமாதம் இரண்டாம் கிழமை தமது பாடநெறிகளை தொடக்கவிருப்பதால், உடனடியாக தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**MBBS** இலங்கை Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட Crimea Medical Institute - University (Ukraine) இல் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படுகின்றது - A/L, O/L சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு Call 0777 - 767818 / (011) 4512591

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo-06.

SKAds&Prints


**solidar** ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. Swiss Labour Assistance SAH Norwegian People's Aid

The Solidar Group - ASB (Arbeiter Samariter Bund), NPA (Norwegian People's Aid) and SAH (Swiss Labour Assistance) - is now recruiting experienced and qualified engineers for Phase III Reconstruction activity in the tsunami affected district of Jaffna (Vadamarachchi East). Solidar is committed to building more than 1,000 permanent homes and a range of associated community infrastructure, including fishing communities, playgrounds, preschools, community centres, water & sanitation and road building. Based in Kilinochchi, Solidar is now recruiting the following positions:

## Project Engineers

Experienced Project Engineers are required to manage and implement housing and community construction projects in coordination with Senior Engineers and Building Site Managers. Vacancies currently exist for qualified personnel in the following areas:

- Housing Construction
- Road Construction
- Construction of Public Buildings
- Water & Sanitation

Successful candidates should have at least 3 years working experience, be familiar with the area of implementation, be fluent in English and Tamil and have experience with standard computer software. Women are encouraged to apply.

The positions will be based in Kilinochchi.

Interested candidates should submit a CV and Cover Letter by email to: stevedurrant2003@yahoo.co.uk. Please indicate the position you apply for in the subject line.

Alternatively, submissions may be sent by mail to:

**Mr. Florian Meyer**
Programme Manager Construction
ASB/SOLIDAR Office
156, Jaffna Road
Paranthan, Kilinochchi

Deadline for applications is August 10th. Only shortlisted candidates will be contacted.

(C/44119)(42)

# தபால் மூல ஆங்கில பாடநெறிகள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கின்றோம்

*Free* அழகிய கைக்கடிகாரம் மற்றும் அழகிய கிளியர் பேக் பைல் *Free*

ஒன்றும் இலவசம் முந்திக்கொள்ளுங்கள்

விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறவும்

**UNION EDUCATIONAL INSTITUTE**

P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 077-3123523

**NIIT** ஆசியாவின் முதல்தர கணனி நிறுவனம் வழங்கும் விசேட அதிரடிச்சலுகை

## குறைந்த கட்டணத்துடன் சர்வதேச தரச் சான்றிதழ்!

**Microsoft Office XP** (Duration : 40 Hours)

Aug 14 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

~~Rs. 7340/=~~ Rs. 4000/= (2 தவணைக் கட்டணங்களில்)

இச்சலுகை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே.

விபரங்களுக்கு :-

NIIT 347 2/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P - 021 2227250

## விமானம் மற்றும் கப்பல் மூலம்

உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ, பெரியதோ, எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 20 % விசேடசலுகை

லண்டனுக்கான 5 Kg பொதிக்கு 1 Kg க்கான கட்டணம் 500/=

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 22 2027
Fax - 021 226 2993



"**Past papers** என்னை வலுவூட்டியது.
**Tuition** என்னை நம்பிக்கையூட்டியது.
**Revision Classes** என்னைத் திறமையாக்கியது.
ஆனால் **NIIT** மட்டுமே நான் விரும்பிய
**வேலை**க்கு என்னைத் தகுதியாக்கியது".

"A/L ற்கு பின் NIIT இல் இருவருட DNIIT Programme ஐ கற்றதன் விளைவாக அரபு நாடு ஒன்றின் முன்னணிக் கம்பனியில் Senior Programmer ஆக பணியாற்றுவதையிட்டு மகிழ்கின்றேன்". - T.Vijay

northumbria UNIVERSITY

## Final Year

B.Sc. Honors Degree in Applied Computing (9 Months in UK)

↑

DNIIT

Professional Diploma in Information Technology (2 Years in Sri Lanka)

Northumbria University (UK) இல் B.Sc (Honors) Degree ஐப் பெற்றுக்கொள்ள மிகச்சிறந்த சரியான வழி!

# NIIT

347 - 2/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P : 021 2227250

| Diploma Courses | Durations |
|---|---|
| Base Diploma in Computer Applications (BCA) | 5 Months |
| Certificate in Information Technology (CIT) | 6 Months |
| Honours Diploma in Information Technology (HIT) | 1 Year |
| Professional Diploma in Information Technology(DNIIT) | 2 Years |
| **Advance Technology Courses** | **Durations** |
| MCSE Windows Server 2003 Platform | 9 Months |
| MCSD on.Net Technologies | 8 Months |
| VB.Net | 48 Hrs |
| ASP.Net | 48 Hrs |
| Java Programming | 72 Hrs |
| Enterprise Java Programming | 72 Hrs |
| XML | 32 Hrs |
| Microsoft SQL Server 2000 | 96 Hrs |
| **Certificate Courses** | **Durations** |
| Certificate in Web Designing | 56 Hrs |
| Certificate in Microsoft Office XP | 40 Hrs |

GLOBAL LEADERS IN IT EDUCATION AND TRAINING

NIIT Branches: ● Union Place 011-4720790 ● Nugegoda 011-4408770 ● Bambalapitiya 011-4519111 ● Kandy 081-4470900 ● Kurunegala 037-4691000 ● Gampaha 033-4673222 ● Trincomalee 026-2227767 ● Jaffna 021-2227250 ● Thissamaharama 047-4328930 ● Rukmalgama 0114-304238

**NIIT** Trusted by more than 2.5 million IT students worldwide.

# அணு ஆயுதத்திட்டத்தைக் கைவிட வடகொரியா தயாராகி விட்டது

### உலக வலம்
பேனா

வடகொரியாவின் அணு ஆயுதம் தயாரிக்கும் திட்டத்தைக் கைவிட அந்த நாடு தயாராகிவிட்டதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

அதேவேளை, வடகொரியாவின் தேசிய இறைமையை அங்கீகரிக்க அமெரிக்கா தயாராய் இருப்பதாவும் செய்தி வந்துள்ளன.

இந்தவிதமான புதிய திருப்பங்களால் கொரிய குடாநாட்டுப் பிரதேசம் அணு ஆயுத மற்ற பகுதியாகப் பரிணமிப்பதற்கு வழி ஏற்படுமென்ற நம்பிக்கை பிறக்கத் தொடங்கியுள்ளது.




*வியன்ரியானில் இடம்பெற்ற ஆஸியன் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம்*



*வடகொரியாவின் அணு ஆயுதத்திட்டம் பற்றிய பிஜிங் மாநாட்டில் கலந்துகொண்ட 6 நாடுகளின் பிரதிநிதிகள்.*

## பீஜிங் 6 தரப்பு மாநாட்டிலிருந்து கிடைக்கும் தகவல்கள்

வடகொரியாவின் அணு ஆயுத உற்பத்தி முயற்சியைத் தடுப்பதற்கான ஆறு நாடுகளின் மாநாடு கடந்த செவ்வாயன்று சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் ஆரம்பமாகியது.

வடகொரிய - தென்கொரியா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

கடந்த திங்கட்கிழமை வடகொரியாவுடன் அமெரிக்கப் பிரதிநிதிகள் ஒருவருக்கொருவர் என்றவகையில் மிக அரியதானதொரு சந்திப்பை நடத்தினார்கள். இந்தச் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும் இம்மாதிரிச் சந்திப்புகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் கூறப்பட்டது.

## அதன் இறைமையை அமெரிக்கா அங்கீகரிக்கும்!

பேச்சுகள் முன் நடைபெற்றதைப் போலன்றி மிக சுமுகமாக நட்புமுறையில் நடைபெறுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

வடகொரியாவை ஓர் இறைமையுள்ள நாடாக அங்கீகரிப்பதாக அமெரிக்கா கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தது. அதுமட்டுமன்றி, வடகொரியா முழுமையாகவும் உறுதிப்படுத்தக்கூடியதாகவும் அணு ஆயுதங்களைக் களையுமானால் அதன் பாதுகாப்பு விடயத்தையும் ஆலோசனைக்கு எடுக்கத் தயாராய் இருப்பதாக அமெரிக்கா அறிவித்தது.

பேச்சுகளில் கலந்துகொள்ளும் அமெரிக்கப் பிரதிநிதிகளின் தலைவர் கிறிஸ்டோபர் ஹில் கருத்து வெளியிடுகையில், கொரிய மக்கள் குடியரசு (DPRK) என்பதை ஒரு யதார்த்தமான அம்சம் என்றவகையில் நாம் நோக்குகின்றோம். இந்தப் பேச்சுகளில் அவர்களுடன் இரு தரப்பு மட்டத்தில் பேசவும் விரும்புகின்றோம் என்று ஹில் கூறினார்.

அணு ஆயுதங்களை வைத்திருப்பதன் மூலம் வடகொரியா எதையும் பெற்றுக் கொள்ளப்போவதில்லை. வடகொரியாவைத் தாக்கும் எண்ணம் ஏதும் அமெரிக்காவுக்குக் கிடையாது - என்றார் ஹில்.

அணு ஆயுதத் திட்டத்தை முற்றுமுழுதாக - நிரந்தரமாக - உறுதிப்படுத்தக்கூடிய முறையில் கைவிடுமானால் எமது நாடு முதற்கொண்டு ஏனைய தரப்பு நாடுகளும் சொல்லுக்குச் சொல், செயலுக்குச் செயல் என்ற வகையில் நடந்துகொள்ளத் தயாராய் இருக்கின்றோம் என்று அவர் மேலும் கூறினார்.

அமெரிக்கா வடகொரியாவை இறைமையுள்ள நாடாக அங்கீகரிக்கவேண்டும் - ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஆக்கிரமிப்புச் செய்வதில்லை என்ற உத்தரவாதமும் தரவேண்டும் என்று வடகொரியா வற்புறுத்தி வந்துள்ளது.

முன்னதாகத் தென்கொரியப் பிரதி வெளிநாட்டமைச்சர் சொங் மின் - சூன் கருத்து வெளியிடுகையில் வடகொரியா தனது அணு ஆயுத ஆசையைக் கைவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டதுடன் வடகொரியாவுடனான உறவுகளை இயல்பாக்கிக் கொள்ளும்படி அமெரிக்காவையும் கேட்டுக் கொண்டார்.

அணு ஆயுதத் திட்டத்தைக் கைவிட்டு கொரியக் குடாப் பிரதேசத்தை அணு ஆயுத சூனியப்பிரதேசமாக உறுதிப்படுத்தத் தயாராய் இருக்கிறோம். இதைச் சாத்தியமாக்குவதற்கு மாநாட்டில் ஸ்திரமான முடிவுகள் எடுக்கப்படவேண்டும் என்று கூறியுள்ள வடகொரியப் பிரதிநிதி நாங்கள் அதற்கு முற்றிலும் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

பீஜிங்கில் ஆறு நாடுகள் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்ட அதேவேளை - தென்கொரியாவிலிருந்து ஆயிரத்து 500 தொன் அரிசியை ஏற்றிய 60 வாகனங்கள் வடகொரிய எல்லையைக் கடந்துபோய்க்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

6 நாடுகள் பேச்சு வெற்றியாக முடியுமெனில், கொரியப் பிரதேசம் அணு ஆயுத அச்சுறுத்தலில் இருந்து விடுபடுவது ஒருபுறமிருக்க, வறுமையில் வாடும் வடகொரியப் பொதுமக்களும் விமோசனம் பெறுவார்கள் என்று நம்பப்படுகின்றது.

***

# வெளியேற்றப்படுவதை எதிர்த்து காஸா வாசிகள் போராட்டம்

### *வெளியேற மறுத்து யூதர்கள் போராட்டம்*

காஸாப் பகுதியிலிருந்து 21 இஸ்ரேலியக் குடியிருப்புகளை வாபஸ் பெறுவதற்கான பிரதமர் ஏரியல் ஷெரோனின் திட்டத்திற்கு எதிர்ப்பு வலுத்துவருகின்றது.

காஸாப் பகுதியில் இருந்து ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் வெளியேற்றப்படவிருக்கும் குடியிருப்புகளுடன் மேற்குக் கரையிலிருந்தும் நான்கு குடியிருப்புகள் அகற்றப்படவிருக்கின்றன. இப்பகுதியில் குடியேறியிருப்பவர்கள் பெரும்பாலும் ரஷ்யாவில் பிறந்தவர்கள். மதசார்பற்ற இஸ்ரேலியக் குடும்பங்கள். இந்த நான்கு குடியிருப்புகளில் மேற்குக்கரைப் பள்ளத்தாக்குப் பிரதேசம் விலிலியத்தில் குறிப்பிடப்படும் பகுதியென்றும், இங்குதான் ஜோசெப் என்ற புராதன புருஷரை அவருடைய சகோதரர்கள் அடிமையாக விற்றார்கள் என்றும் கூறப்படுகின்றதாம். இந்தப் பகுதியிலுள்ள சானுர் மற்றும் ஹோமேஷ் ஆகிய இரண்டு குடியிருப்புகளிலிருந்து இஸ்ரேலிய அதிகாரிகள் கடும் எதிர்ப்பை எதிர்நோக்குவார்கள் என்று கருதப்படுகின்றது.

என்றாலும், இப்பகுதிகளில் ஆரம்ப காலம்முதல் குடியேறியிருந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளியேற்றப்படுவதைத் தயக்கத்துடன் ஏற்றுக்கொள்கிறார்கள். வேறு குடியிருப்புகளையும் தேடிச்செல்கிறார்கள். அதேசமயம் மேற்குக்கரையில் குடியேறியுள்ள மிக தீவிரவாதப் போக்குடைய இஸ்ரேலியர்கள் நூற்றுக்கணக்கில் சானுர், ஹேமேஷ் பகுதிகளுக்குள் வந்து குவிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த இரு பகுதிகளையும் இஸ்ரேலியர் விட்டுவிலகக் கூடாது. அவைகளைக் காப்பாற்றுவதற்குக் கடுமையாகப் போராடவேண்டும் என்று கருதுகிறார்கள் அவர்கள்.

இஸ்ரேலின் மண் யூதர்களுக்குரியது. அது தமது தாயகம். அராபியர்கள் வேறு எங்காவது போய் தமது தாயகத்தை அமைத்துக்கொள்ளட்டும் என்று ஆறு பிள்ளைகளின் தாயாரான (28 வயது) மரியாம் அட்லர் என்ற பெண்மணி கூறினார்.

மேற்குக் கரையிலும் காஸாப் பகுதியிலும் 240 ஆயிரம் இஸ்ரேலியர்கள் பலவந்தமாகக் குடியேறியிருக்கிறார்கள். 1967ஆம் ஆண்டு மத்திய கிழக்குப் போரின்போது இந்தப் பகுதியை இஸ்ரேலியர் கைப்பற்றினார்கள். இந்தப் பிரதேசம் 30 லட்சத்து 60 ஆயிரம் பலஸ்தீனர்களின் தாயகமாகக் கருதப்படுகின்றது. இப்பிரதேசத்தில் இஸ்ரேலிய சுதந்திரமான பலஸ்தீனியர் நாடு ஒன்றை ஸ்தாபிக்கப் போராடி வருகிறார்கள்.

சானுர் பகுதி கலைஞர்களின் குடியிருப்பு என்று கருதப்படுகின்றது. பெரும்பாலானவர்கள் குடியிருப்புகளைவிட்டு வெளியேறிவிட்டார்கள். ஹோமேஷ் பகுதியிலிருந்தும் கால்வாசிப்போர் வீடுகளைவிட்டு ஓடிவிட்டார்கள். இவர்களில் அநேகரை வீதிகளிலும் வேறு இடங்களிலும் பலஸ்தீன தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றுவிட்டார்கள். பலஸ்தீனியரின் ஐந்து ஆண்டுகால எழுச்சிப் போராட்டத்தின்போது இவ்வளவும் நடந்துமுடிந்தது.

இப்பொழுது இப்பகுதிக்குள் புகுந்துள்ள யூதர்கள் அதிதீவிரக் கருத்துகளைக் கொண்ட யூதர்கள் என்று கூறப்படுகின்றது. இவர்கள் மலைஉச்சி இளைஞர்கள் என்று அழைக்கப்படுவர்கள். இவர்கள் பலஸ்தீன விவசாயிகளைத் தாக்குவது அவர்களின் ஒவில் மரங்களை வேரோடு சாய்ப்பது, கால்நடைகளுக்கு நஞ்சூட்டுவது போன்ற அட்டூழியங்களில் ஈடுபடுவார்களாம். சானுர், ஹோமேஷ் பகுதிகளைக் காப்பாற்றுவதற்காகப் போராடுவது ஒரு சமயக் கடமை என்று இவர்கள் கருதுகிறார்கள்.

இந்தப் பகுதியை இழந்தால் இஸ்ரேலியரின் இதயப் பகுதியான மேற்குக் கரையை இழந்ததற்குச் சமமாகும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு முனையும் இஸ்ரேலிய இராணுவத்துக்கு எதிராகத் தாய்மார்களையும் சிறுவர்களையும் கொண்ட எதிர்ப்புப் படையை இவர்கள் தயார் செய்துள்ளார்கள்

### *'ரோட் மாப்' அமுலாகும்*

ஓகஸ்ட் மாத மத்தியில் காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலியக் குடியிருப்புகள் வெளியேற்றப்பட்டதும் 'றோட் மாப்' என்றழைக்கப்படும் அமைதித் திட்டம் செயற்படுத்தப்படும் என்று இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் கூறியிருக்கிறார்.

இஸ்ரேலிய குடியேற்றங்கள் அப்புறப்படுத்தப்படாவிடின் பலஸ்தீனியர் தாங்கள் செய்ய வேண்டியதைச் செய்வார்களானால் 'றோட் மாப்'அமைதித் திட்டம் செயற்படுத்தப்படும்.

பாரிஸில் பிரெஞ்சு அதிபர் ஜெக்ஸ் ஷிசாக்குடன் நடத்திய ஒரு சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுடன் பேசுகையில் ஷெரோன் இதைத் தெரிவித்தார்.

'றோட் மாப்' என்ற அமைதித் திட்டம் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா மற்றும் ஐ.நாவினால் முன்வைக்கப்பட்ட சர்வதேச திட்டமாகும். 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நிகழ்த்திய ஓர் உரையின் அடிப்படையில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. அந்த உரையில் சுதந்திரமான பலஸ்தீன நாடு ஒன்று உருவாவதையும் இஸ்ரேலுடன் அமைதியுடன் இணைந்து வாழ்வதையும் புஷ் வரவேற்றிருந்தார்.

### *மியான்மாரின் பின்வாங்கல்*

தென்கிழக்காசிய நாடுகள் (ஆஸியன்) சங்கத்தின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்வதைத் தள்ளிப்போடுவதற்கு மியான்மார் (பர்மா) ஒப்புக்கொண்டிருப்பது ஜனநாயக நாடுகள் பலவற்றுக்கும் ஆறுதல் அளித்துள்ளது. குறிப்பாக, ஐரோப்பிய யூனியனும் அமெரிக்காவும் மியான்மாரின் இந்த முடிவை மகிழ்வுடன் வரவேற்றுள்ளன.

(13ஆம் பக்கம் பார்க்க)

# உடனடித் தேர்தல்தான் மீட்சிக்கு ஒரே வழியா?



**மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராசா முப்பது வருடங்கள் நாடாளுமன்றத்தில் பணியாற்றியவர். ஆறு சபாநாயகர்களின் கீழ் அவர் கடமை புரிந்தார்.**

**சிரேஷ்ட அறிக்கையாளரான அவர் தமது நாடாளுமன்ற சேவை அனுபவத்தைக் கொண்டு, கொழும்பு அரசியலின் இன்றைய நிலையை அலசி ஆராய்கிறார்.**

**அவரது அனுபவத்தில் எழுந்த அரசியல் பார்வையைப் படியுங்கள்.**

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை இல்லாத இன்றைய அரசு எந்த நேரத்திலும் கவிழ்ந்துவிடவே அதிக வாய்ப்புக்கள் உள்ளன. எதிர்வரும் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்படக்கூடிய வரவு - செலவுத்திட்ட மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறும் என்பது நடக்கக்கூடிய ஒரு விடயம் அல்ல. நிதி மசோதாவொன்று நாடாளுமன்றத்தில் தோல்வியைத் தழுவுமிடத்து நாடாளுமன்றம் உடனடியாகக் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் ஒன்றுக்குச் செல்வது சட்டத்தின் தேவையாகும்.

**1960 இல் சிறுபான்மை அரசு**

1960 ஆம் வருட மார்ச் மாதப் பொதுத் தேர்தலில் அன்றைய ஐக்கிய தேசியக்கட்சிக்கு அறுதிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனினும், அரசியற் கட்சிகளில் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சி என்ற அடிப்படையிலேயே ஐ.தே.கட்சி டட்லி சேனநாயக்க தலைமையில் ஆட்சியை அமைத்தது. சிறிய கட்சிகளை அரவணைத்து அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றுவிட முயன்ற டட்லி சேனநாயக்காவின் முயற்சி கைகூடவில்லை.

**தந்தை செல்வா காட்டிய உறுதி**

பிரதமர், குறிப்பாக தந்தை செல்வாவின் தலைமையில் இயங்கிய தமிழரசுக் கட்சியின் ஆதரவை நாடினார். தந்தை செல்வா அவர்கள் வடக்கு - கிழக்கு - மலையகம் உட்படத் தமிழ் பேசும் மக்களது உரிமைகளை வென்றெடுப்பதில் மிகமிக



ஜனாதிபதி சந்திரிகா

உறுதியுடன் இருந்தார்.

அப்போது பிரதமருக்கும் தந்தைக்கும் இடையில் உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. அறுதிப்பெரும்பான்மை இல்லாத அரசைக் கலைத்து மீண்டும் பொதுத் தேர்தலுக்குச் செல்வதே சிறந்த வழி எனக்கண்ட பிரதமர் டட்லி அதையே நாடினார் என்பது வரலாறு. டட்லி சேனாநாயக்கா தந்தை செல்வா காலத்து அரசியற் கோட்பாடுகள் வேறு. மிக உயர்வாக மதித்தும் போற்றப்பட்ட அரசியற் சித்தாந்தங்கள் இன்றைய அரசியல்வாதிகளால் மேன்மைப்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை.



தேர்தல் ஆணையாளர்
தயானந்த திஸநாயக்கா

**கதவைத் தட்டும் இரு தேர்தல்கள்**

இன்று பதவியிலுள்ள சிறுபான்மை அரசு இரண்டு தேர்தல்களைச் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளது. ஒன்று நாடாளுமன்றப் பொதுத்தேர்தல். அடுத்தது ஜனாதிபதித் தேர்தல். இரண்டு தேர்தல்களுமே சந்திரிகா அம்மையாரின் மாளிகைக் கதவுகளைத் தட்டியபடி நிற்கின்றன.

ஐ.தே.கட்சியைப் பொறுத்த அளவில் ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் இந்த வருட இறுதியில் நடத்தி முடிப்பதிலேயே இது மிகமிக முனைப்பாக உள்ளது. அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் பின்னர் ஜே.வி.பியும் கூட 2005 டிசெம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டும் என வீராவேசமாக உள்ளது. சந்திரிகா அம்மையார் சட்டத்திற்குப் புறம்பாக ஜனாதிபதிப் பதவியில் நீடிப்பதை பிரதான எதிர்க்கட்சிகள் எவையுமே விரும்பவில்லை.

**உலக அபிப்பிராயம்**


உலக அபிப்பிராயமும் 2005 டிசெம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டும் என்பதேயாகும். ஆனால், சந்திரிகா அம்மையார் பொதுத்தேர்தல் ஒன்றுக்குச் செல்லவும் ஆயத்தமாக இல்லை. இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லவும் விருப்பம் கொள்ளவில்லை. ஆனால், இந்த நிலைப்பாட்டை அரசினால் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்தும் இந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி சந்திரிகா அம்மையாரை எவ்வளவு விரைவாக வீட்டிற்கு அனுப்ப முடியுமோ அவ்வளவு விரைவாக அனுப்பிவிட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பதற்குக் காரணங்கள் பலவுண்டு. அவற்றுள் முக்கியமானது யாதெனில், அம்மையார் தமது சுயநல அரசியல் இலாபங்களுக்காக எதையும் செய்யப் பின்நிற்க மாட்டார் என்பதேயாகும். நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையுடன் கோலோச்சிய முன்னைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அரசைத் தமக்குச் சாதகமான போலிக் காரணங்களைக் கூறிக் கலைத்தமையை இதற்கோர் முதற்தர உதாரணமாகக் கொள்ளலாம். மேலும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவியில் மாற்றங்களைக் கொண்டுவருவேன் என ஜே.வியினருக்கு எழுத்து மூலம் கொடுத்த வாக்குறுதியைத் தமது தேர்தலும் தேவையும் முடிந்த பின் காற்றில் பறக்கவிட்ட நற்பண்புகளும் நிறையப் பெற்றவர் அவர் என்பதையும் எதிர்க்கட்சிகள் நன்கு தெரிந்து கொண்டுள்ளன. தாம் காலத்திற்குக் காலம் அளிக்கும் வாக்குறுதிகளைத் தாமே நிறைவேற்ற மறந்து செயற்படும் ஒருவர் பதவியில் நீடிப்பதை எதிர்க்கட்சிகள் பலவும் விரும்பாததில் ஆச்சரியம் எதுவும் இருப்பதற்கில்லை.

இன்றைய ஜனாதிபதி பதவியில் இருக்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகப் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறுமானால் தமது அளப்பரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி எந்தவிதமான தில்லுமுல்லுகளையும் செய்யப் பின்நிற்கமாட்டார் என்பதும் எதிர்க்கட்சிகள் அனைத்திற்கும் தெரிந்த விடயம்தான்.

ஜனாதிபதித் தேர்தல் 2006 ஆம் ஆண்டிற்கு முன் நடைபெறமாட்டாதென அம்மையார் அடித்துக் கூறுவதற்கான ஒரு முக்கிய காரணம் அவர் எவருக்கும் தெரியாமல் எடுத்த ஓர் இரகசிய சத்தியப்பிரமாணத்தின் அடிப்படையிலேயேயாகும். இவற்றை எல்லாம் நன்கு புரிந்துகொண்டே எதிர்க்கட்சிகள் இன்று செயற்படுகின்றன என்பேன்.

தாம் பதவியில் இருந்துகொண்டே நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தத் திடீர் முடிவொன்றை ஜனாதிபதி எடுத்தாலும் எடுக்கலாம். ஏனெனில், இந்த வருடம் பதவியை விட்டு விலகும் எண்ணம் ஒரு சிறு துளிகூட அவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. அம்மையார் அவர்கள் முந்திக்கொண்டு செயற்பட்டால் நாடாளுமன்றத் தேர்தல் முதலில் நடைபெற வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. இதில்




எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

அவர் காலதாமதம் செய்வாரானால் தேர்தல ஆணையாளரின் சிலமுடிவுகள் மேலோங்க இடமுண்டு.

**தேர்தல் ஆணையாளரின் மாண்புகள்**

தேர்தல் ஆணையாளர் எந்த ஓர் அமைச்சரின் கீழோ அல்லது அரசியற் பிரமுகரின் செல்வாக்கிற்குட்பட்டோ இயங்குபவரல்லர்.



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

அவர் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தைப் போன்று தனித்துவங்கள் வாய்ந்தவர்; சுதந்திரமானவர். சுயமாகவே திறம்பட இயங்கும் அதிகாரங்களைக் கொண்டவர். சகல தரப்பினரதும் நம்பிக்கைக்கும் பொறுப்பானவர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்பொழுது நடைபெறவேண்டும் என்பதைத் தேர்தல் ஆணையாளரே தீர்மானிப்பார் எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் கூறியிருப்பது தேர்தல் ஆணையாளரின் மதிப்பையும் அவர் மீது அனைத்துத் தரப்பினரும் வைத்திருக்கும் நம்பிக்கையையும் புலப்படுத்துவதாக உள்ளது. உரிய கால நேரம் வரும்போதுதான் தேர்தல் ஆணையாளர் தமது கருத்துக்களை வெளிப்படுத்த முடியும. அதற்கு முன்னதாக அரசியல்வாதிகளின் கேரிக்கைகளுக்கிணங்க எதுவித அப்பிப்பிராயங்களையும் பகிர வேண்டிய அவசியமோ கட்டுப்பாடுகளோ அவருக்கில்லை.

**அம்மையார் முந்தக்கூடும்**

தமக்குரிய சரியான நேரத்துக்காகத் தேர்தல் ஆணையாளர் காத்திருக்கிறார். அப்பொழுது அவர் தமது முடிவுகளை வெளிப்படுத்துவார். தேர்தல் ஆணையாளரது அறிவிப்புகளுக்குச் சற்று முன்னதாக எந்த வேளையிலும் ஜனாதிபதி பொதுத் தேர்தல் ஒன்றைப் பிரகடனப்படுத்தக்கூடும் என்பது எனது கணிப்பு. இப்படியொரு முடிவை அம்மையார் எடுத்தால் அதைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் இலங்கையில் எவருக்குமே கிடையாது.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்த அளவில் சரியான நடைமுறைகள் பின்பற்றப்படாவிட்டால் உலக நாடுகள் தமது அதிருப்தியை எவ்வாறு வெளிப்படுத்தும் என்பது ஒரு கேள்வி. அவை எவையும் இலங்கைக்குப் பெரிய அளவில் பொருளாதார உதவிகள் செய்ய முன்வரமாட்டா. நாடு வறுமையின் கோரப்பிடியில் சிக்கும்.

**செல்லப்பா நடராசா**
*(நாடாளுமன்ற சிரேஷ்ட அறிக்கையாளர்)*

விலைவாசிகள் மேலும் பலமடங்காக அதிகரிக்கும். குற்றச்செயல்கள் பெருகும். மரணங்கள் மலிந்த நாடு என உலகில் இலங்கையின் பெயர் துலங்கும்.

ஜனாதிபதி தேர்தல் முதலில் நடைபெறுமானால் நாடு இப்பொழுதுள்ள சுனாமிச் சிக்கல்களில் இருந்துவிடுபட வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கும் என்பதும் சமாதான முயற்சிகளில் பாரதூரமான மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் பெருகும் என்பதும் எனது அபிப்பிராயமாகும். இலங்கையில் இதுதான் நடக்கும் என எதையும் எதிர்வுகூற முடியாது. அந்த அளவிற்கு இலங்கை அரசியல் சாக்கடையாக மாறிவிட்டது. எல்லாவற்றையும் பொறுத்திருந்து பார்போம். ✱

---

# அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டாலும் சமாதான முயற்சியை அரசு கைவிடாது!

கொழும்பு, ஜூலை31

எங்களுடைய அரசுக்கு எந்தவிதமான அரசியல் நெருக்கடி ஏற்பட்டாலும் நாம் சமாதான முன்னெடுப்புகளைக் கைவிடப்போவதில்லை. நோர்வே பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன் ஒக்ரோபர் 4 ஆம் திகதி கொழும்பு வருகின்றார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார நலன்னோம்பு அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

வெள்ளியன்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த புதன் இரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்களை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஊடகவியாலாளர்களுக்கு விளக்கினார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவித்தபின் விடர் ஹெல்கிஸனின் வருகை தொடர்பாக அமைச்சர் தகவல் வெளியிட்டார்.

அண்மைக்காலங்களில் பொதுக்கட்டமைப்பு, ஜனாதிபதித் தேர்தல் எனப் பல சர்ச்சைகள் எழுப்பப்பட்டன. இது அரசுக்கு ஒரு நெருக்கடியான நிலையை ஏற்படுத்திவிட்டது. என்றாலும், ஜனாதிபதி சமாதான முன்னெடுப்புக்களைக் கைவிட்டுவிடவில்லை. தான் பதவியில் இருக்கும் வரை அவர் அதனைத் தொடர்வார்.

சமாதானப் பணிகளில் பெரும்பங்கினை வகிக்கும் நோர்வே பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸன் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி கொழும்புக்கு மீண்டும் வரவுள்ளார். இவர் ஜனாதிபதி, பிரதமர் ழற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடனும் முஸ்லிம் தலைவர்களுடனும் தொடர் பேச்சுகளை நடத்துவார்.

பின்னர் வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடவுள்ளார். புலிகளுடனான சந்திப்பின் விவரங்களை அவர் அரசுக்குத் தெரிவிப்பார் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நோர்வே பிரதிநிதியின் மூலம் அரசு ஏதாவது முக்கிய செய்திகளைப் புலிகளுக்கு அனுப்பவுள்ளதா எனச் செய்தியாளர் கேள்வி எழுப்பினர்.

இதுவரை விசேட செய்திகள் எதுவும் இல்லை. அவர் இங்கு வந்த பின் நடைபெறும் பேச்சுகளில் ஏதாவது மாற்றங்கள் ஏற்படலாம் - என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

(எ-க)

---

## இளங்கலைஞர் மன்ற மாதாந்த இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஜூலை31

இளங்கலைஞர் மன்ற மாதாந்த கலை நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கே.சோமசுந்தரம் ஜே.பி. தலைமையில் நடைபெறவுள்ள இந் நிழ்வில் எஸ்.வெற்றிவேலாயுதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நிகழ்வில், குணராஜா நக்கீரனின் பாட்டுக் கச்சேரி நடைபெறும் . ஏ.ஜெயராமன் வயலின், என்.மதிரூபன் மிருதங்கம் ஜி.ஏ. செந்தூரன் கடம், கெ.நந்தகுமார் முகர்சிங் ஆகியோர் பக்கவாத்தியங்கள் வாசிப்பர்.

தொடர்ந்து பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகமும் நாட்டார் வழக்கியற் கழகமும் இணைந்து கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ் மயில் தயாரித்து வழங்கும் பவளக்கொடி நாடகம் இடம்பெறும்.

(204)

S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே
கேட்டு வாங்குங்கள்



எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை
நிச்சயப்படுத்த தவறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுருக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741

Rediffusion DYR 497/11/04


# பல்கலை. ஊழியர் வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது

கொழும்பு,ஜூலை31

அனைத்துப் பல்கலைக்கழக கல்விசார்ரா ஊழியர்கள் கடந்த 30 நாள்களாக மேற்கொண்டுவந்த தொடர்ச்சியான வேலைநிறுத்தம் நேற்றுமுன்தினத்துடன் முடிவுற்றது.

ஊழியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக் கோரி கடந்தமாதம் 25ஆம் திகதியிலிருந்து இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுவந்தது தெரிந்ததே. இக்காலப்பகுதியில் இடம்பெற்ற பேச்சுகளில் சரியான இணக்கப்பாடு ஏற்படாததினால், இந்த வேலைநிறுத்தம் தொடர்ந்து இடம்பெற்றது.

இதனை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், கடந்த புதன்கிழமை அமைச்சர்கள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அ்திகாரிகள், ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கு இடையே ஏற்பட்ட பேச்சுகளின் பயனாக இவ் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாகவும் - ஊழியர்களுக்கு அடுத்தமாதச் சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவாக 500 ரூபா வழங்குவதுடன் அடுத்த ஜனவரி மாதத்தில் நிலுவைக் கொடுப் பனவுகளை வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட் டுள்ளதாகவும் -

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் ஏ.ஆர்.எம்.மாஹிர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக ஊழியர்கள் கடமைக்குத் திரும்பிய போதிலும், வழமையான நிர்வாகச் செயற்பாடுகள் திங்கட்கிமையிலிருந்தே நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. பல்கலைக்கழகங்களில் நேற்றுமுன்தினம் விரிவுரையாளர்கள், மாணவர்களின் வரவு குறைவாகவே காணப்பட்டது. அடுத்த வாரத்திலிருந்து கல்வி நடவடிக்கைகள் வழமைபோல் இடம்பெறும் என விரிவுரையாளர் ஒருவர் கூறினார். (எ-க)

# சிறுவன் படுகாயம்

தென்மராட்சி,ஜூலை31

வீதியில் காணப்பட்ட மர்மப் பொருளை மின்சாரத்தில் பொருத்தியபோது அது வெடித்ததில் 11 வயதுச் சிறுவன் காயமடைந்தான்.

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில்ஜெனோஜன் (வயது 11) என்பவர் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-117)


ஆடி மாத அதிரடி மலிவு விற்பனை
25% வரை விலைக்கழிவு
OCEANICK IMPEX
192, MAIN STREET, COLOMBO 11.
Tel: 2336720, 2327168, Wholesale: 2384131, Fax; 2326961
E.mail: oceanick192@yahoo.com

இந்தியாவில்
கல்வி பயிலுங்கள்
A/L பெறுபேறுகளை எதிர்பார்ப்போர்
அல்லது
A/L இரண்டு சித்தியுடையோர்
B.Sc.
B.B.M. பங்களூர் பல்கலைக்கழக
B.C.A. பாடநெறிகள்
தொ.பே. 011 2854438/ 0777 317043
(அ-44346)

மானிப்பாயில்.. BRITISH BUSINESS SCHOOL

அனைவரின் வேண்டுகோளுக்கினங்க எதிர்வரும் August 19th 2005 இல் மானிப்பாய் ஆலடிச்சந்தியில் BRITISH BUSINESS SCHOOL தனது ஆங்கில மொழிமூலமான ஆரம்ப பாடசாலையையும் சிறுவர் வளந்தோருக்கான ஆங்கில வகுப்புக்களையும் ஆரம்பிக்கவுள்ளது

Year 1-5 English Medium Week end Classes நடாத்தப்படும்.

விசேட அம்சங்கள்
☐ ஆங்கில மொழி மூலமான சிறந்த கற்பித்தல் முறை
☐ தமிழ் ஒரு தனிக் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்

பாலர் பாடசாலை பாட விதானங்கள்
PLAY GROUP [2+ முதல் 3+ வரை]
MONTESSORI SCHOOL [3+ முதல் 4+ வரை]
PRE-SCHOOL [4+ முதல் 5+ வரை]

சிறார்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள்
PRE-FOUNDATION
FOUNDATION
LOWER INTERMEDIATE
INTERMEDIATE
UPPER INTERMEDIATE

BRITISH BUSINESS SCHOOL
இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி. | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய்.
HOT LINE : 021-222-5796
British BUSINESS SCHOOL Where Students Come First

BBS BBS BBS BBS BBS BBS BBS BBS BBS

# புராதன ஈழத் தமிழகத்தில் செழுமையான பல துறைமுகங்கள் இருந்துள்ளன

**யாழ்ப்பாணம், உரும்பிராயில் 1903இல் பிறந்த ஸி.சுந்தரலிங்கம் 1993 இல் தமது 90 ஆவது வயதில் காலமானார்.**

**'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்ற இவர் கணிதவியலில் (Mathematics) பெரும் வல்லுநராகக் கருதப்பட்டவர். நுண்மாண் நுழைபுலம் படைத்தவர் என விதந்துரைக்கப்பட்ட இவர் சட்டத்துறையில் பாரிஸ்டர் (Barrister) பட்டம்பெற்றவர். இந்திய நிர்வாக சேவை (ICS) மற்றும் இலங்கை நிர்வாக சேவை (CCS) என்பவற்றில் தேர்ச்சிபெற்றும் அரச பணியைத் தூசாகக் கருதித் தூக்கி எறிந்தவர்; பின்னர் பல்கலைக்கழக பேராசிரியராகப் பதவி வகித்துப் புகழ் ஈட்டியவர்.**

**பிரித்தானிய முடிக்குரிய எலிசபெத் மகாராணிக்கு கணிதவியல் போதிக்கும் ஆசானாய் இருந்த பெருமைக்கு உரியவர்.**

**இலங்கை அரசியல் அரங்கில் ஆரம்பகாலத்தில் சுதந்திர இலங்கையின் முதல் அமைச்சரவையில் வர்த்தக அமைச்சராக பதவிவகித்தவர்.**

**இந்திய வம்சாவளிகுடியுரிமைச் சட்டத்தை எதிர்த்துப் பதவி துறந்தவர்.**

**வவுனியா தொகுதி நாடாளுமன்ற பிரதிநிதியாக பதவி வகித்த இவர் துணிச்சலும், பேச்சாற்றலும் மிக்கவர். தமது துடிப்பான நடவடிக்கைகள் காரணமாக 'அடங்காத் தமிழன்' என்ற அடைமொழியால் அழைக்கப்பட்டவர். பிற் காலத்தில் ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி என்ற பெயரில் அமைப்பொன்றை உருவாக்கி நடத்தியவர்.**

**'புராதன ஈழத்தமிழகம்' என்ற தலைப்பில் 1959ஆம் ஆண்டில் அவர் எழுதி வெளியிட்ட கட்டுரையை இன்றைய அரசியல் சூழ்நிலையில் இளையோரும்அறிந்துகொள்ளும் பொருட்டு இங்கு வெளியிடுகிறோம்.**

## தொலமியின் வரை படத்தில் வெளியாகும் உண்மைகள்



**சி. சுந்தரலிங்கம்**

ஈழம்- கன்னியாகுமரிக்குத் தெற்கே கிழக்கடைய, பரந்து கிடக்கும் நிலப்பிரதேசம் ஆகும். அதற்குத் தொன்றுதொட்டே வழங்கிவரும் பழந்தமிழ் பெயர்தான் ஈழம். அகராதிகளின்படிக்கு ஈழம் என்றால் 'சிலோன்' என அர்த்தம் உண்டு. எனது அபிப்பிராயத்தின் படி 'ஈழம் என்ற பதத்திலிருந்தே 'சிலோன்' என்னும் ஆங்கிலச் சொல் தோன்றியுள்ளது'. எப்படியெனின், கப்பலோட்டிகள் தலைவன் சுக்கான் பிடிப்பவனை விழித்து 'கப்பலை ஈழம் -கை நோக்கித்திருப்பு' என்று உரப்புதல் வழக்கம் 'வலக்கைப் பக்கம் அல்லது இடக்கைப் பக்கம் திருப்பு' என்று சொல்லுவதற்குப்பதிலாக 'ஈழங்கைப் பக்கம் திரும்பு' என்று உரப்புதல் கப்பலோட்டிகளின் பேச்சாகும். இவ்வாறு 'ஈழம் + கை' என்ற தொடர் சொல் மருவியும், சிதைந்தும் காலப்போக்கில் 'இலங்கை' என்று பெயர் உண்டாயிற்று. இராமாயண காலத்தில் 'லங்கா' என்றிருந்த பெயரை சிங்களவர் சிறீலங்கோ என்று கூப்பிடுகின்றனர். போர்த்துக்கேயர் சிங்கள 'சிறீ' எழுத்தில் 'றகரத்' தொனியைவிட்டு 'சிலாவோ' என்றழைத்தனர். ஒல்லாந்தர் காலத்தில் 'செய்லோன்' என்றும் ஆங்கிலேயர் காலத்தில் 'சிலோன்' என்றும் அழைத்தனர்.

### தொலமியின் ஈழம் - கி.பி.150

முதன்முதலில் இலங்கைப் படத்தை வரைந்தவர் தொலமி என்னும் கிரேக்க அறிஞராவார். அவர் கி.பி.150ஆம் ஆண்டில் வரைந்த முதற் படத்தில் இலங்கையை - 'சிமுண்டி' அல்லது 'சலிகை' என்று குறிப்பிட்டுள்ளார். இந்தப் படத்தில் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை வடிவாகப் பிரித்துக்காட்டி, அப்பகுதி 'நாகதீபோய்' அதாவது, நாகர்கள் வாழும் பகுதி என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். 'நாகர்' என்பவர்கள் தமிழினத்தவரின் ஒரு பகுதியினரேயாவர் என்பது துணிபு.

இந்தப் படத்தின் ஆங்கிலப் பதிப்பில் இன்னுமொரு முக்கிய அம்சமுண்டு. செழுமை வாய்ந்த பல வர்த்தகத்துறைமுகங்களுள் ஒன்றாகிய 'சூரியன் துறைமுகம்' அதில் காட்டப்பட்டிருக்கின்றது. வவுனியா மாவட்டத்து முல்லைத் தீவுக் கரையோரத்திற்கு அண்மையில் உள்ள கொக்கிளாய் என்னும் பிரதேசமே அந்தச் 'சூரியன் துறைமுகம்' ஆகும். கொக்கிளாய்க் குடாக் கடலில் தான் இந்தச் சூரியன் ஆறு சங்கமம் ஆகின்றது. எப்படி இப்பெயர் ஏற்பட்டது? தமிழ்மொழி தெரிந்திராத அந்தக் கிரேக்க கப்பலோட்டி கிரேக்க மொழி தெரிந்திராத அவ்வூர்த் தமிழ் வாசியிடம், சைகைமூலம் 'இவ்வூர்ப் பெயரென்ன'' என்று கேட்டிருக்கவேண்டும். பிரத்தியட்சமாக, அந்தத் தமிழ்க் குடியானவன் சூரியனைக் காட்டியிருக்கவேண்டும்.

அன்று தொட்டு இன்றுவரை இக்காரணப் பெயர் பெற்ற சூரியன் ஆறு கொக்கிளாய் நன்செய் நிலத்தினூடே பாய்ந்து, அப்பிரதேசத்தை நீர்வள, நிலவளத்தால் சிறப்புறச் செய்து கொண்டிருக்கிறது. வெள்ளநீரும், பதவியில் குளத்து 'வான்' நீரும் சேர்ந்தொன்றாய்ப் பாய்ந்து ஆற்றைச் சுற்றியுள்ள ஏராளமான நிலப்பரப்பை நெற்செய்கைக்கு மிகவும் உகந்ததொரு பகுதியாக்குகின்றது. இதையடுத்த இன்னுமொரு மிகமிகச் செழிப்புள்ள பிரதேசம் தண்ணிமுறிப்பு குளத்தினைச் சுற்றியுள்ளது. கிட்டத்தட்ட மூன்று மைல் நீளமுள்ள இக்குளக்கட்டின் மேல் 'இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முன்னர் புத்தர் பெருமான் நடந்தார்'என்று ஒரு பரம்பரைக் கதையும் வழக்கிலுண்டு. இது நடந்தது இலங்கைக்கு விஜயன் வருவதற்கு முன்னராகும், அண்மையில் இலங்கையைப் பற்றி வெளியிட்ட ஒரு ஆங்கில நூலில்- 'சிங்கள நாகரிகத்தின் எழுச்சியும், மறுமலர்ச்சியும், இரத்தக் களரியிலும், சதி சூழ்ச்சிகளிலும் ஆரம்பமாகியது' என்று அந்நூலாசிரியர் தனது கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

தொலமியின் படத்தை அடிப்படையாகக் கொண்டே ஒரு சில படங்கள் வரையப்பட்டுள்ளன. இலங்கை அரசின் சார்பில் மகாவம்சத்தை அச்சேற்றி வெளியிடுவதற்கு அறிஞர் கைகர் அவர்கள் தொலமியின் இந்தப் படத்தையும் உபயோகப்படுத்தினார்.

போர்த்துக்கேயர், பிரான்ஸுக்காரர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரும் அநேக படங்களை வரைந்துள்ளார்கள். இவற்றுள் கி.பி. 1552 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஒரு படத்தில் இலங்கை அந்நாள்களில் நான்கு இராசாக்களால் ஆழப்பட்ட நாடாகக் காட்டப்பட்டிருக்கிறது. அப்போ இங்குள்ள முக்கிய வியாபாரப் பொருளாகக் கருதப்பட்டது மிளகு. பெப்பர் (Pepper) என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு மிளகு என்ற 'பச்சைத்தமிழ்' சொல்லை அக்காலத்தில் கூட அப்படியே மிளகு (Moolagu) என்று பாவித்தனர்.

### றொபேட் நொக்ஸின் படம்-கி.பி.1685

றொபேட் நொக்ஸ் என்பவர் கி.பி.1685 இல் இலங்கைப்படம் ஒன்றை வரைந்தார். அந்தப் படத்திலே டச்சுக்காரரால் கைப்பற்றப்பட்ட இலங்கையின் பல்வேறு பகுதிகளின் எல்லைகளையும் தெளிவாகக் காட்டியுள்ளார். இப்படத்தைப்பற்றி எழுதிய குறிப்புரையிலே, 'கந்த உடறட்ட' என்னும் இப்போதைய கண்டியர் பிரதேசங்களுக்கு வடக்கே ஆனையிறவுக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தில் 'மலபாறிஸ்' என்ற இனத்தவர்கள் வாழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த 'மலபாறிஸ்' ஈழத் தமிழர்களேயென்பதும், அந்தப் பிரதேசம் கைலை வன்னியர் (Coylot Wannia) என்ற இளவரசனின் ஆட்சிக்குட்பட்டிருந்ததும் தெளிவாகும். ஹரி - உவில்லியம்ஸ் என்னும் ஆங்கில எழுத்தாளர் முதன் முதலாக 1950ஆம் ஆண்டில் வெளியிட்ட 'இலங்கை - கிழக்குலக முத்து' (Ceylon-Pearl of the East) என்னும் நூலில் குறிப்பிட்டதை அப்படியே கீழே தருகின்றேன்:-

'மலபாறிஸ்' (அதாவது, ஈழத்தமிழர்கள்) யாழ்ப்பாணப்பகுதியைத் தொன்றுதொட்டே ஆட்சிசெய்து வந்திருக்கின்றனர். பழிவாங்கும் நோக்குடன் அங்குமிங்குமாக சிங்களவர் அப்பிரதேசத்துள் புகுந்து அடிக்கடி அட்டகாசம் பண்ணி தொல்லை கொடுத்து வந்தார்கள். இருந்தும் இப்படியான திட்டமிட்ட நாசகார வேலைகளினால் தமிழர்களின் வளர்ச்சியுற்ற நாகரிகத்தை அவர்களால் மங்கவைக்கவோ அன்றி அழிக்கவோ முடியவில்லை. கடந்த ஈராயிரம் வருடங்களாக இந்தப் பிரதேசம் தமிழரின் பலம்வாய்ந்த தாயகமாகவும், தமிழ் இராசாக்கள் ஆட்சி செலுத்திய தலைநகர்- இராசதானியாகவும் இருந்தது. இன்றும் அப்பிரதேசம் தமிழரின் அரணாகவும் இராச்சியமாகவும் இருந்து கொண்டேயிருக்கிறது.

### ஏமியன்ஸ் உடன்படிக்கைப்படி அமைந்த படம் கி.பி.1802

ஏமியன்ஸ் உடன்படிக்கைப்படி 1802ஆம் அண்டு ஒல்லாந்தர் தம்வசமுள்ள கரையோரப் பகுதிகளை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர். அந்நாள்களிலும் கூட வன்னிப் பிரதேசமானது தனித் தமிழ்ச்சுதந்திர நாடாகவே இருந்தது. அங்கு வன்னியர்களும், வன்னிச்சிகளும் அரசு செலுத்திவந்தனர். இப்பகுதி மக்கள் போர்உணர்ச்சி நிறைந்திருந்த காரணத்தால் சரித்திரத்திலே இப்பகுதியை 'அடங்காப்பற்று' எனக் காரணப் பெயரிட்டு அழைக்கலாயினர். செம்பவன்னிச்சி போரிலே கைதியாக்கப்பட்டுக் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டாள். பண்டார வன்னியா 1803ஆம் ஆண்டில் பிரித்தானி சைனியங்களை எதிர்த்து கற்சிலைமடு என்னுமிடத்தில் நடத்திய கடும் போர் முனையிலே வீரசுவர்க்கம் எய்தினான். அன்றே எமது ஈழத்தமிழகம் அனைத்தும் அந்நியர் கைவசமானது. இதற்குமுன் ஒரு போதும் ஈழத் தமிழர்கள் தங்கள் பரம்பரையான தாயகத்தை மேலைநாட்டு அந்நியருக்கு முற்றாகப் பறிகொடுத்தது கிடையாது. இப்படித் தமிழர்தம் தாயகமாகக் கருதப்படும் ஈழத்தமிழகம் தான் யாது?

'மேற்கு முன்னீஸ்வரத்திலிருந்து ஆரம்பித்து, தென்கிழக்கே கதிர்காமம் ஈறாக உள்ள பிரதேசத்தில், வடசிலாபம், புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா, மதவாச்சி, பதவியில் குளம் (தற்போது பதவியா) கந்தளாய், திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு மாவட்டம், பட்டிப்பளை ஆற்றுப் பிரதேசம் (தற்போது கல்லோயா) ஆகிய இடங்களை உள்ளடக்கிய பிரதேசமேயாகும். இத் தமிழ்ப்பிரதேசத்தில் விசேடமாக வன்னிப் பகுதியில், பிரித்தானிய ஆட்சிக்காலத்திலும் கூட அவர்களை நேரில் எதிர்த்து, தமிழர்கள் யுத்தங்கள் செய்தார்கள். இத்துடன் நின்றுவிடாது அவர்கள் காட்டில் ஒழிந்திருந்தும் பல வருடங்களாக கொரில்லா யுத்தம்செய்தார்கள். ஈற்றில் நமது ஈழம் வெள்ளையார் (பிரித்தானியர்) வசம் ஒப்படைக்கப்பட்டது. 1958 மே, ஜூன் வகுப்புக் கலவரத்தின் போது பதவியாவில் குடியேறிய சிங்களவர் பயந்து, பீதிகொண்டு, உயிர்ப்பிச்சை கேட்டு, பாதுகாப்புக்கென அண்மையிலுள்ள அவர் தம் தாயாகமாகிய அனுராதபுரத்திற்கு ஒழித்தோடிய சமயம், வழியோரமெல்லாம் 'தமிழ் சேனைதிரண்டு' வருகிறதே என்னும் பொருள்பட, சிங்களத்தில் "தெமளசென எனவா' என வாய்விட்டுக் குளறியதை இவ்வளவு விரைவில் ஒருவரும் மறந்திருக்கமுடியாது. ❋

# அணு ஆயுதத்திட்டத்தைக் கைவிட...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸியன் அமைப்பின் தலைமைப் பதவி ஒழுங்குமுறைப்படி அடுத்த ஆண்டு மியன்மாருக்குப் போகவேண்டும்.

பெரும்பாலும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசுகளையே கொண்டிருக்கும் இந்த அமைப்பின் தலைமைப் பதவி இராணுவக் குழுவினால் ஆளப்படும் மியான்மாருக்குப் போவதை மேற்குநாடுகள் பலவும் எதிர்த்துவந்துள்ளன.

மியான்மார் ஜனநாயக வழிக்குத் திரும்பாதவிடத்து அதனை அங்கீகரிக்கமுடியாதென அந்நாடுகள் தெரிவித்துவந்தன.

ஆஸியன் அமைப்புக்குள்ளேயும், செல்வாக்குமிக்க மேற்குலகநாடுகளிலும் எதிர்ப்பு வலுத்துவந்ததைத் தொடர்ந்து மியான்மார் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்வதை ஒத்திப்போடுவதாக அறிவித்துள்ளது.

லாவோஸ் தலைநகர் வியன்ரியானில் கடந்த 24-25ஆம் திகதிகளில் நடைபெற்றுவந்த ஆஸியன் வெளிநாட்டமைச்சர்கள் மாநாட்டில் மியான்மாரின் முடிவு அறிவிக் கப்பட்டது.

தலைமைப் பொறுப்பைக் கைவிடுவதற்கு மியான்மார் கூறியுள்ள காரணத்தை மேற்கு நாடுகள் வெறும் ஏமாற்று என எள்ளி நகையாடியுள்ளபோதிலும் தலைமைப் பொறுப்பை அது நிராகரித்திருப்பதை வரவேற்றுள்ளன.

மியான்மார் தனது உள்நாட்டு மீள் இணக்க மற்றும் ஜனநாயகச் செயற்பாடுகளில் அதிக கவனம் செலுத்தவிரும்புவதால் அடுத்த வருட தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதைத் தள்ளிவைப்பதாக அறிவித் திருப்பது வெறும் கண்துடைப்பு என்று சர்வதேச மட்டத்தில் வர்ணிக்கப்பட்டது.

மியான்மாரின் ஜனநாயக பிரதான எதிர்ப்புக் கட்சி தேசிய லீக்கையும் அதன் தலைவர் அங்சான் சூகீயையும் ஜனநாயக நடைமுறையில் சேர்த்துக்கொள்ளாமல் அங்கு எவ்வாறு ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பமுடியும் என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

என்றாலும், ஆஸியன் தலைமைப் பதவியை மியான்மாரின் இராணுவ ஆட்சியாளர்கள் கைப்பற்றிவிடாமல் முறியடிக்கப்பட்டிருப்பது அந்த நாட்டின் எதிர்காலத்துக்கு நன்மையாகவிருக்கும் என்று கருதப்படுகின்றது. மியான்மார் ஜனநாயக வழிக்கு மேலும் துரித கதியில் முன்னேறுவதற்கு இது உந்துசக்தியாக உதவும் என்று கருதப்படு கின்றது.

ஆஸியன் வெளிநாட்டமைச்சர்கள் மாநாட்டில் மியான்மார் முடிவை அறிவித்த லாவோஸ் வெளிநாட்டமைச்சர் சாம்ஸ்வட்லெங்ஸ்வட் மியான்மார் எப்பொழுது தயாராய் இருக்கிறதோ அப்போது தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளலாம் என ஆஸியன் வெளிநாட்டமைச்சர்கள் முடிவுசெய்திருப்பதாகக் கூறினார்.

பத்து நாடுகளைக் கொண்ட ஆஸியன் (Asean) அமைப்பின் தலைமைப் பதவிக்கு ஆங்கில அரிச்சுவடி ஒழுங்கின்படி நாடுகள் தெரிவுசெய்யப்படுவதால் அடுத்த ஆண்டு மியான்மாருக்குப் பதிலாகப் பிலிப்பைன்ஸ் தலைமைப் பொறுப்பை ஏற்றக்கொள்ளும் இராணுவ ஆட்சிக்குட்பட்டுள்ள மியான்மாருக்குத் தலைமைப் பதவி வழங்கப்பட்டுவதை அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் கடுமையாக எதிர்த்து வந்துள்ளன. மியான்மார் ஜனநாயக மயப்படுத்தலில் போதியளவு முன்னேற்றம் காணப்படவில்லை என்று பல நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

வெளிநாட்டமைச்சர்கள் மாநாட்டைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் ஆஸியன் உச்சி மாநாட்டில் அமெரிக்க அரசின் சார்பில் வெளியுறவுச் செயலர் கொண்டலீஸா ரைஸ் அம்மையார் கலந்துகொள்ளப்போவ தில்லையென்றும் தமக்குப் பதிலாகத் தமது உதவியாளர் கலந்துகொள்வார் என்றும் அறிவித்திருந்தார். இவ்வாறான மேற்குலக நெருக்குதலே மியான்மார் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்வதைத் தள்ளிப்போட்டிருப்பதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

மியான்மாரில் ஜனநாயக செயற்பாடுகளில் இராணுவ ஆட்சியாளர்கள் தீவிரமாக ஆர்வங்காட்டுவதற்கு இந்தநிலை உதவ லாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ❋



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி யின் வாழும் கலைப் பயிற்சி கோண்டாவிலில்

**இலவச அறிமுக உரை**

நாள்: 01.08.2005 திங்கட்கிழமை மாலை 6.00 மணி

இடம்: இந்து மகா வித்தியாலயம், புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.

பயிற்சி நாள்கள்: 02.08.2005 முதல் 07.08.2005 வரை மாலை 6 மணிமுதல் 8 மணிவரை

மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 2223526

திங்கள் மாலை 5 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் (01.08.2005) நடைபெறும் பஜனை மற்றும் தியான நிகழ்ச்சிக்கு அனைவரையும் வரவேற்கிறோம்.

அன்பில் மலருங்கள் அனைவரும் வருக! உங்களை உணருங்கள்

www.artofliving.org (38126) www.srisriravishankar.org







## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 - 02 - 1953



இறப்பு 11 - 08 - 2004

திருமதி

**பாக்கியலெட்சுமி அன்னலிங்கம்**

திதி : அபரபக்க ஏகாதசி

கண்களில் நீர் பெருக காலமெல்லாம் நாம் அழுத
சோகம் தீரவில்லை – எம்
இதயத்தின் வேதனையை இதமுடன் தீர்த்திட
உடன் இருப்பார் இவ்வுலகில் யாருமில்லை
காலமெல்லாம் அருகில் இருப்பேனென்று கனிவுடன்
எமை அணைத்து வாழ்ந்த உயிரோவியமே!
காலன் அழைத்தவுடன் காற்றாய்ப் பறந்துபோனீரே!
புன்னகை தவழும் உன் மதிமுகம்
இன்னமும் கண்களில் தெரிகின்றதே – நீர்
உலா வந்த எமது இல்லத்தில்
நிழற்படமாய்த்தான் உங்களைக் காண்கின்றோம் – அம்மா!

44, 3ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை. (38345)(26.14.17) - குடும்பத்தினர்.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை31

கைதடி, குருசாமி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை31

இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நேற்று கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆரம்பமாகியது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு மேற்படி கல்லூரியில் கருத்தரங்கு தொடர்ந்து இடம்பெறும்.

இக்கருத்தரங்கில் ஆளணி உதவி மாவட்டச் செயலர் க.கனகரட்ணம் கருத்துரை வழங்குவார். (202)

## கற்பார் வெடித்துச் சிதறியதில் இருவருக்குக் காயம்!

தென்மராட்சி,ஜூலை31

கிணறு வெட்டும்போது திடீரென கற்பார் வெடித்து கற்கள் சிதறியதில் இருவர் காயமடைந்தனர்.

மீசாலை வடக்கில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த சுதன் (வயது 20), எம்.விஜிபன் (வயது 23) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-117)

## திங்கள் சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை31

ஆழிப்பேரலை வீடமைப்பு புனர்நிர்மாண அலகு அலுவலகத்தின் மாவட்ட செயலகத்தில் பல்வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் தெரிவு செய்யப்பட்ட மூவரை நாளை திங்கட்கிழமை யாழ்.செயலகத்திற்குச் சமுகம் தருமாறு யாழ்.மேலதிக அரச அதிபர் கேட்டுள்ளார்.

ரி.பரணிதரன் (நல்லூர்), ரி.கோகுலகுமார் (சுழிபுரம் மத்தி), ரி.விஜயதர்சினி (கோப்பாய் வடக்கு) ஆகிய மூவரையுமே யாழ்.செயலகத்திற்குச் சமுகந்தருமாறு அவர் கேட்டுள்ளார். (3-202-204)

## தேசிய ஒருமைப்பாடு குறித்து பயிற்சிப் பட்டறை நடைபெற்றது

யாழ்ப்பாணம்,ஜூலை31

யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில், தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்றிட்டப் பணியகத்தின் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய ஒருமைப்பாடு தொடர்பாக பேரா.சிரியர் வை.நந்தகுமார், பிரதித் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணானந்தன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ்.எம்.ரமீஸ், பிராந்திய ஆணையாளர் திருமதி பி.சிவலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர். (எ-75-204-202)


வடமராட்சி மாணவர்களுக்கு!

புதிய பிரிவுகள் ஆரம்பம்

DIPLOMA IN MICRO SOFT OFFICE
(FAST TRACK PROGRAM)
DURATION: 40 DAYS ONLY

ஆரம்பம்: 19.08.2005 பகல் 10 மணிக்கு

முடிவு: 27.09.2005

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

(38129)(26.14.17) - பயிற்சி ஒழுங்கு.


நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2005

## கால நீடிப்பு

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிகக் கடைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கால எல்லை 2005.08.05ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விவரங்களை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

கேள்வி திறத்தல் 2005.08.05 ஆம் திகதி பி.ப. 3 மணி

ஒப்பம்: கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி-44125)(26.14.17)


எதிர்வரும் முதலாம் திகதி முதல் பதினைந்தாம் திகதிவரை பின்வரும் பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவிருப்பதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

Certificate of Computer Awareness Course - CCAC

உயர்தரப் பரீட்சை எழுதியவர்கள் மற்றும் கணனித்துறையில் காலடி வைக்கவிருப்பவர்களுக்காக வழங்கப்படும் சிறப்பு பாடநெறி.

பாடவிதானங்கள்: 16 காலம்: மூன்று மாதங்கள்
கட்டணம்: 1250/- மட்டுமே அங்கீகரிப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

Diploma in Computer Studies — Diploma in Video Editing
Diploma in Graphic Design — Diploma in Desktop Publishing
Diploma in Multimedia & Maya — Diploma in Hardware Engineering

இலங்கை மற்றும் இந்திய மல்ரிமீடியா கல்லூரிகளில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கற்கைநெறிகளை கற்பிக்கவிருக்கின்றார்கள்.

ஜெயதாஸ் Dip. in MD — சிவகணேசன் MSc — துஸ்யந்தன் MSc
ஆதி Dip. in CGA (கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் சஞ்சிகை எழுத்தாளர்) — அருண்குமாரஸ்வாமி Trinity College of Music UK

50% தொடக்கம் 65% வரையான சிறப்புக்கட்டணச் சலுகையில் உடனே இணைந்திடுங்கள் இத்திட்டம் எதிர்வரும் 15ம் திகதிவரை மட்டுமே வழங்கப்படும்.


வார, வார இறுதி மற்றும் இரவு நேர வகுப்புக்கள் நடத்தப்படும்.

YTS IT For Future

YAARL TECH SYS.
No. 3, Sir Pon Ramanathan Rd.,
Kaladdy Junction - Jaffna
Tel: 0773 206207


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 05 - 01 - 1920



ஆண்டவன் அரவணைப்பில் 30 - 06 - 2005

**அமரர் இரத்தினம் ஐயாத்துரை**

அன்போடும் பண்போடும் அகிலத்தில் வாழ்ந்திருந்த்தீர் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

இன்று (2005-07-31) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் -

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து ஆறுதல் கூறியும் அனுதாபச்செய்திகள் அனுப்பியும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தாவடி வடக்கு, கொக்குவில். (37918)(26.14.17) - குடும்பத்தினர்.



## வீட்டு அலங்காரப் பொருள்கள் வேண்டுமா?

- அழகான கிறில்கள் – அன்னம், தாரா வடிவமைப்பில் – (1'x1')
- குதிரை மாதிரி வடிவமைப்பில் கிறில்கள் (100 இற்கு மேல்)

இவையனைத்தும் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட அச்சுகள் மூலம் அடித்து உருவாக்கப்பட்டவை.

- கம்பித்தூண்கள் • வீட்டுத்தூண்கள் • அலங்காரப் பொருள்கள்

தகுந்த கலவையில் தரமாகத் தயாரிக்கப்பட்டவை



விதம் விதமான அழகிய பூக்கள் விற்பனைக்கு உண்டு.

41 வருட அனுபவமிக்கவர்களால் செய்யப்பட்ட உறுதிமிக்க கல்

இத்தனையும் மலிவாகப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடங்கள்:

பருத்தித்துறை வீதி, நீர்வேலி கூட்டுறவு சந்தை, நீர்வேலி. — நீர்கொழும்பு வீதி, இல.475, வத்தளை. — சங்கானை வீதி, (மானிப்பாய் ஆஸ்பத்திரி முன்பாக), மானிப்பாய்.

மார்க்பொன் கட்டட அலங்காரப் பொருள்கள் உற்பத்தி நிறுவனம் (38330)(50-14-15)

பழைய நீதிமன்ற வீதி, மல்லாகம்.

எமது பொருள்களை விற்பனை செய்வதற்கு ஏஜென்சி முகவர்கள் தேவை.

நெல்லியடி, பருத்தித்துறை, சங்கானை, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு முகவர்கள் தேவைப்படுகின்றனர். மேலுள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

கூடுதலாகக் கொள்வனவு செய்வோருக்கு அந்தந்த இடங்களுக்கு விநியோகம் செய்வோம்.

# அரை நிரந்தர வீடுகள் கட்டித் தந்தாலும் அவை சொந்த வீடு போல வருமா....?

கொடூர யுத்தத்தினால் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் தமது வாழ்விடங்களைத் தொலைத்து உறவுகளைப் பறிகொடுத்து உடைமைகளையும் கைவிட்டு உயிர்களைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடிய மக்கள் நீண்டகாலமாக நலன்புரி நிலையங்களில் வாழுகின்றனர். அவர்களின் வாழ்வு சமாதான காலத்திலும் சீர்செய்யப்படாமல் தொடர்கிறது. சொந்த ஊர் திரும்பமுடியாமல் தமது சொந்த நாட்டிலேயே 'அகதி' என்ற முத்திரையுடன் அவலங்களைச் சுமந்தவாறு இவர்கள் வாழ்வை நகர்த்துகிறார்கள்.

இவர்கள் வாழ்ந்த வளமான - வனப்பான - கிராமங்கள் சோபையிழந்து பாலைவனங்களாக 'உயர்பாதுகாப்பு வலயம்'என்ற பெயரில் முடங்கியுள்ளன.

இதனால், இவர்களின் வாழ்வியல் 15 வருடங்களாக அகதி முகாம்களில் முடங்கியுள்ளது.

இத்தகைய மக்களின் இன்றைய அவல நிலையினைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளி

**இவர்களின் வாழ்க்கை நிலையை கேளீர்! பாரீர்!! 6**

னதும் ஏனையோரினதும் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கில் 'இவர்களின் வாழ்க்கை நிலை கேளீர்! பாரீர்!!' எனும் தொனிப்பொருளில் உதயன் வாரம் தோறும் தனது பணியை விரித்தும் விவரித்தும் வருகிறது.

அந்தவகையில், இம்முறை சங்கானையில் உள்ள நீதிவான் முகாம் மற்றும் கட்டுடை கேளன்காமம் அகதிமுகாம் ஆகிய இரண்டு இடங்களிலும் மக்களின் துயரங்களையும், அவர்களின் இன்றைய அவல வாழ்வியலையும் வெளிப்படுத்துகிறோம். சம்பந்தப்பட்ட எமது சகோதர, சகோதரிகளின் உடனடித் தேவைகள் என்னவென்பதை அங்குள்ள மக்களோடு அளவளாவி வெளிப்படுத்துகிறோம்.

முதலில், சங்கானையில் உள்ள நீதிவான் நலன்புரி நிலையத்துக்குச் சென்றேன். அங்குள்ள மக்களோடு மனந்திறந்து பேசும்போது அவர்கள் எத்தகைய இடர்பாடுகளுக்கு மத்தியில் நாம் நினைத்திராத, வெளியாருக்குத் தெரியாத கஷ்டங்கள், வேதனைகளுடன்

**சங்கானை நீதிவான் அகதிமுகாமில் பாவிக்கமுடியாத நிலையில் உள்ள கிணற்றைச் சுற்றி நிற்கும் சின்னஞ்சிறுசுகள்.**



தமது வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பதை அறியமுடிந்தது.

காரைநகர் தோப்புக்காடு, மடத்துவளவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 78 குடும்பங்களைச் சேர்ந்த 260 பேரின் வாழ்வு இதற்குள் ஊசலாடுகிறது. இவர்கள் வாழ்ந்த சொந்த ஊர் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உயர் பாதுகாப்பு வலயமென்ற வேலிக்குள் சிக்கியுள்ளது.

முதலில் அங்குள்ளவர்களுக்கு என்னை யார் என்று - உதயனின் பிரதிநிதி என்பதை - அறிமுகம் செய்தேன்.

அப்போது வயோதிபப் பெண்மணி ஒருவரின் தளதளத்த குரலொன்று கேட்டது.

"தம்பி! நீங்கள் உதயனில இருந்தா வந்தனீங்கள் " இஞ்ச எங்கட முகாமுக்க சின்ன வாசிகசாலை கட்டி வச்சிருக்கிறம். எல்லாரும் காசுபோட்டு உதயன் பேப்பர்தான் போட்டு வாசிக்கிறோம். ஒவ்வொரு கிழமையும் எல்லா முகாமைப் பற்றியும் எழுதிறீங்கள். எங்க எங்கட முகாமுக்க வராம விட்டு விடுவீங்களோ என்று நினைச்சனாங்கள்... நல்லவேளை வந்திட்டியள்.... எங்களுக்கு உள்ள எக்கச்சக்கமான குறைகளையும் சொல்லுறம் எழுதுங்கோ... உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்."

இது அந்த வயதான தாயின் தயவான வேண்டுகோள்...

### தொண்டு நிறுவனங்கள் இல்லாவிடில்...

அடுத்து ஓடி வந்து என்னோடு பேசியவர், தம்மை முகாமின் தலைவர் என்று அறிமுகப்படுத்திவிட்டுத் தமது குறைபாடுகளைத் தெரிவித்தார்.

இஞ்ச 260 பேர் இருக்கினம். 10 மலசலகூடங்களைத் தொண்டு நிறுவனங்கள் கட்டித்தந்தது. ஆனால், அதில 4 தான் பாவிக்கக்கூடியவை. மிச்சம் 6 மலசலகூடங்கள் பழுதாய்ப் போச்சு... இதனால இங்க இருக்கின்ற சனம் சரியாகக் கஷ்டப்படுகின்றார்கள். மலசலம் கழிக்கக்கூட நிவாரணம் வேண்ட வரிசையில நிற்குறது போலத்தான் நிற்போம்.

சீச்சீ... இதுக்குள்ள இருந்து நாங்கள் பகுகிறபாடு (சினக்கிறார்).... இந்தத் தொண்டு நிறுவனங்களும் இல்லாட்டா எங்கடபாடு அதோ கதிதான்.

அரசு எங்கட காணியளை ஆமியிட்ட பிடிச்சுக்குடுத்துட்டு.... எங்கள ஊருக்கும் போகவிடாம திரும்பியும் பார்க்காம... தங்கடபாட்டில இருக்குது. நாங்கள் சொந்த நாட்டிலை அகதி என்ற பெயரோட வாழ்க்கை வாழுறம்....

### 15 வயதுப் பெண் ஒருவர் வந்து சொன்னார்.

இந்த முகாமுக்க இரண்டு கிணறுகள் இருக்கு. ஆனால், ஒண்டுதான் பாவிக்கக் கூடிய நிலையில இருக்குது. அதனை குளிக்கிறதுக்கு மட்டும்தான் பாவிப்போம். குடிக்கிற தண்ணிக்கு 2 கிலோ மீற்றர் தூரம் வரைக்கும் போய்த்தான் எடுக்கவேணும். ஏதாவது, நிறுவனங்கள் எங்களுக்கு இந்த குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வந்தால் அது பெரிய புண்ணியம்.

## சொந்த ஊருக்குப் போனோம் என்றால் எங்களாலும் பிள்ளைகளுக்கு சீதனம் கொடுக்கமுடியும்

அடுத்தவர் யுத்தத்தினால் உறவுகளையும் பறிகொடுத்தவர். தன்னுடைய குமுறலை இப்படிக் கொட்டினார்.

சீ.எச்.எவ். நிறுவனமும் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனமும் சேர்ந்து எங்களுக்கு அரை நிரந்தர வீடுகளைக் கட்டித் தந்திருக்கினம். எனினும், அதற்குள் வசிக்கக்கூடிய அமைதியான சூழல் எதுவுமில்லை. பக்கத்தில பக்கத்தில வீடுகள்... பிள்ளையளைப் படிப்பிக்கேலாது. ஒரு பிள்ளைக்கு படிக்கவேணும் என்ற விருப்பம் இருந்தாலும் இங்குள்ள சூழல் அத்தகைய அந்தப் பிள்ளையின் ஆர்வத்தை மழுங்கடித்து விடுகின்றது.

நாங்கள் ஊரைவிட்டு வெளிக்கிட்டு 15 வருஷமாச்சு. எங்கட பிள்ளையளுக்கு கல்யாணம் செய்துவைக்கேலாமல் இருக்குது. குறிப்பாக, பொம்பிளைப் பிள்ளையளுக்கு கல்யாணம் பேசுறதென்றால், மாப்பிள்ளை பகுதியள் எக்கச்சக்கமா சீதனம் கேட்கினம். அதோட வீடு ,வளவு கேட்கினம். நாங்கள் என்ன அரை நிரந்தர வீட்டையா? அதுவும் இரவல் காணிக்குள் இருக்கிற வீட்டையா கொடுக்கமுடியும்?

எங்கட ஊராய் இருக்குமென்றால் உழைச்சு பிள்ளையளுக்குரிய சகல தேவைகளையும் தேடியிருப்பம் இண்டைக்குப்போவம். நாளைக்குப் போவம் என்று கனவுகளோடு .. காத்திருந்து எதிர்காலத்தை வளமாக்க முடியாதுள்ளது. இவை அவரின் ஆதங்கங்கள்.

* * *

இஞ்ச இருக்கிற பிள்ளையின்ர படிப்பைக் கவனிக்கிறதில நாங்கள் நல்ல கவனமாய் இருக்கிறம். ஏனென்றால், எல்லாத்தையும் இழந்திட்டு ஏதிலிகளாக இருக்கிற



சங்கானை நீதிவான் அகதிமுகாம்

எங்கட வாழ்க்கையில திருப்பம் ஏற்பட வேணுமென்றால் பிள்ளையளுக்குப் பூரண கல்விகொடுப்பதுதான்ஒரேவழி. ஆனால்,அந்தக் கல்வியைப் பெறக்கூட இங்குள்ள மாணவர்கள் போராட வேண்டிய துர்ப்பாக்கியநிலை.

### கல்வியி ல் ஆர்வம் ஆனால் புறநிலை

இதுக்குள்ள இருக்கிற மாணவர்களுக்குக் கல்வி புகட்ட மாலை நேர வகுப்புகளை நடத்துறாங்கள். ஆனால், குப்பி விளக்கில எப்படிப் படிப்பிப்பது? மின்சார வசதி இங்கில்லை... அதைப் பெற்றுத்தருமாறு பிரதேச செயலகங்கள் தொண்டு நிறுவனங்கள் எனப் பல அலுவலகப்படிகளுக்கு ஏறி இறங்கிவிட்டோம்.

ஆனால், யாரும் உதவ முன்வரவில்லை.

இத்தனையும் நடுத்தர வயதுடைய ஒருவரில் படித்தவர் போல் தெரிந்தவரின் ஆதங்கக் கூற்றுக்கள்.

உண்மையில் அந்த நபரின் ஆதங்கத்தில் நியாயத் தன்மை பொதிந்துள்ளது. ஏனெனில், கல்விதானே ஒரு மனிதனை முழுமையாக்குவது அதுகூட இவர்களுக்கு இல்லையென்றால் அவர்களின் எதிர்காலம் என்னவாகுது?

குறிப்பிட்ட முகாமில் 34 மாணவர் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்களாம். அவர்களுடைய வளமான எதிர்காலத்துக்கு உரமூட்ட வேண்டும் என்பது அங்குள்ள பல பெற்றோர்களினதும் எதிர்பார்ப்பு.

அத்தகைய எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்ய அவர்களுக்குரிய கற்றல், கற்பித்தல் சூழலை உருவாக்கக்கூடிய தொண்டு நிறுவனங்கள் ஏதாவது முன்வருமா ? எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் அவர்கள்.

* * *

பல பேர் மாதமொரு தடவை வருகிறார்கள்; பதிவெடுக்கிறார்கள். அடுத்த மாதத்துக்கிடையில் உங்களுக்கு அது தருகிறோம், இது தருகிறோம் என்று சொல்லி விட்டுப் போகிறார்கள்.

ஆனால், என்னகொண்டு வந்து தந்தார்கள் என்று பார்த்தால் ஒன்றுமில்லை.

சரி, எங்களுக்கு ஒன்றும் தர வேண்டாம். நாங்கள் யாரையும் உதவி கேட்கவும்மாட்டம். எங்களின் ஊருக்கு விட்டால் காணும்.

இது அந்த முகாமில் வாழ்கின்ற வயோதிபப் பெண்மணி ஒருவரின் வேண்டுதல்.

அங்குள்ள மக்களின் வேண்டுதல் தான் எத்தனை; தேவைகள்தான் எத்தனை. அவைகளெல்லாம் வார்த்தைகளுக்குள் வடிகட்ட முடியாதவை. துன்பக் கதைகள் என்று என்னுள்ளே மனம் நொந்தபடி அங்கிருந்து விடைபெற்றேன்.

### கேளன்காமம் நலன்புரி நிலையத்தில்...

அங்கிருந்து புறப்பட்டு மானிப்பாய், கட்டுடையில் உள்ள கேளன்காமம் நலன்புரி நிலையத்துக்குச் செல்கிறேன்.

கீரிமலை, சேந்தான்குளம் பகுதிகளைச் சேர்ந்த 22 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேர் தமது அவல வாழ்வை நகர்த்துகிறார்கள்.

என்னை அறிமுகப்படுத்தினேன். அப்போது ஒரு பாட்டி,

தம்பி! நீர் உதயனிலிருந்து வாறன் என்று சொல்லுறீர் உங்கட பேப்பரில அகதிகள் தினத்திலை அகதிகளின்ர பிரச்சினைகளைப் பேட்டி கண்டு போட்டீங்கள் தானே. நான் அதில பேட்டி குடுத்தனான். எங்களுடைய கஷ்டங்களை எங்களுக்கு என்ன தேவையென்றதையும் அந்தப் பேட்டியில சொன்னனான்.

### அடுத்த நாள் ...

பேப்பரில பேட்டி வந்து அடுத்தநாள் இந்த யு.என். எச்.சீ.ஆர். நிறுவனத்தில இருந்து அதிகாரி ஒருவர் வந்து கையில உதயன் பேப்பரையும் கொண்டு வந்து என்னையும் இந்த முகாம் தலைவரையும் கூப்பிட்டு உங்கட பிரச்சினையைப் பேப்பரில பார்த்தனாங்கள்.

உங்களுக்கு நாங்கள் 8 பைக்கற்று சிமெந்தும் வீட்டுக்குப் போடக்கூடிய கதவும் முகட்டு ஓடுகளும் தாறம் என்றும் -

மற்றது இந்த பழுதாய்ப்போன மலசலகூடங்களையும் திருத்தித்தாறம் என்றும்- சொல்லிச்சினம். ஆனால், இதுவரைக்கும் அவை சொன்னது எதுவும் கொண்டு வந்து தரயில்லை' - என்று கவலை தெரிவித்தார்.

### மழை வந்தால்....

அடுத்தவர் அந்த முகாமின் தலைவர் தன்னை அறிமுகப்படுத்திவிட்டு இப்படிச் சொன்னார்.

தம்பி! இஞ்ச ஆறு மலசலகூடங்கள் தான் இருக்கு. ஆனால், 4 தான் பாவிக்கக்கூடிய நிலையில இருக்குது. இதனால இதுக்குள்ள இருக்கிற சனங்கள் சரியா கஷ்டப்படுகுதுகள். மழை காலம் வந்தால் இதுக்குள்ள வெள்ளம் பரவலாகத் தேங்கி நிற்கும். அப்போதெல்லாம் வீடுகளின்ர வீட்டுச் சுவர்களெல்லாம் விழுந்துவிடும். தொற்று நோய்களெல்லாம் கெதியாய் பரவும்.

**அபிமானன்**

குடிக்கிற தண்ணிக்கு வயல் கிணத்துக்குப் போய்த்தான் எடுக்கிறாங்கள்.

மழை காலமென்றால் அங்கேயும் தண்ணீர் எடுக்கேலாது. சண்டிலிப்பாயிக்குப் போய்த்தான் எடுக்கிறனாங்கள்.

### சொந்தவீடு போல் வருமா....?

தொண்டு நிறுவனங்கள் அரை நிரந்தர வீடுகளைக் கட்டித் தந்தாலும் எங்களுக்கு எங்கட சொந்த வீடு போலை வருமா? இரவல் காணிக்குள் எத்தனை நாளைக்குத்தான் இப்படி அவலப்படுகிறது. பிள்ளையின்ர கல்வி சீரழியுது. எங்கட குடும்பங்களின்ரை எதிர்காலமும் சீரழியுது.

இந்தக் கஷ்டங்களை நினைச்சாலே நாங்களும் ஏன் இந்த மண்ணில வாழுறம் என்று வெறுப்பும் விரக்தியும்தான் வருகுது.

ஊருக்குவிடச் சொல்லி எத்தனை ஆர்ப்பாட்டம், ஊர்வலம் நடத்தினோம். எல்லாம் வீணாப்போச்சுது. ஏதாலும் பலன் கிடைக்கல்லை. அரசாங்கம் உயர் பாதுகாப்பு என்று சொல்லி எங்கட வாழ்க்கையைச் சீரழிக்கிறது.

இவர்களின் கஷ்டங்களுக்கும் அவலங்களுக்கும் தீர்வு எப்போது? இவர்களின் வாழ்வு தொடர்ந்தும் அவலக்கதைகளாகவே தொடர்வதா? அதிகாரிகளே உங்களின் கவனம் இவர்கள் மீதும் படட்டும். *

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

250 XXXX நிசான் Serena வான் (A/C, P/S) விற்பனைக்குண்டு. தொடர்பு திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P.: 077 6525040. (38243)

புடைவைக் கடைக்குரிய அலுமாரி முன் கதவு - கீழ்ப்பகுதி கண்ணாடியுடனும் பிறேமுடனும் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். தொடர்பு: த.சங்கரப்பிள்ளை, இல.209, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (38245)

பாவித்த நல்ல நிலையில் உள்ள சிசில் (Sisil) குளிர்சாதனப் பெட்டியும் Ken wood Electric Cooker (2 Barners) With oven (½ Size) விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 916 3439. (38342)

ஆட்டுக்கடா விற்பனைக்குண்டு. தொடர்பு: 20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (38263)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் மேற்கில் உள்ள கணேசா வித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள ஒழுங்கையில் விஷக்கடி மருத்துவர் காசிப்பிள்ளை அவர்களின் வீட்டிற்கு அண்மையிலுள்ள 5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விசாகன். T.P.: 011 420 4697. (சி-44113)

பருத்தித்துறை, வீரமாகாளியம்மன் கோயிலுக்கு அருகில் கிணற்றுடன் கூடிய 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (காணியைச் சுற்றி மதில்உள்ளது) தொடர்பு: க.சிறிதரன் T.P.: 021 4591966. (38098)

கோண்டாவில் கிழக்கில் பலாலி வீதிக்கு அருகில் 20 பரப்பு, பலாலி றோட் முகப்பு, 5 பரப்பு இராமகிருஸ்ண முகப்பு, 20 பரப்பு பால் பண்ணை றோட். உடன் விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம். மாலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு 077 3114510. (சி-44351)

சுன்னாகம் மாகியப்பிட்டி வீதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு அருகில் கிணற்றுப் பங்குள்ள 4¾ (நாலேமுக்கால்) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு பொ. சோதிவேல் வாசிகசாலை வீதி, 3ஆம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (38371)

## வீடு விற்பனைக்கு

Colombo 12, Armour Street (FLATS) B2/F/29, இலக்கம் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு P.Balachandran, Church lane, K.K.S. Road, Kokuvil East, Kokuvil. (தரகுப் பணம் இல்லை). (38364)

இல. 55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன், 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (38164)

16/1, மடம் வீதி, யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்பு 12.52 குளிக் காணியில் அமைந்துள்ள வீடு சகல வசதிகளுடனும் திருத்த வேலையற்றும் இரு குடும்பங்கள் வசிப்பதற்கு ஏற்ற வகையிலும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வி.குலம், T.P.: 0777423614, 0777248366. (38279)

கோண்டாவில் கிழக்கு, நாகபூசணி அம்மன் வீதியில் காளிகோயிலுக்கு அருகில் 2½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 111389. (38339)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, 514ஆம், 515ஆம், 516ஆம், 517ஆம் இலக்கங்களையுடைய வீடுகள் (யாழ்ப்பாணம் பழைய OPD இற்கு முன்பாக) உடன் விற்பனைக்குண்டு. (தொடர்பு: சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும்) T.P.: 021 222 8024. (38327)

## வீடு காணி விற்பனைக்கு

மாவடி, மூளாய் வீதியில் 6 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: யாகேஸ்வரன் சந்திரா, அக்கினி வைரவர் ஆலய பின் வீதி, வேரம் மூளாய். (38336)

கோண்டாவில் மேற்கில் 2பரப்பு 11 குளி காணியிலமைந்த வீடு விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும். T.P.: 0114613157. (38326)

## ஓகன் விற்பனைக்கு

புதிய யமகா PSR 550 ஓகன் விற்பனைக்குண்டு. தொடர்பு கெனடி No.315 C, பரமேஸ்வராச்சந்தி (பிள்ளையார் கோயில் முன்பாக), திருநெல்வேலி. (38361)

## நாய்க்குட்டி விற்பனை

காவலுக்குரிய Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38286)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronice நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38368)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தஞ்செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மாஸ் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். கல்பேட்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகில் உள்ள புலவனார் வீதி. (38332)

புறொயிலர் 1Kg - 160/=. சுத்தஞ்செய்தது 1Kg - 240/=. கல்பேட், கோழித்தீன்கள், புறொயிலர் குஞ்சுகள் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. * New R.S.K. Farm - மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். * New R.S.K. Farm மானிப்பாய் வீதி, பெரியமதவடி, உடுவில். (38303)

## வாடகைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் புத்தம் புதிய வீடு 6 அறைகள், 2ஹோல், 2 Bath Room உடன் வாடகைக்குண்டு. (N.G.O ஆயின் விரும்பத்தக்கது). தொடர்பு: 0777 592625. (38181)

## தவறிவிட்டது

புளியங்கூடல், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பாமினி பாலசுப்பிரமணியம் என்பவரது தேசிய அடையாள அட்டை (717392710V), விசேட அடையாள அட்டை என்பன நுணாவிலுக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 255, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.: 077 6126070. (38352)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilar குஞ்சுகள் 42/=. பேட்டுக் குஞ்சுகள் 08.08.2005 திங்கட் கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை., சன்னதி பாம் - தொண்டைமானாறு., ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி., முருகன் - சாவகச்சேரி., நல்லூர் பாம்சென்ரர் - இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38283)

## திருமணசேவை

தங்களின் இன்றைய எதிர்பார்ப்பு குடியுரிமையுள்ள கனடா மணமகனா? திருமண ஆற்றுப்படுத்துநர், 'சுயதெரிவு' முன்னோடி குரும்பசிட்டியூர் வேல் அமுதனைச் சந்திக்கவில்லையா? வேல் அமுதனின் இன்றைய கையிருப்பு 26 வயது முதல் 44 வயது வரையான 50 கனடாக் கடிதக் கோப்புகள் சந்திப்பு முன்னேற்பாட்டு ஒழுங்கு முறையில் மேலதிக விவரங்களுக்குக் கிழமை நாள்களில் மாலை 4.30 மணிக்கு மேல் வேல் அமுதனை 2360488 இல் தொடர்புகொள்க. முகவரி: 8/3/3, Metro Apartment, (Via 33rd Lane), 55th Lane, Wellawatta, Colombo - 06. (C/44105)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பம், சிறந்த சீதனமுடைய, அழகான மணமக்களுக்கு 38-46 வயதிற்கிடைப்பட்ட இலங்கை வதிவிட மணமகனும் இங்கிலாந்து உயர்கல்வியுடன் அங்கு உயர் பதவி வகிக்கும் தம்பியாருக்கு 28-35 வயதிற்கிடைப்பட்ட மணமகளும் தேவை. மாற்றுச் சம்பந்தமும் விருப்பம். விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும். விளம்பர இல.2662, C/o. உதயன், யாழ்ப்பாணம். (38259)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971, அனுஷம் 4ஆம் பாதம், கிரக பாவம் 11½, 5'8" உயரமுடைய U.K.இல் P.R உடைய Computer Engineer மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகிறார்கள். தொடர்பு 0712 565195. (38324)

## மணமகன் தேவை

1966 ஆம் ஆண்டு பிறந்த, கிரகபாவம் 23 உடைய, பயிற்றப்பட்ட ஆசிரியைக்கும் 1968 ஆம் ஆண்டு பிறந்த, கிரகபாவம் 28 உடைய பட்டதாரி ஆசிரியைக்கும் அரச நிரந்தர வேலை பார்க்கும் பொருத்தமான அழகான மணமகன்கள் தேவை. ஜாதகக் குறிப்புடனும் ஏனைய விவரங்களுடனும் தொடர்பு கொள்க. க.கிருஷ்ணபிள்ளை ஆசிரிய ஓய்வூதியர், வித்தியாலய வீதி, தொண்டைமானாறு. (38365)

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் 2 பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு.

**மேலதிக விவரங்களுக்கு:**

திருமதி வ.ச.கதிர்காமர், தொலைபேசி இல. 0112696295. உடன் தொடர்புகொள்ளவும். தரகர் தேவையில்லை. (38302) (25-17-18-42)

## வீடு விற்பனைக்கு

நாமகள் பாடசாலை பின்புறம் புகையிரத நிலைய வீதியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: **K.றூபன்**

கஸ்தூரி களஞ்சியம், திருநெல்வேலி.

(38374) T.P. No.: 077 6106744

## மணமகள் தேவை

இந்து குடும்பம், வயது 31, நட்சத்திரம் திருவோணம், மகரராசி, செவ்வாய்க் குற்றம் இல்லை. கல்வி B.Sc.Bio chemistry. லண்டனில் நிரந்தர உத்தியோகம் பார்க்கும் அழகான வாலிபருக்கு A/L சித்தியடைந்த அல்லது அதற்கு மேல் படித்த அழகான மணமகள் தேவை. பெண்ணுக்கு செவ்வாய், சூரியன் ஒரே வீட்டில் இருக்கவேண்டும். அல்லது செவ்வாய் இருக்கும் வீட்டிலிருந்து சூரியன் 4ஆம் 7ஆம் 8ஆம் வீட்டில் இருப்பது விரும்பத்தக்கது. உத்தரட்டாதி, ரேவதி நல்ல நட்சத்திரங்கள் (மண மகனின் தாய், தந்தையர் இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்கள்)

புகைப்படம், ஜாதகக் குறிப்புடன் வாருங்கள். சந்திக்கும் நேரம் முற்பகல் 11 - மாலை 4 மணிவரை (தரகுப்பணம் இல்லை) (38366) (42-17-18)

தொடர்பு: பொ.பாலச்சந்திரன்

(இளைப்பாறிய உள்ளூராட்சி அரச உத்தியோகத்தர்)

Church Lane, K.K.S. Road, Kokuvil East, Kokuvil.

## விற்பனைக்கு

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சிறந்த மூலிகையாகும். நீரிழிவு நோயாளர்களின் குருதி, குளுக்கோஸ், கொலஸ்ரோல், ரைகிளிசைரைட் ஆகியவற்றைக் குறைத்து நோயைக் குணமாக்கும் சிறந்த உப உணவாகும். (37272)

தொடர்பு: **BIO TEC ORIENT (PVT) LTD.**

இல. 131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.

T.P.: 021 4590907 (விவசாயப் பண்ணைக்கு அருகில்)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரி ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

- COMPUTER TYPE SETTING
- M.S.OFFICE
- DESK.TOP - PUBBLISHING

PAGE MAKER, COREL DROW, PHOTO SHOP

- பாடசாலை மாணவர்களுக்கான புதிய பிரிவுகள்
- தவணைக் கட்டணம் * கூடிய செயன் முறை
- மாணவர் வசதி கருதிய நேர அட்டவணை
- இரவு நேர வகுப்புகள்

ஆரம்பம் 01.08.2005 திங்கள் 3 p.m.

COMPUTER UNIT (38360)(42-17-18) திசுழ் கல்வி நிறுவனம் K.K.S. வீதி, இணுவில்.

## முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

பண்ணாகம் அண்ணா கலைமன்ற சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் க.வே.குமரகுரு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற நில அளவையாளர் நாயகம் லயன் ச.கனகராசன் பிரதமவிருந்தினராகவும், வலி. மேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு, மன்றக் காப்பாளர் பண்டிதர் ப.இராசகுரு, கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இதம்பையா, பண்ணாகம் கிராம உத்தியோகத்தர் திருமதி தி.சிவபாக்கியநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.(8-28-203)

* * *

வண்ணார்பண்ணை வடமேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளிக் கல்வி நிலையத்தின் பாலர் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஆறுகால்மடம் லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவி திருமதி ப.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறை விரிவுரையாளர் லயன் மா.இளம்பிறையனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட தமிழர் புனர் வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சுஜெயராஜ், யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல், யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் க.அருந்தவராஜா, முன்பள்ளிக் கல்வி நிலைய நல்லூர் பிரதேச இணைப்பாளர் திருமதி வி.மாலதி, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன், நல்லூர்கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.பூமகள், நல்லூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சீ.பி. வரதராஜன் ஆகியோரும் கலந்துகொள்வர். (8-202)

## ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிட நிலையம்

### பண்டித் சுவாமிநாதன்

உலகத்தில் உங்களுக்கு ஏற்படும் இன்பம், துன்பம், நன்மை, தீமைகள் என்பவற்றை கூறுவார். இவரை ஒரு முறை சந்தியுங்கள்! கைரேகை, குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே உள்ள பிரச்சினை, கல்வி, வீடு, நிலம், பூமி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வியாபாரம், இலட்சுமி கடாட்சம், திருமணம், குழந்தைப் பாக்கியம், காதல் விவகாரம், எதிரிகளால் ஏற்படும் பிரச்சினை, ஆரோக்கியம், பிணி நோவுகள், பணக் கஷ்டம், நீதிமன்ற வழக்குகள், மந்திரம், சூனியம், செய்வினை ஆகிய சகல காரியமும் பார்க்கப்படும்.

சந்திக்க வேண்டிய நேரம்: காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரை

தொடர்புகளுக்கு: APAT கெஸ்ற் கவுஸ்

43(75), கண்டி வீதி, (கச்சேரிக்கு சமீபம்), சுண்டிக்குளி.

T.P.: 0777 738221 (38362)(29.17.18.42)

## பிரதேச பிரதிநிதிகள் தேவை

I.S.O. சான்றிதழ் பெற்ற முதல்தர காப்புறுதிக் கொம்பனியில் பிரதேசப் பிரதிநிதிகள் வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

தகைமை: G.C.E.O/L, G.C.E.A/L சித்தியடைந்த இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

முடிவுதிகதி- 08.08.2005

விளம்பர இலக்கம்: 2663

C/o: உதயன், யாழ்ப்பாணம். C/44133)(39-17-18-42)

## 114 ஆம் நாள் நினைவு கூரல்

அன்னை மடியில் 16 - 08 - 1981



இறைவன் அழைப்பில் 09 - 04 - 2005

### ஞானசேகரம் ஜயந்தன்

எம் ஆருயிர் அண்ணாவே!
தீராத வேதனையால் தினமும் துடிக்கின்றோம்!
மாறாத துன்பம் மனதை வாட்டுகிறதே!
எந் நாளும் உன்னை நினைத்தே
நாம் இங்கு வாழ்கின்றோம்.

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். (38363)(39-17-18-42)

உம் பிரிவால் துயருறும்: **தங்கைகள்.**

## மரண அறிவித்தல்

### முத்துத்தம்பி நடராஜா

கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி நடராஜா அவர்கள் 29.07.2005 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் பராசக்தியின் அன்புக் கணவரும் நிறஞ்சனா தேவியின் அன்புத் தந்தையும் அன்னலிங்கம், பவளரத்தினத்தின் (பவளம்) அன்புச் சகோதரரும் நவரத்தினராஜாவின் அன்பு மாமனாரும் வைகுந்தன், வைதேகியின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (38358)(39-17-18-42)

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. T.P.:0112 730374, 0112 722750

தகவல்: அன்னலிங்கம் (சகோதரன்), பவளம் (சகோதரி).

# பிராந்திய சிறுகைத்தொழில் மையமாக நெல்லியடி நகரை மாற்றி அமைக்கலாம்

## வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம் மீண்டும் முதன்மை பெறவேண்டும்



வடமராட்சிப் பிரதேசத்தின் சமூக, பொருளாதார, கல்வி நிலைமைகளை ஆய்வுசெய்யும் இந்தக் கட்டுரையின் முதற்பகுதி கடந்த ஞாயிறு 'உதயனில்' வெளியாகி இருந்தது. அதன் எஞ்சிய பகுதி இது. யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் மூத்த புவியியல் பேராசிரியருமாகிய பொ.பாலசுந்தரம்பிள்ளை இந்த ஆய்வுக் கட்டுரையை வரைந்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராஜா ஞாபகார்த்தமாக அண்மையில் உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியில் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் இந்தக் கட்டுரை அவர் நினைவாகப் படிக்கப்பட்டது.

6. விவசாய அபிவிருத்திக்கு நிலநீர்ப் பற்றாக்குறைகள் பெரும் தடையாகவுள்ளன.

7. வடமராட்சிக் கடல் நீரேரியை நன்னீராக மாற்றும் திட்டம் பல தசாப்தங்களாக முன்னெடுக்கப்பட்டபோதும் சம்பந்தப்பட்டோரின் கருத்து முரண்பாடுகளால் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுத்தமுடியாது போயிற்று.

8. இப்பிரதேசம் தொடர்ந்தும் இராணுவத்தின் இறுகின கட்டுப்பாட்டில் இருப்பதால் சமாதானச் சூழலிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியாதுள்ளது.

மேற்குறிப்பிட்ட தள நிலைமைகளைக் கவனத்தில் எடுத்து இப்பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது சிறந்தது. இதன் அடிப்படையில் திட்டங்களை இனங்கண்டு அவற்றை முன்னுரிமைப் படுத்தவேண்டும்.

திட்டங்களாவன:-

1. வடமராட்சியில் தொண்டைமானாற்றிலிருந்து சுண்டிக்குளம் வரையான ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களில் வாழும் மக்களின் புனர்வாழ்வு, புனருத்தாரண அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னுரிமை பெறவேண்டும். இப்பிரதேசம் கடந்த இரு தசாப்தகால யுத்தத்தால் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தது. இப்பிரதேசத்தின் பொருளாதாரம் குறிப்பாக மீன்பிடிப் பொருளாதாரமும் குடியிருப்புகளும் மற்றும் வாழ்வாதாரங்களும் இழந்த மிகுதிக் கட்டமைப்புகளும் குறுகிய காலத்தில் துரிதமாக விருத்திசெய்யப்படவேண்டும். மீன்பிடித்துறையினை மீள விருத்திசெய்தல். குடியிருப்புகளை மீள உருவாக்கல், உட்கட்டமைப்புகளை மீள விருத்திசெய்தல் ஆகியன கவனத்தில் எடுக்கப்படவேண்டும். இவற்றை அரச, அரசசார்பற்ற மற்றும் பொதுக் கட்டமைப்பு நிதி உதவிகள் மூலம் மேற்கொள்ளலாம். ஆழிப்பேரலை இடம்பெற்று ஆறு மாதங்கள் முடிந்தும் இப்பிரதேச மக்களின் அடிப்படைத் தேவைகள் இன்றும் பூர்த்தி செய்யப்படாத நிலை காணப்படுவது கவலைக்குரியது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்படவேண்டும். இல்லாதுவிடின் மிகவும் சிக்கலான சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் உருவாகலாம். தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, நாகர்கோயில், செம்பியன்பற்றுப் பகுதிகளில் மீன்பிடித்துறைகள் அமையவேண்டும். இன் பருட்டி, சுப்பர்மடம், கற்கோவளம், மணற்காடு ஆகிய இடங்களில் இறங்குதுறைகள் அமைக்கப்படவேண்டும்.

2. பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நகர்கள் வரலாற்றில் முக்கிய துறைமுகப் பட்டணங்களாகச் செயற்பட்டுவந்தன. 1960, 1970களில் துறைமுக செயற்பாடுகள் நலி வடைய நகர்களின் பொருளாதாரமும் நலி வடைந்தது. 1980களின் பின்னர் இராணுவ நடவடிக்கைகளால் இந்நகர்கள் மேலும் பல வீனமடைந்தன. இப்பகுதி மக்கள் இடப்பெயர்வும் அதிகரித்தது. இங்குள்ள கட்டடங்கள் வயதாகி பாழ் நிலைப் பண்புகளைப் பெற்றன. இன்று இவ்விரு நகர்களின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீளத் தொடங்கு வதற்கும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கும் துரித நடவடிக்கைகள் அவசியமாகின்றன. மீன்பிடித்துறை விருத்தி, துறைமுக விருத்தி மற்றும் சந்தை, சேவை செயற்பாடுகள் விருத்திமூலம் இவ்விரு நகர்களையும் உயிர்த்துடிப்புடையனவாக மாற்ற வேண்டும். இவ்வாறு செயற்படின் வாழிட விருத்திச் செயற்பாடுகள் தானாக வளர்ச்சி பெறும்.

3. வல்லைப் பாலமும் தொண்டைமானாற்றுப் பாலமும் மீள் விருத்திசெய்யப்பட்டு வலிகாமத்ததுடன், போக்குவரத்து இலகுவாக்கப்படவேண்டும். மேலும் பருத்தித்துறையிலிருந்து செம்பியன்பற்று, சுண்டிக்குளம் வழியாக முல்லைத்தீவு வரையான பாதை எல்லா வானிலைக் காலத்திலும் பல தரப்பட்ட வாகனங்கள் போக்குவரத்துச் செய்யக்கூடிய முறையில் விருத்தி செய்யப்படவேண்டும். இதன்மூலம் வடமராட்சிக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் காணப்படும் பொருளாதார உறவு வலுப்பெறும்.

4. தொண்டைமானாறு நன்னீரேரித் திட்டம் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் நீர்த்தடைகள் பழுதடைந்ததன் காரணமாக இத்திட்டம் தோல்விகண்டது. இத்திட்டத்தை மீளச்செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வருட முடிவிற்குள் பூர்த்திசெய்யப்படவுள்ளது. 115 சதுர மைல் நீரேந்துப் பரப்பிலிருந்து வரும் 22000 கியூசெக் வெள்ள நீரை வெளியேற்றக்கூடிய 20'x8' கொண்ட தூக்கக்கூடிய 18 கதவுகள் கொண்டதாக அணை அமையும். இத்திட்டத்தின் மூலமும் யாழ்ப்பாணக் கடல் நீரேரித்திட்டத்தின் மூலம் 20,000 ஏக்கர் பயிர் செய்யும் நிலங்கள் பயனடையமுடியும்.

யாழ்ப்பாணக் கடல்நீர் திட்டம் மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

அ). தொண்டைமானாற்றில் தடுப்பணை அமைத்தல் (Barrage)

ஆ). சுண்டிக்குளத்தில் அணையும் மேலதிக நீர் கடலுக்குள் பாயும் வழியும் அமைத்தல்.

இ). வடமராட்சிக் கடல் நீரேரியையும் ஆனையிறவு கடல்நீரேரியையும் வாய்க்கால் வழியாக இணைத்தல்.

இந்த மூன்று அம்சங்களும் நிறைவேற்றப்படின் பெருநிலத்து ஆறுகளின் மேலதிக நீரைக் குடாநாட்டிற்குக் கொண்டுவரமுடியும். இதனால், குடாநாட்டிற்கு நன்னீர் போதியளவு கிடைக்க வாய்ப்பு ஏற்படுவதுடன் தரைக்கீழ் மென்மையடையும்.

இவ்விரு திட்டங்களும் மக்கள் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படவேண்டும்.

### *கல்வி நிலைமை*

5. வடமராட்சி கல்வியில் நீண்டகாலமாக முதன்மை நிலையைப் பெற்றிருந்தது. எனினும், அண்மைக்காலங்களில் வடமராட்சியின் கல்வி நிலையில் பின்னடைவு காணப்படுகின்றது. வடமராட்சி கல்வி வலயத்தில் 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். எனவே, வடமராட்சி தனது பழைய முதன்மை நிலையை மீளப் பெற முயற்சிக்கவேண்டும். இம்முயற்சி வெற்றிபெறின் தமிழ்மக்கள் கல்விப் பின்னடைவால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சிலவற்றிற்குத் தீர்வுகிட்டலாம். இதற்குப் பொருள் முதலீடு மாத்திரமன்று, மக்களிடையே கல்வி பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அவர்களை அணிதிரட்டி சாதனை நிலைநாட்டலாம். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆண்கள் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடமராட்சி பெண்கள் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த மிஷன் பெண்கள் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, சிதம்பராக் கல்லூரி, விக்னேஸ்வரா கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்கள் துரித செயற்பாடுகள் மூலம் விருத்திசெய்யப்படவேண்டும்.

### *வைத்தியசாலை வசதிகள்*

6. மந்திகை வைத்தியசாலை பொது வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு குடாநாட்டின் கிழக்குப் பகுதியின் முதன்மை வைத்திய நிலையமாக மாற்றப்படவேண்டும். வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வலிகாமம் கிழக்கின் அச்சுவேலிப் பகுதி ஆகியவற்றில் வாழும் மக்களுக்கு இது பிரதம மருத்துவ நிலையமாகத் திகழ வேண்டும். இதன்மூலம் மக்கள் பெரும் நன்மை பெறுவதுடன், இப்பிரதேசத்தின் பொருளாதாரமும் வளம் பெறும்.

7. விவசாய, தோட்ட நிலங்கள் குடியிருப்பு நிலங்களாக மாறுவது நிறுத்தப்படவேண்டும். விவசாயத் தொழிலாளர் பற்றாக்குறையாலும் உற்பத்திச் செலவு அதிகரிப்பினாலும் பாதிக்கப்பட்டுவரும் விவசாயத் துறையைப் புதிய இயந்திரத் தொழில்நுட்ப முறைகள் மூலம் விருத்திசெய்து உற்பத்தித் திறனை அதிகரித்து இலாபம் ஈட்டும் தொழிலாக மாற்றவேண்டும். வடமராட்சியில் காணப்படும் 146 குளங்களும் புனருத்தாரணம் செய்யப்படுமிடத்து இப்பிரதேசத்தின் நீர் வளம் பெருகவும் தரம் உயரவும் வாய்ப்பேற்படும். 'நியாப்' திட்டத்தின்கீழ் சில குளங்கள் ஏற்கனவே மீளமைக்கப்பட்டுள்ளன. ஏனைய குளங்கள் குறுகிய காலத்தில் தூர் வாரப்பட்டு அவைகளின் சுற்றுச்சூழல் மேம்படுத்தப்படவேண்டும்.

8. இப்பிரதேசத்தின் பனைசார் கைத்தொழில்கள் காலத்துக்குக்காலம் முன்னெடுக்கப்பட்டபோதும் அவற்றிலிருந்து முழுமையான பலன் இன்னும் கிட்டவில்லை. குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் பனை வளம் பெருமளவு அழிக்கப்பட்ட நிலையில் வடமராட்சியில் இவ்வளம் ஓரளவு தப்பியுள்ளது. ஆகவே, இந்தக் கைத்தொழிலைப் பொருத்தமான நவீன தொழில்நுட்ப முறைகள் மூலம் முன்னெடுத்து இத்துறையில் ஈடுபட்டுவரும் நலிவுற்ற மக்களின் பொருளாதார சமூக மேம்பாடு உயர்ச்சி அடைய வேண்டும். திக்கம் வடிசாராயத் தொழிற்சாலை விருத்தி இதில் முக்கிய இடம்பெற வேண்டும்.

9. வடமராட்சியில், குறிப்பாக வதிரியில் தொய்வுற்றிருக்கும் தோல்சார் கைத்தொழில் எம் மக்களின் நுகர்வுத் தேவைக்கேற்ப மீள் விருத்திசெய்யப்படவேண்டும்.

10. இப்பிரதேசத்திற்கேயுரிய சிறப்பான உணவுக் கைத்தொழில்கள் (பருத்தித்துறை வடை,பனாட்டு, வடகம், சிறப்புக் கருவாடு) நவீன முறையில் தயாரித்தல், பொதிசெய்தல், சந்தைப்படுத்தல் போன்ற வழிகள் மூலம் விருத்திசெய்யப்படவேண்டும்.

11. வல்லிபுர மணலை அடிப்படையாகக் கொண்டு கண்ணாடித் தொழிற்சாலை அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை பல காலமாக முன்வைக்கப்பட்ட போதும் அது இன்றுவரை நிறைவேறவில்லை. இத்தொழிற்சாலை அமைப்புக் குறித்து பொது மக்களும் சிவில் சமூகமும் அரசியற் தலைவர்களும் அக்கறை செலுத்தவேண்டும்.

### *முறைப்படி மணல் அகழ்தல்*

12. குடாநாட்டின் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கட்டுமானப் பணிகளுக்குப் பொருத்தமான மணல் வளம் காணப்படுகிறது. மணற்காடு, நாகர்கோவில் பிரதேசத்து மணல் மூலம் இப்பிரதேசம் பெரும் செல்வம் ஈட்டமுடியும். ஆனால், மணல் அகழ்வை விஞ்ஞான முறைப்படி அகழ்ந்தால் நிலம் பாழ்நிலமாக மாறாது. சுற்றுச்சூழல் மாசுறாது காக்கமுடியும். பொறுப்பற்ற முறையில் கண்ட கண்ட இடங்களில் மணல் அகழப்படின் சுற்றுச்சூழல் மாசுற்று. இந்நிலம் பாழ்நிலமாக மாறும்.

13. வடமராட்சிக் கிழக்குக் கரையோரம் இயற்கை அழகு செறிந்த வெள்ளை மணல் பிரதேசமாகவும், மேற்குக் கரையோரம் கடல் நீரேரிக் கண்டல் காடுகள், சதுப்பு நிலங்களாகவும் வடக்குக் கரையோரம் ஆழமான கடலாகவும் இருப்பது சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு வடமராட்சி பொருத்தமான இடமாகவுள்ளது. ஆழிப்பேரலைக்கு முன்னர் மணற்காடு குடாநாட்டின் பிரதான சுற்றுலாத்துறை இடமாக இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது. ஆகவே, இப்பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலாத்துறை வளங்கள் பயன்பாட்டிற்கு வருமாயின் தொழில் வாய்ப்புகளை உருவாக்கலாம்.

14. அமெரிக்க உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு கைவிடப்பட்ட 'சந்தை நகர் குடிதண்ணீர்த் திட்டம்' புனர்வாழ்வு, புனருத்தாரணப் பின்புலத்தில் மீளவும் முன்னெடுக்கப்படவேண்டும். இதன்மூலம் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர்கள் குடிதண்ணீரைப் பெறமுடியும். கரவெட்டி 'அத்துலு குடிதண்ணீர்த் திட்டம்' புதிய நீர் ஆதாரங்களைப் பயன்படுத்தி விஸ்தரிக்கப்படவேண்டும். கட்டைவேலி - கரவெட்டி, கரணவாய்ப் பிரதேசங்களில் காணப்படும் பல குடியிருப்புகள் கடும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. இதனால், இப்பிரதேசங்களில் குடிதண்ணீர்த் திட்ட விஸ்தரிப்பு ஏற்படுத்துவது மிக அவசியமானது. வல்வெட்டித்துறையில் இன்றுள்ள நீர்விநியோகத்திட்டமும், இங்குள்ள மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யமுடியாதுள்ளது என்பது கவனிக்கத்தக்கது. வடகரையோர மக்கள் தரமான குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். ஆகவே, வடமராட்சிப் பிரதேசத்தில் குடிதண்ணீர்த் திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னெடுக்கலாம்.

### *சுற்றுச் சூழல் சமநிலை பாதிப்பு*

15. வடமராட்சிக் கடல் நீரேரிப் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகளாலும், விறகுப் பஞ்சத்தாலும் பெருமளவு கண்டற்காடுகள் வெட்டப்பட்டுள்ளன. இதனால், சுற்றுச் சூழல் சமநிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, கண்டற்காடுகளில் மீன் வளர்ச்சிக்குப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். வல்லை வெளியில் சவுக்கு மரங்கள் நாட்டப்பட்ட போதும் இப்பிரதேசத்தில் வீசும் கடுங் காற்று, புழுதிப் புயல் போன்றவற்றில் தாக்கத்தைக் குறைக்க முடியாதுள்ளது.

இதனைக் குறைப்பதற்குப் பெரும் எடுப்பில் வல்லைப் பிரதேசம், வடமராட்சிக் கடல் நீரேரிப் பிரதேசம் முழுவது தாவரப் போர்வை ஏற்படுத்தப்படவேண்டும். மணற்காட்டுப் பகுதியில் சவுக்குக் காட்டின் பரப்பளவை அதிகரிக்கவேண்டும். மேலும் வடமராட்சி கிழக்கில் கஜூவும், பேரீச்ச மரமும் சிறப்பாக வளரமுடியும் எனத் தெரிகிறது. சரியான இனத் தெரிவு மேற்கொள்ளப்படின், இப்பிதேசத்தில் கஜூ, பேரிச்சம் பழ உற்பத்தியைக் காணமுடியும்.

16. செல்வச்சந்நிதி முருகன் கோயில், வல்லிபுரம் கிருஷ்ணன் கோயில் ஆகியன முக்கியமான வழிபாட்டுத் தலங்களாகும். பிற இடத்து மக்கள் இங்குவந்து தங்கிச்செல்லக் கூடிய முறையில் தங்குமிட வசதிகள் அமைக்கப்படவேண்டும்.

17. நெல்லியடி நகரம் பட்டினசபை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு, நவீன முறையில் திட்டமிடப்பட்டு பிராந்திய சிறுகைத் தொழில் சேவை மையமாக வளர்க்கப்படவேண்டும். பருத்தித்துறை, வல்வெட்டித் துறை, நெல்லியடி, உடுப்பிட்டி, செம்பியன் பற்று, போக்கறுப்பு ஆகியன முக்கிய சேவை மையங்களாக விருத்தி செய்யப்படவேண்டும். இச்சேவை மையங்கள் இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்கக்கூடிய ஆற்றல் பெற்றவையாக அமையவேண்டும்.

18. வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குப் புதிதாக ஒரு பிரதேச சபை உருவாக்கப்படவேண்டும். இதன் மூலம் இப்பிரதேச மக்கள் தமது உள்ளூராட்சிக் கட்டமைப்பை உருவாக்கித் தமது தேவைகளை நிறைவேற்றமுடியும்.

19. இப்பிரதேசத்தில் காணப்படும் சமூகப் பிரச்சினைகளுக்குச் சிறந்த முறையில் தீர்வுகள் காணப்படவேண்டும். வறிய நிலமற்ற மக்கள் குறிப்பாக, வளரும் சமூகத்தவர்கள் இங்கு அதிகமாகவுள்ளனர். இவர்களின் சமூக, பொருளாதார நிலைகளை உயர்த்தக் கூடிய திட்டங்களுக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். உள்ளூர் மட்டத்தில் பயன்தரக் கூடிய நிலச்சீர் திருத்தங்கள் செய்யப்படவேண்டும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# நிம்மதியுமில்லை! எந்தவித வசதிகளும் இல்லை!! இந்த முகாம் வாழ்க்கை முடிவடைவது எப்போது?

புனிதநகரில் உள்ள தற்காலிக முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் புழுதியின் மீது வீசப்பட்ட ஒரு மலரின் நிலையிலேயே காணப் படுகின்றார்கள்.

நீர் வசதி போதாது. தடுப்புவேலிகள் கிடை யாது. சிறுவர்களுக்குக் கற்றல், கற்பித்தல் உபக ரணங்கள், போசாக்கு உணவு கிடையாது. வைத்திய வசதிகள் இல்லை. போக்குவரத்து, மின்சார வசதியில்லை. இத்தனைக்கும் மத்தி யிலேயே அவர்களின் வாழ்க்கை ஓடுகிறது.

அவர்கள் தமது தொழிலை ஆரம்பிக்கக் கடற்றொழில் உபகரணங்கள் இதுவரை வழங் கப்படவில்லை. பாதிக்கப்பட்டோருக்கான உதவி வழங்குவதிலும் பாகுபாடு.

தொண்டர் நிறுவனங்கள்கூட இந்த மக் களின் நிலையைச் சரியாக உணரவில்லை. இந்த நிலையில் விரக்தியின் விளிம்பில் தமது அன் றாட வாழ்வை நகர்த்திக்கொண்டிருக்கும் இவர் களுடன் எமது உதயன் செய்தியாளர் உரையா டினார்.

அந்த உரையாடலின்போது அவர்கள் உள் ளங்களிலிருந்து வெளிப்பட்ட வெறுப்பும், விரக் தியும் கலந்து உணர்வுகளை வரிகளாக்கி இங்கே தருகின்றோம்.

### பாதிக்கப்பட்டோருக்குப் படகு வழங்குவதிலும் குளறுபடி

*ஏரம்பு செல்வசிங்கம் (வயது 55)*
*தொழில்: கடற்றொழில்*
*சொந்த இடம்: நாகர் கோயில்*



1995 ஆம் ஆண்டு விமானப் படையினரின் புக்காராத் தாக்குதலின்போது எனது மகளான செ.செல்வதி (வயது 17) நாகர்கோயில் மகா வித்தியாலத்தில் உடல் சிதறிப் பலியானார்.

அதன் பின்னர், சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டுமரம், கடற்றொழில் உப கரணங்களை இழந்து வெளியேறினோம். பின்பு கற்கோவளம் பகுதிகளில் அப்பகுதி மக்களின் காணியில் தற்காலிகக் குடிசை அமைத்துக் காலம் கழித்து வந்தோம்.

இந்நிலையில்தான் மீண்டும் சுனாமித் தாக் கத்திற்குள்ளாகி கட்டுமரங்கள், வலைகள், உடை மைகள் போன்றவற்றை இழந்து புனித நகர் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள் ளோம்.

இங்கு 160 குடும்பங்கள் தங்கியுள்ளோம். இங்கு பிரதானமாகக் குடிதண்ணீர்ப் பிரச்சினை யுள்ளது. 160 குடும்பத்திற்கு 6 கிணறுகள் மட் டுமே வெட்டப்பட்டுள்ளன. 10 அடி ஆழமும் 4 அடி சுற்றளவும் கொண்ட கிணறுகளே அமைக் கப்பட்டுள்ளன. இதற்கான கிணற்றுச் சுவர் வீதி மதவுகளுக்கு வைக்கப்படும் 'போக்கி'னால் உரு வாக்கப்பட்டதாகும். இது சுகாதாரமற்றது. இதை நாம் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் பயன்படுத்து கின்றோம்.

பாடசாலைக்குச் செல்லவேண்டிய எமது பிள் ளைகள் சிலவேளைகளில் குளிக்காத நிலையி லும் செல்கிறார்கள். பெண் பிள்ளைகள், ஆண் பிள்ளைகள் என எல்லோரும் இருப்பதால் ஒரே நேரத்தில் பெருமளவிலான மக்கள் இக்கிணறு களைப் பயன்படுத்த முடியவில்லை. இவற் றுக்கு வேலி மறைப்புகளும் இல்லை.

நாம் தற்போது படகுகள், கட்டுமரங்கள் வழங்கப்படாத நிலையிலேயே உள்ளோம். கற்கோவளப் பகுதி கடற்றொழிலாளர்களுக்குக் கூலிக்குத்தான் வேலைசெய்கிறோம். சிலர் வேறு வேலைகளுக்கும் செல்கிறார்கள். அரச நிவாரணம் எமக்குப் போதாது.

நாம் மீண்டும் சொந்தமாகத் தொழில் செய் தால்தான் முன்னேறமுடியும்.

வடமராட்சியின் பல இடங்களிலும் படகு கள் வழங்குவதில் குழறுபடிகள் நடைபெற்றுள் ளன என்று கூறப்படுகின்றது. படகு உள்ளவர் களும் படகுகளுக்குச் சிறுசேதம் உள்ளவர்க ளும், முன்பு படகே இல்லாதவர்களும் படகுக ளைப் பெற்றுள்ளனர். இது எம்மைப் பெரும் வேதனைக்குள்ளாக்கியிருக்கிறது.

இந்நிலையில், புதிய படகுகளைப் பெற்ற வர்கள் பழைய படகுகளையாவது எமக்குத் தந்து உதவினாலும் பேருதவியாக இருக்கும்.

இதனைத் தொண்டர் நிறுவனங்களும் அரச நிறுவனங்களும் கவனிக்கவேண்டும்.

### எஞ்சியவற்றையும் திருடும் திருடர்கள்

*திருமதி சின்னையா செல்வராணி (வயது-55)*
*தொழில்: கடற்றொழில்*
*சொந்தஇடம்: நாகர்கோவில்*



நாம் தங்கியுள்ள முகா மில் சுகாதார வசதிகள் போதுமானதாக இல்லை. சுகாதாரச் சீர்கேட்டினால் நோய்கள் பரவும் ஆபத் தும் உண்டு. நுளம்பு அதிக மாக உள்ளது. நாம் வந்த இந்த ஆறுமாதத்திற்குள் எந்தவிதமான சுகாதாரச் செயற்பாடுகளும் நடைபெறவில்லை. சாதா ரண நோயாளியானாலும் சரி கர்ப்பிணிப் பெண் கள் ஆனாலும் சரி 3மைல் தூரத்தில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசா லைக்குச் சென்றுதான் வைத்திய உதவிபெற வேண்டியுள்ளது.

பெரும் சோதனைகளுக்கும் இடையூறுக ளுக்கும் மத்தியில் உள்ள எம்மிடம் கூடத் திரு டர்கள் வந்து எஞ்சிய உடைமைகளையும் சூறை யாடிச் செல்கிறார்கள். இங்கு எமக்குப் பாது காப்பு இல்லை.

எமக்கு அமைத்துத் தரப்பட்ட தகரக் கொட்டகைகளில் வெயில் நேரம் இருக்கமுடி யாது. கடும் வெப்பம். தற்போது வீசும் கடும் காற்றினால் கூரையாகப் போடப்பட்டுள்ள தக ரங்கள் பிடுங்கப்படுகின்றன. இதையாரும் கவ னிப்பதில்லை.

எனவே, எமது நிம்மதியான வாழ்வுக்குத் தொண்டு நிறுவனங்களும் அரச நிறுவனங்க ளும் உதவி செய்யவேண்டும்.

### சிறு ஊதியமும் இன்றி சேவையாற்றுகின்றோம்

*திருமதி சாந்தசீலன் சரோஜினிதேவி (வயது 19)*
*இவரது கணவர்: கடற்றொழிலாளர்*
*புனித நகர் முன்பள்ளி ஆசிரியை*



இங்கு 45 சிறார்கள் படிக்கிறார்கள். அவர்களுக் கான மேசை, கதிரைகள் போதியளவு இல்லை. ஆசிரி யருக்கான மேசை, கதிரை கள், கற்றல், உபகரணங்கள், புத்தகங்கள் என்பனவும் இல்லை.

இந்தப் பள்ளிக்கூடக் கட்டடம் ஆழிப்பேரலைக்குப் பின் அமைக்கப் பட்டது. அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் அதை அமைத்துக் கொடுத்தது. அதை உத்தி யோகபூர்வமாகத் திறந்துவைக்கக்கூட அந்த நிறுவனம் வரவில்லை.

இருக்கும் பின்ளைகளைக்கொண்டு இதனை நடத்திவருகின்றோம்.

பிள்ளைகளுக்குக் கற்றல் உபகரணங்கள், புத்தகம், கொப்பி போன்றவை முக்கியமானவை.

ஆனால், இவற்றைப் பெறுவதற்குப் பல தொண்டர் நிறுவனங்களையும் சில தர்மவான் களையும் அணுகினோம். 6மாதமாகியும் இது வரை எவ்வித பலனும் கிட்டவில்லை. வறுமை யுடனும் இழப்புகளுடனும் வாழும் பெற்றோரி டமும் இதற்கான வசதிகள் இல்லை.

இங்கு இரண்டு ஆசிரியர்கள் சேவை மனப் பான்மையுடன் ஊழியம் செய்கின்றோம். மற்ற ஆசிரியை அவரது பிள் ளைக்குச் சுகவீனம் காரணமாக (நாம் நேர்கண்ட போது) இன்று வரவில்லை. நானும் அண்மையில் தான் திருமணம் செய் துள்ளேன். எனக்குப் பிள்ளைகள் பிறந்தால் தொண்டு எனச் சேவை செய்யமுடியாது. எனவே, எமக்குச் சிறு ஊதியமா வது பெறுவதற்குரிய ஒழுங்குகள் செய்யபட வேண்டும்.

குடிதண்ணீர் வசதி யும் அப்படித்தான். சிறு வர்களுக்குச் சுகாதார முறைப்படி குடிதண்ணீர் கொடுக்கப்படவேண் டும். அதை இங்கு எம்மால் பின்பற்ற முடிய வில்லை.

ஏனைய நகரப்புறங்களில் நடப்பது போல் இந்தச் சிறுவர்களுக்கு பாலாவது கொடுக்கப் படவேண்டும்.

### மருத்துவத் தாதிகளின் சேவை மருந்துக்கும் இல்லை

*தேவராசா (வயது 55)*
*ஜெகசோதி (வயது 49) தம்பதிகள்*
*தொழில்: கடற்றொழில்*
*சொந்தஇடம்: நாகர்கோயில்*



1983 ஆம் ஆண்டு இராணுவத்தாக்குதலின் போது இடம்பெயர்ந்து மீண்டும் ஒரு மாதத் தின்பின்பு சொந்த இடம் சென்று மீண்டும் 1983 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கை யால் படகுகள், வலைகள் என சுமார் 9 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்த நிலை யில் நாகர்கோயிலை விட்டுவெளியேறினோம்.

பின்னர் கற்கோவளம் பகுதியில் தனியார் காணிகளில் தற்காலிக வீடுகளை அமைத்துத் தங்கித் தொழில் செய்துவந்தோம். இப்போது மீண்டும் ஆழிப்பேரலையினால் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்த நிலையில் புனிதநகர் முகாமில் வந்து தற்காலிக மாகத் தங்கியுள்ளோம்.

மழை, காற்று, வெயில் என இந்தத் தகரக் கொட்டகையில் வாழ மனமின்றி வாழ்கின்றோம்.

எமக்குப் போக்குவரத்துச் செய்வதற்குத் தர மான வீதியில்லை. சுமார் ஒன்றரை மைல் நீள மான வீதிக்கென நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் பொறுப்பை புலோலி பிரதேசசபை ஏற் றது. அத்துடன் சரி இன்று 6 மாதத்திற்கு மேலா கியும் இந்த வீதியில் அபிவிருத்திப் பணிக ளும் செய்யப்படவில்லை. பெரும் சிரமத்து டன்தான் நாம் போக்குவரத்துச் செய்யவேண் டியுள்ளது. நாம் பிரதான போக்குவரத்து வீதிக் குச் செல்வதற்கும் இந்த வீதி வழியாகத்தான் செல்லவேண்டும். அதுவும் மேற்படி பிரதான வீதியில் பஸ் சேவை 4 தடவைகள்தான் நடை பெறுகின்றது. முற்பகல் 10.30 மணிக்கும் முற் பகல் 11 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும் பிற் பகல் 4.15 மணிக்கும் தான் இவை நடைபெறுகின் றன. இந்தச் சேவைகளை நாம் தவறவிட்டால் நடந்து தான் செல்லவேண்டும்.

160 குடும்பங்கள் இருக்கும் எமது இடைத் தங்கல் முகாமிற்கு கிராமசேவகர் வரமாட் டார். நாம்தான் 1/2 மைல் தூரமுள்ள அவரது காரியாலயத்திற்குச் செல்லவேண்டும். அதுவும் வாரம் இருநாள்கள் மட்டுமே அவரின் சேவை.

மருத்துவத் தாதிகளின் சேவை எமது இடைத் தங்கல் முகாமிற்கு மிகவும் தேவையான ஒன்று. ஆனால், அச்சேவை இன்று வரை இல்லை.

நாகர்கோயில் மகாவித்தியாலயம் தற்போது கிராமக்கோட்டடியில் இயங்கி வருகின்றது. அந் தப் பாடசாலைக்கும் எமது புனித நகர் இடைத் தங்கல் முகாமிற்கும் இடையில் 3 மைல் தூரம். இந்தப் பாடசாலைக்கு எமது பிள்ளைகள் பெரும் கஷ்டத்தின் மத்தியில் கால்நடையாகச் சென்று தான் கல்வி கற்கிறார்கள்.

நாம் மீண்டும் தொழில் செய்வதற்குப் படகு கள், வலைகள், இயந்திரங்கள் போன்றவற்றைத் தந்துதவினால்தான் ஊக்கமுடன் உழைத்து எமது குடும்பத்தை எம்மால் காப்பாற்ற முடியும்.

### வனாந்தர பூமியில் வாழுகின்றோம் நாம்

*சுப்பையா மகாலிங்கம் (வயது 48)*



1995 ஆம் ஆண்டு நாகர்கோயில் மகாவித் தியாலயத்தின் மீது புக்காரா விமானம் குண்டு வீசித் தாக்கியதில் எனது மகன் ம.சண்முகவடிவேல் (வயது 17) உடல் சிதறிப் பலியா னார்.

அப்போது இடம்பெயர்ந்த நாம் கற்கோவளம் பகுதியில் வந்து தற்காலிக இடங்களில் வாழ்ந்தபோது ஆழிப்பேரலை வந்து உள்ளதையும் அள்ளிச் சென்றது. இத னால், கட்டுமரம், வலைகள் என ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்தோம்.

இந்தப் புனிதநகர் முகாமில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை. எமது கடற் றொழிலுக்கு ஏற்ற இடமுமில்லை.

ஏதோ சில தொண்டர் நிறுவனங்கள் தாமும் உதவுவோம் என ஒன்றுக்கும் உதவாத வனாந் தர பூமியான இந்த நிலத்தில் எம்மைக் குடிய மர்த்தியுள்ளன. நாமும் இந்த இடைத்தங்கல் முகாமில் சிறிதாவது நிம்மதி கிடைக்கும் என வந்தோம். தற்போது எப்போது வெளியேறு வோம் என்ற நிலையிலுள்ளோம். எமது பிள் ளைகள் படிப்பதற்கு மின்சார வசதி கிடையாது. தேவைப் பட்டவுடன் எமக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்குப் பொதுச் சந் தையோ பல சரக்குக் கடைகளோ கிடையாது. பொருள்களைப் பெறுவதற்குக் குன்றும் குழியு மான பாதையால் பல மணி நேரம் நடந்து செல்லவேண்டும்.

எமது குறைகளை நாம் தெரிவிப்பதற்கு அரசசார்பான ஒரு செயலகம் இப்பகுதியில் அமைக்கப்படவேண்டும்.

இரு சிறு அறைகளைக் கொண்ட இந்த வீடு களில் இளம்பிள்ளைகளும் திருமணமான இளங்குடும்பங்களும் இருப்பதால், கலாசாரச் சீரழிவுகள் நடப்பதற்கு வழிகள் ஏற்படலாம். எனவே, தமக்கு நிரந்தர வீடுகளை விரைவில் அமைத்துத் தரவேண்டும். அல்லது எமது சொந்த இடங்களுக்கு எங்களைப் போக அனுமதிக்க வேண்டும்.

**சி.சுந்தரலிங்கம்**

கடற்றொழில் செய்யமுடியாத அளவிற்குப் பாகுபாடு காட்டப்பட்டு வருகின்றது. இதனால், நாம் தற்போது சுதந்திரமாக எமது கடற்றொழி லைச் செய்யமுடியவில்லை வந்தேறு குடிகளா கவே ஓர் அடிமை போல் வாழ வேண்டியுள்ளது.

எமக்குள்ளேயே நாம் பாகுபாடு காட்டும் போது நாம் சிங்கள இனத்திடம் இருந்து எப் படி நியாயத்தை - நீதியை - எதிர்பார்க்க முடி யும். இதேபோல்தான் எமக்குக் கடற்றொழில் உபகரணங்களைப் பெறுவதிலும் நாம் பாகு பாடு காட்டப்பட்டு ஒதுக்கப்பட்டு வருகின்றோம். இதை உரியவர்கள் இனங்கண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். ✱

**வடமராட்சி கிழக்கு இடைத்தங்கல் முகாம் மக்கள் மனங்களில் இருந்து................ 5**

## பிராந்திய சிறுகைத்தொழில்....

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு காணப்படும் சமூகப் பிரச்சினை களுக்கு முக்கியமான காரணிகள் நான்கு இனங்காணப்பட்டுள்ளன.

1. நீண்டகாலமாக இங்கு நிலவிய சாதிக் கட்டமைப்பும் சமூகப் புறந்தள்ளலும் இன்று ஓரளவு குறைந்த போதும் அதனால் ஏற் பட்ட தாக்கங்களும் விளைவுகளும் இன்று முற்றாக நீங்கவில்லை.

2. 20ஆண்டு கால யுத்தம் காரணமாகப் பொருளிழப்பு, உயிரிழப்பு ஆகியவற்றால் விதவைகள், அநாதைகள் மற்றும் உளப் பாதிப்புற்றோர் உருவாகியுள்ளனர்.

3. ஆழிப்பேரலை தாக்கத்தாலும் பொருள் இழப்பு, உயிரிழப்பு, குடும்பச் சீர்குலைவு, கிராம அழிவு.

4. 20 ஆண்டுகாலமாக ஏற்பட்ட சர்வ தேச இடப்பெயர்வினால் பெரும் எண்ணிக் கையான வயோதிபப் பெற்றோர்கள் தமது இளந்தலைமுறைகளின் கவனம், பராமரிப் பின்றித் தனித்து வாழும் துன்பநிலையில் காணப்படுகின்றனர்.

முதல் மூன்று பிரிவினரின் சமூகப் பிரச்சி னைகளுக்குத் தீர்வு பொருளாதாரம் மற்றும் சமூக விழுமிய மாற்றம், உளவளத்துணை ஆகியவற்றில் தங்கியுள்ளது. நான்காவது பிரிவினரில் பெரும்பாலானோர் பொருளா தாரப் பிரச்சினையை எதிர்நோக்கவில்லை. எனினும், இவர்கள் யாவருக்கும் சமூகத்தின் அரவணைப்பும், சமூக சேவைத் திணைக் களத்தின் கவனமும், பராமரிப்புச் சேவை யும் மிக அவசியமாகத் தேவைப்படுகின் றது.

இப்பிரதேசத்தில் பல வீட்டுத்திட்டங்கள் அரச, அரசசார்பற்ற மற்றும் சர்வதேச உத வித் திட்டங்கள் மூலமும் முன்னெடுக்கப் படுகின்றன. உலக வங்கித் திட்டத்தின் மூல மும் மற்றும் ஆழிப்பேரலை புனர்வாழ்வுத் திட்டத்தின் மூலமும் பெரும் எண்ணிக்கை யான வீடுகள் இப்பிரதேசத்தில் நிர்மாணிக் கப்படவேண்டும். இத்தகைய வீட்டுத் திட் டங்கள் மூலம் இம்மக்கள் இதுவரை கால மும் எதிர்நோக்கிய சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு அவர்கள் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்ல வழிவகுப்பது மிக அவசியம்.

மேற்குறித்த முறையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தால் வட மராட்சிப் பிரதேசம் கடந்த மூன்று தசாப்தங் களாகக் கண்டிராத பின்னடைவில் இருந்து விடுவிக்கப்பட்டு தமது பிரதேச வளங் களைப் பயன்படுத்தித் தமது பிரதேசத்தி லேயே நல்லதொரு வாழ்வை அமைக்க லாம். மேலும் கடந்த நூறு ஆண்டுகாலமாக இடம்பெற்றுவந்த குடிவெளியேற்றத்தின் போக்கும் குறைவடையலாம். (முற்றும்)




வெளிநாடு செல்வதற்காக -----
வெளிநாட்டில் உயர்கல்விக்கான -----

IELTS

NEW BATCH STARTS ON 6th August 2005

4 different Skills handled by 4 different Specialists

LONDON ENGLISH COLLEGE

NO:105, Arasady Road, Jaffna.
T.P: 021-2225889, 0777252180

BCNS

No: 229A, Mitcham Road,
Tooting, London, SW 17910 UK

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 18 . 06 . 1949



உதிர்வு 29 . 07 . 2005

எமது நண்பன் சதீஸ் குசேந்திரன் அவர்களின்
அன்புத் தந்தை

**அமரர் பிலிப்பையா லேனாட் ஜெயராஜா**

அவர்கள்

அன்பினால் எம்மையெல்லாம் இன்பத்தில் ஆடவைத்தாய்
துன்பம் துயர் மறந்து துள்ளிவர வேணுமெனத்
துடித்துநின்ற உன் உயிரை
கள்ளத்தனமாக கவர்ந்து விட்டான் காலன்
உன்னை என்றுதான் காண்போம் இனி....

(சி-44151) (25-11-15-12)
பி.சி.ஹவுஸ் யாழ்ப்பாணம். நண்பர்களும் சக ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### பிலிப்பையா லேனாட் ஜெயராஜா



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா லேனாட் ஜெயராஜா அவர்கள் (29.07.2005) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை பிலிப்பையா, பிலிப்பையா மரியம்மா ஆகியோரின் ஆறாவது புத்திரனும், மேரி றெஜினாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, அக்கினேஸ் ஆகியோரின் மூத்த மருமகனும், கிருசாந்தன் (லண்டன்), சதீஸ் குசேந்திரன் (தொழில்நுட்பவியலாளர் - பி.சி.ஹவுஸ்), குளோடியஸ் செனன் (மாணவன் - தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.08.2005) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் புனித சூசையப்பர் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டு, அச்சுநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
அச்சுவேலி. (சி-44150) (25-11-15-12) **சதீஸ் (மகன்).**

### செல்வி பொன்னையா சிவசோதி

**(மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை இளைப்பாறிய உப அதிபர்)**



மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவசோதி (மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ. க.த.க. பாடசாலை இளைப்பாறிய உப அதிபர்) நேற்று (30.07.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் பொன்னையா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் அமரர் நாகரத்தினம், அமரர் பஞ்சரத்தினம், சொர்ணரத்தினம், அமரர் சந்திரராசா, பகவதி ஆகியோரின் சகோதரியும் அமரர் சிவசிதம்பரம், அமரர் விஸ்வலிங்கம், அமரர் அப்புத்துரை, புஸ்பராணி, சொக்கநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*பொன்னாலை வீதி,*
*மானிப்பாய் மேற்கு,*
*மானிப்பாய்.* (38388) (25-11-15-12)

தகவல்:
**சுகந்தினி மகாலிங்கம் (பெறாமகள்).**

## சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று காலை 9 மணிமுதல் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவிருக்கின்றது.

சட்ட மாணவர் இந்து மகா சபையின் ஏற்பாட்டில் இக்கருத்தரங்கு இடம்பெறுகின்றது. (3)

### மரவேலை பயிற்சி நாளை ஆரம்பம்

சுன்னாகத்தில் அமைந்துள்ள அரசாங்க மரவேலை பயிற்சி பாடசாலையில் பயிற்சி நெறிகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. 25 மாணவர்கள் இப் பயிற்சி நெறிக்கென தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

புதிய மரவேலை பயிற்சி ஆரம்ப விழா யாழ்ப்பாண மாவட்ட தொழிற்திணைக்கள அலுவலர் பி.ராகவன் தலைமையில் ஆரம்பமாகும். நியாப் திட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் வி.சாம்பசிவம் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைப்பார்.

பயிற்சியில் ஈடுபடும் பயிற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும். (3-152)

## சேவைநலன் பாராட்டு விழா

தென்மராட்சி கல்வி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவுக்கு இன்று சேவைநலன் பாராட்டு விழா நடத்தப்படுகிறது.

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்கள் இந்த விழாவினை ஏற்பாடு செய்துள்ளனர். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய அதிபர் த.கந்தையா தலைமையில் நடைபெறும். (3-117)

**தையல் ஆள் தேவை**

*பிளவுஸ் தைப்பதில் அனுபவம் உள்ள பெண்கள் தேவை.*
*(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)*

தொடர்பு:
இல 25, ஸ்ரேசன் வீதி,
கொக்குவில். (38385)

**தரம் புலமைப்பரிசில் 2005**
**5 மாணவர்களுக்கான**
**இரவுநேர இலவச வகுப்பு**
திங்., செவ்., புதன், வியா., வெள்.
மாலை 7.00 - 9.00 மணிவரை
ஆரம்பம் 01.08.2005 (திங்கள்) பு.நே.
* முற்றிலும் பரீட்சைக்கு ஏற்ற முறையில் கற்பிக்கப்படும்.
* ஞாயிறுதோறும் எதிர்பார்க்கப்பட்ட வினாக்களுடன் பரீட்சை (25-11-15-12)
* அனுமதி இலவசம்

**நாவலர்** (38389) *ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.*

**அற்புதக் குழந்தைஇயேசுவுக்கு நன்றி**

குழந்தை இயேசுவிடம் மிக உருக்கமாக வேண்டியபோது என் வேண்டுதல் கேட்கப்பட்டு எனக்கு வரமளித்தார். அற்புதக் குழந்தை இயேசுவுக்கு நன்றி.

(38381) (25-11-15-12) பெரியவிளான் பக்தர்.

**மனோகரா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா, கோவை சரளா மற்றும் பலர் நடித்த
**பிரியசகி**
காட்சி நேரம்: 10.30. 2.30, 6.30, 9.30.

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக
இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
**தாஸ்**
(C741380)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.). (ரீல்ஸ்)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
**பெப்ரவரி 14**
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்.



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின
சினேகா,கிரண், வடிவேல் நடித்த
**சின்னா**
அடிதடி, காதல், நகைச்சுவை
கா.நே.: 10.30,2.30, 6.30,9.30. (பு.நே.)
(ரீல்ஸ்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகரத்தினம் இரத்தினசிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் காரைநகர், ஆலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் 30.07.2005 சனிக்கிழமை பிரான்சில் காலமானார்.

இவர் நாகலிங்கம் - இரத்தினம்மா தம்பதியின் அன்பு மகளும் முகாந்திரம் முத்துக்குமார் தம்பதியின் மருமகளும் காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும், தில்லைரத்தினம், இரத்தினகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரஞ்சி, கலாமாலினி (சுவிஸ்), கலாஜோதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நந்தினி (பிரான்ஸ்), யோகாநந்தன் (சுவிஸ்), செந்தில்நாதன் (சுவிஸ்), ஆகியோரின் மாமியாரும் சிந்துஜா, சாளற், அபிசா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற இரத்தினலிங்கம், நாகேஸ்வரி, சத்தியபாமா, சண்முகநாதன், யுவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை, வைத்திலிங்கம், அம்பலவாணர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**இரத்தினகுமார்**
**T.P.: 0033667451703,**
**ஜீவா**
(சி-44149) (25-11-15-12) **T.P.: 0033664044668**

### திருமதி விஜயராணி சிவராசா (ரஜனி)



யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத்தெருவை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி விஜயராணி சிவராசா அவர்கள் 30.07.2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தவமணி தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற சீவரெட்ணம், செல்லப்பாக்கியம் தம்பதிகளின் மருமகளும் சிவராசாவின் அன்பு மனைவியும் ஸ்ரீலக்ஸ்மனின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.08.2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

*முதலாம் குறுக்குத்தெரு,*
*(வேம்படி பாடசாலை முன்பாக),*
*யாழ்ப்பாணம்.*
**T.P.: 021 2225782** (38383) (25-11-15-12)

தகவல்:
**சிவராசா (கணவர்),**
**ஸ்ரீலக்ஸ்மன் (மகன்)**

### திருமதி கோபாலகிருஷ்ணன் ஆச்சிமுத்து



புனித அந்தோனியார் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும், பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலகிருஷ்ணன் ஆச்சிமுத்து அவர்கள் 30.07.2005 சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.


அன்னார் கோபாலகிருஷ்ணனின் அன்பு மனைவியும், செல்லன் - பாறி தம்பதியரின் மகளும், சிவநேசம், செல்வநாயகம், (லங்கா சிமெந்து லிமிட்), செல்வராணி (ஜேர்மனி), யோகராசா, தேவராசா (மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை), விஜயகுமார் (பிரதேச சபை, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஞானரத்தினம் (உத்தரவுபெற்ற நில அளவையாளர்) மற்றும் மகிழ்ராசா (ஜேர்மனி), லீலாவதி, சரஸ்வதிதேவி, பத்மலோஜினி (ஆசிரியர், த.க.பாடசாலை, சண்டிலிப்பாய்), பாக்கியரத்தினம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற அருந்ததி, தங்கம் மற்றும் இரத்தினம், இராசமணி, ஞானமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிரிதரன் (கொழும்பு), சத்தியதரன் (பிரான்ஸ்), கோமதி (டென்மார்க்), துஷ்யந்தி (சுவிஸ்), தமயந்தி (கனடா), சேந்தரன் (வவுனியா வளாகம்), தாமரா (U.K), அசோக்குமார் (கொழும்பு),மதுரா (ஜேர்மனி), மீரா (ஜேர்மனி), விவிதா, நிவேதா (யூனியன் கல்லூரி), சுரேகா (மல்லாகம் மகா வித்தியாலயம்), மகிபரன், பானுஷா (நாகேஸ்வரி வித்தியாசாலை மாணவிகள்), தட்சாகிரி (இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
*புனித அந்தோனியார் வீதி,* **மக்கள், மருமக்கள்,**
*சுன்னாகம்.* (சி-44147) (25-11-15-12) **பேரப்பிள்ளைகள்.**

### திருமதி நாகேசு கண்மணி



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேசு கண்மணி நேற்று (30.07.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் சின்னையா நாகேசுவின் அன்பு மனைவியும் சந்திரசேகரம் (ராசு), ஞானசேகரம் (கிளி), ஜெகசேகரம் (ஜேர்மனி), குலசேகரம் (குலம் - ஜெகஜோதி என்ஜினியரிங் வேக்ஸ் யாழ்.), ஜெகதாம்பிகை காலஞ்சென்ற ராஜசேகரம், ஜெகதீஸ்வரி, குணசேகரம் ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருபா ரஞ்சினி, ஜெயமலர் (கனி), வனஜா, பரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொத்துக்கட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நவாலி தெற்கு,* **குலசேகரம் (குலம்),**
*மானிப்பாய்.* (38387) (25-11-15-12) **மகன்**



யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் கூட்டுறவு மாநாடு நேற்றுக்காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் கலந்துகொண்ட தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரன், கி.சிவநேசன், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், தமிழீழ நிர்வாக சேவையின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் விஜிதரன், துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன், தமிழீழ நிர்வாகசேவையின் யாழ். மாவட்ட கூட்டுறவுப் பகுதிப் பொறுப்பாளர் புஸ்பகுமார் ஆகியோரையும் மற்றும் கூட்டுறவாளர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: பிரபா)

# தனியார் மருத்துவ நிலையங்களுக்குச் செல்வதை டாக்டர்கள் கடமைநேரத்தில் தவிர்ப்பது நல்லது

## தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை31

பொது மருத்துவ மனைகளுக்கு மிகவும் பாதிக்கப்பட்டவர்களும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களுமே சிகிச்சைக்காக வருகின்றனர். இவர்களைக் கவனிக்காது புறந்தள்ளிவிட்டு தனியார் சிகிச்சை நிலையங்களுக்கு கடமை நேரத்தில் மருத்துவர்கள் சேவையாற்றச் செல்வது தவிர்க்கப்பட வேண்டும்.

- இப்படியான வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளார் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்கிரமன்.

தனியார் ஆங்கில மருத்துவ சேவையாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள தேசம் கடந்த காலங்களில் எமது மருத்துவ சேவையை பின்தள்ளும் நிலைக்கே இட்டுச் சென்றுள்ளது. ஆனால் தனியார் மருத்துவ சேவைகள் மக்களுக்கு அரிய பல சேவைகள் புரிந்து வருகின்றன. அந்த நிலையில் எமது மருத்துவ சேவை தரம் குறையாது இருக்க சேவையின் தரத்தை மேம்படுத்த அனைவரும் ஒன்றுதிரண்டு உழைக்க வேண்டும். அதற்காகத்தான் தனியார் ஆங்கில மருத்துவ சேவையாளர் சங்கத்தை உருவாக்க முயற்சி செய்தேன். ஆனால் செயற்குழுவின் செயற்பாடுகள் போதிய வேகம் பெறவில்லை. இதனால் தனியார் மருத்துவ மனைகளின் சேவை மேம்பாட்டில் சில குறைபாடுகள் தோன்றலாயின. இனிவரும் காலங்களில் அவ்வாறன ஒரு சூழ்நிலை உருவாகாமற் பாதுகாப்பது உங்களுடைய பொறுப்பு என்றார். புதிய நிர்வாகத்தை உருவாக்குமாறு கோருகிறீர்கள் அதற்கமைவாக புதிய நிர்வாகத்தை இச்சபை தெரிவுசெய்து யாப்புத் தயாரித்து அரசிற் பதிவு செய்வதற்கு ஒழுங்கு செய்ய வேண்டும்.

அரச மருத்துவ பலவீனம் அடைந்த போது அதற்கு தனியார் ஆங்கில மருத்துவ சேவை மூலம் பலம் சேர்த்தவர்கள் நீங்கள். உங்கள் அர்ப்பணிப்பினை தேசம் ஒரு போதும் மறக்காது. பொது மருத்துவமனைகளுக்கு மிகவும் பாதிக்கப்பட்டவர்களும், வறுமைக்குட்பட்டவர்களுமே வருவதுண்டு. இவர்களை கவனிக்காமற் புறந்தள்ளிவிட்டு தனியார் சிகிச்சை நிலையத்திற்கு கடமை நேரத்தில் சேவையாற்றச் செல்லுதல் தவிர்க்கப்படல் வேண்டும். நிலையத்தில் ஏற்படும் குறைபாடுகளுக்கு நிலையத்தை இயக்கும் உரிமையாளர்கள், பொறுப்பு மருத்துவர்களே, பொறுப்புடையவர்களாவர். மருத்துவர்கள் தரத்திற்கும் பயிற்சிக்கும் ஏற்ப செயற்பட முன்வரவேண்டும். மக்கள் எமது பகுதி மருத்துவ சேவையில் நம்பிக்கை இழந்து தென்னிலங்கை நோக்கிப் படையெடுக்கின்றனர். இந்த நிலைமாறி எமது தாயகப் பிரதேசத்தில் நல்லதொரு மருத்துவ சேவை மக்களுக்கு கிடைக்க தங்கள் ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம். அதேவேளை பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு இச்சங்கம் சென்று சேவையாற்ற முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் தனியார் ஆங்கில மருத்துவ சேவையாளர் சங்க நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது.

இக் கலந்துரையாடல் 17ஆம் திகதியன்று யாழ்ப்பாண சித்த மருத்துவக் கல்லூரியில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில் பொது மருத்துவ சேவை, நிபுணத்துவ சேவை, பற்சிகிக்சை, தோல் சிகிச்சை, ஆய்வுகூட சேவை செய்வோர் எனப் பலரும் பங்குபற்றினர். கலந்துரையாடலில் பங்குகொண்டோர் இங்குள்ள ஆய்வுகூட சேவையில் நம்பகத்தன்மை அற்றுப்போவதாகத் தெரிவித்தனர். அதேவேளை பல நிலையங்கள் நிபுணத்துவ சேவை வழங்கும் போது மக்களுக்கு ஏற்ப வழங்குவதில்லை எனவும் பிரஸ்தாபித்தனர்.

அத்துடன் ஒருவரின் தராதரத்திற்கு அப்பால் மருத்துவ சேவை வழங்கப்படுவதையும் சுட்டிக்காட்டினார். ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் கருத்துக் கூறுகையில் **Histology, Thyroxin** ஆய்வைத் தவிர ஏனையயாவும் இங்கு செய்யலாம் எனத் தெரிவித்தனர். மானிப்பாய் கிறீன் மருத்துவ மனைப் பொறுப்பாளர் தங்கள் ஆய்வு கூடத்தில் **Thyroxin** ஆய்வு செய்யலாம் எனக் கூறினார். சம்பந்தன் பெயரில் மூன்று நிறுவனங்கள் இயங்குவதால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் தெரிவித்தனர். (ஐ-3)

---

### கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து சடலத்தை மீண்டும் பொலீஸாரிடம் இருந்து பொறுப்பேற்குமாறு யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதேவேளை, சடலம் வைக்கப்பட்ட பேழையை அங்கிருந்து அகற்றுவதற்கு முன்பாக அதனை சோதனையிடுவதற்கு பொலீஸார் நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரினர். அதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. அதன் பின் இராணுவத்தின் பொறியியல் பிரிவினர் அங்கு வரவழைக்கப்பட்டு பிரேதப் பெட்டியினுள் வெடிபொருள்கள் ஏதாவது உள்ளனவா என பரிசோதிக்கப்பட்டது. அதன் பிறகு சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் கையளிக்கப்பட்டது.

உயிரிழந்த இளைஞனின் தந்தையார் நேற்று சடலத்தைப் பொறுப்பேற்க முன்வந்தார். அவரது வேண்டுகோளின் பேரில் சடலம் அவரிடம் கையளிக்கப்பட்டது.

வைத்தியசாலையில் இருந்து சடலத்தைப் பெற்று மூன்று மணி நேரத்தினுள் அதனை அடக்கம் செய்துவிடவேண்டும் என்ற நிபந்தனையுடனேயே சடலம் அவரிடம் கையளிக்கப்பட்டது.

உரிய நிபந்தனையின் பேரில் சடலம் முறைப்படி அடக்கம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பருத்தித்துறைப் பொலீஸாருக்கு உத்தரவிட்டது. (ஐ-3)

---

### அமைதி வழியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிறுத்தி வாதாடப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையில் நடைபெற்றுவரும் சமரசப் பேச்சுகளில் சட்ட பூர்வ ஆலோசனைகளை வழங்குவதற்கும் இலங்கை வாழ் தமிழர்களுக்கு அரசியல் ஆதரவு வழங்கவும் விரும்புவதாக இந்த மையம் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தது.

சட்டத்தரணியும் ஜோர்ஜ் ரவுண் பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியருமான டேவிட் கோல்லே இந்த மையத்தின் சார்பாக வாதாடினார்.

தடைசெய்யப்பட்ட பட்டியலில் இந்த அமைப்புகள் இருப்பினும் அவற்றின் அமைதிவழி நடவடிக்கைகளுக்கு சட்டபூர்வமாக ஆதரவளிக்க உரிமையுண்டு என்பதனை நீதிமன்றம் ஏற்றிருப்பதனை பாராட்டுவதாக டேவிட் போல் இந்த தீர்ப்புத் தொடர்பாக தனது கருத்தினையும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு அமைப்புகளைத் தடைசெய்வதற்காக பயன்படுத்தப்படும் அமெரிக்க தேசாபிமான சட்டத்தின் சில சட்ட பிரிவுகளுக்கு அமெரிக்க காங்கிரஸ் போதிய அளவு விளக்கம் அளிக்க முயற்சிக்கவில்லையென அமெரிக்க நீதிவான் ஒட்ரி கொலின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில் தீர்ப்பளித்துள்ளார்.

இந்தச் சட்டம் சாதாரண மனிதர்கள் புரிந்து கொள்ளத்தக்க வகையில் இயற்றப்படவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

---

# இலங்கை வெற்[றி]

கொழும்பு,ஜூலை

தம்புள்ள விளையாட்டரங்கில் [..] நடந்த இலங்கை - இந்திய அணிகளுக்[..] யிலான முதலாவது ஒரு நாள் ஆட்ட[..] இலங்கை வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்[..] அணி 205 ஓட்டங்களைப் பெற்றது. பதி[..] குக் களமிறங்கிய இலங்கை அணி 9 [..] கெட் டுக்களை இழந்து 209 ஓட்டங்க[..] பெற்றது. (3

---

### ஐ.தே.கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி போராட்டத்தின் இரண்டாம் கட்டம் அடு[..] வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது என் று[..]

இப்போராட்டத்தின் ஓர் அங்கமாக [..] வீடாகச் சென்று கட்சிக்கு உறுப்பினர்க[..] சேர்க்கும் பணி முன்னெடுக்கப்படும் என்[..] - கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்[..]

---

### இவ்வருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் - தெரியவருகிறது.

இதேவேளை -

தபால் மூல வாக்களிப்புக்கான படி[..] களை அச்சிடும் பணியை தேர்தல் தி[..] களம் ஆரம்பித்துள்ளது என்றுத் தெரிவி[..] பட்டது. (

---

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த இரு வாரங்களில் பிரசாரப் [..] ஆரம்பிக்கப்படவிருக்கின்றது என்[..] அமைச்சரவைப் பேச்சாளரும் அமை[..] மான நிமால் சிறிபால டி சில்வா தெ[..] தார். (


நிலவு.com இன்
புதிய வெளியீடு
Learning CDs
Adobe Premiere 6.5
Pinnacle STUDIO 9
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
275, யாழ் வீதி, மானிப்பாய்.
0714 801391

PC UPGRADE[S]
தரமுயர்த்த[ல்]
உங்கள் பாவனையில் உள்ள கணனிகளை தற்கால தொழில்நுட்பத்திற்கேற்ப அதி நவீன கணனிகளாக மாற்றித்தரப்படும்
■ உங்கள் கணனிகளின் பரிசீலனை இலவசம்
■ உங்கள் வீட்டிற்கு / அலுவலகத்திற்கு எமது தொ[..] நுட்பவியலாளர்கள் வந்து பரிசீலிக்கும் வசதி
MICRO PC SYSTEM
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5[..]
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773[..]

50 சதம் 50 பேரிடம் 50 தடவை திருடினால் தப்பா ?
வேடிக்கை

அதிரடி விலைக் கழிவில்
10500/=
வீடுகளில், அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய முறையில் டயலொக் G.S.M, மொபிரெல் G.S.M மேசைத் தொலைபேசிகள் பூட்டித் தரப்படும்.
டயலொக் 500/=, மொபிரெல் 300/= பைக்கேச் இணைப்புகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
தொடர்புகளுக்கு:
பவர் செலூலர் டிரேடிங் கம்பனி
Office 185, முதலாம் மாடி கஸ்தூரியார் வீதி,
(வின்சர் தியேட்டர் எதிராக)
Shop: 205/01 கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.
T.P.: 0712 - 399220, 0714 - 182500
(C-43663) (38-11-45)

IIS
COMPUTER COURSES
ஆரம்பமாகியுள்ள புதிய பிரிவுகளுக்கு IIS நிறுவனம் தனது 10வது வெற்றியாண்டுச் சிறப்பு கட்டணச் சலுகைகளை வழங்கிவருகிறது. இச்சலுகை 31.07.2005 வரை மட்டுமே என்பதை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்
Director
IIS, # 100 Clock Tower Road,
Jaffna.
(சி-44378) (11-45 -38)


## மரண அறிவித்தல்

### பிலிப்யோசப் இராசநாயகம்

(இளைப்பாறிய இராணுவ அதிகாரி)

நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப் யோசப் இராசநாயகம் அவர்கள் நேற்று சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினாவதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவராவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அமல ரூபா அலோசியஸ்
(மகள்)
ரூப ஸ்ராண்ட், கரவெட்டி (சி-44152)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# 20 நாடுகளுக்கு நிமிடத்திற்கு ரூ.11/- மட்டுமே.

## செக்கன் அடிப்படையில் கட்டணங்கள்

### டயலொக் IDD இன் புதிய பரிமாணம்

இப்பொழுது 20 நாடுகளுக்கான IDD அழைப்புக் கட்டணம் நிமிடத்திற்கு ரூ.11/- மட்டுமே.

எந்தவொரு நாடுகளுக்குமான IDD அழைப்புகளுக்கு செக்கன் அடிப்படையிலே கட்டணங்கள் அறவிடப்படும்.

எனவே KIT இணைப்பு மற்றும் ஏனைய டயலொக் இணைப்புகள் மூலம் IDD அழைப்புகளை மேற்கொள்ளுங்கள்.

| நாடுகள் | | | |
|---|---|---|---|
| அமெரிக்கா | ரஸ்யா | புருனை | பிரேசில் |
| கனடா | சீனா | மொங்கொலியா | கொலம்பியா |
| சிங்கப்பூர் | சைப்பிரஸ் | அமெரிக்க சமோவா | மொரிசியஸ் |
| ஹொங்கொங் | சன் மரினோ | அலஸ்கா | பஹாமாஸ் |
| மலேசியா | தாய்வான் | மெக்சிக்கோ | பேர்மியூடா |

kit®
Keep In Touch

எல்லா KIT இணைப்பிலும் IDD வசதி உள்ளது.

டயலொக் GSM

எதிர்காலம் இன்றே.

Masters DDB

# கொங்கிரீட்டின் உபயோகம் பற்றி அம்புஜா நிறுவனம் கருத்தரங்கு

'கலவர சூழ்நிலையில் நிர்மாணம்' எனும் தொனிப்பொருளில், கொங்கிரீட் மற்றும் அதன் பயன்பாடுகளில் மிகவும் பிரசித்திபெற்ற நிபுணர்களுள் ஒருவரினால் அண்மையில் கொழும்பில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. இலங்கையின் மூன்று ஆயுதப்படைகளினதும் பொறியியல் பிரிவுகளைச் சேர்ந்த ஏறத்தாழ 50 உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இலங்கை அம்புஜா நிறுவனத்தினால் நடத்தப்பட்ட தொழில்நுட்ப விரிவுரைகளின் வரிசையில் எட்டாவதில் விரிவுரையாற்றிய அதன் தாய் நிறுவனமான குஜராத் அம்புஜா சீமெந்தின் சிரேஷ்ட உப தலைவரான (தொழில்நுட்ப சேவைகள்) சைரஸ் மினோச்சர் டோர்டி, கொங்கிரீட்டுடன் மூலகங்களையும், நிர்மாணத்துக்கு உகந்ததல்லாத சூழ்நிலைகளில் நிர்மாணத்துக்கு கொங்கிரீட்டில் அட்மிக்சரின் உபயோகத்தையும் குறித்து விளக்கமளித்தார்.

சீமெந்தானது. கடற்கரையோரங்களில் குளோரைட்டுகள் மற்றும் சல்பேற்றுகளின் தாக்கத்துக்கு ஆளாகின்றது என டோர்டி விளக்கமளித்ததுடன், சீமெந்தைக் குழைக்கும்பொழுது சுண்ணாம்பு ஈரப்பதன் அளவு (LSF) பேணப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

குறைவான LSF மெதுவாக கடினப்படுத்துவதுடன் குறைவான ஆரம்பப் பலத்தையும் வழங்கும் அதேவேளை, அதிகரித்த LSF மேலதிக சுண்ணாம்பை வடிந்தோடச் செய்வதுடன் இரசாயனத் தாக்கங்களுக்கு சீமெந்தை தாக்குப்பிடிக்கமுடியாததாக மாற்றும் என அவர் தெரிவித்தார்.

மூலகங்களின் தாக்குதல்களுக்கு மேலதிக எதிர்ப்பு சக்தியைப் பெறுவதற்காக கொங்கிரீட்டில் அட்மிக்சரின் உபயோகம் குறித்து திருப்திகரமான விளக்கமளித்த டோர்டி, அட்மிக்சர்களில் பறக்கும் சாம்பல் உள்ளடங்கியுள்ளதாகத் தெரிவித்தார். பறக்கும் சாம்பல்களின் துணுக்குகள் சீமெந்தில் உள்ளதைவிட மிகச்சிறியதாக உள்ளதினால் கொங்கிரீட்டிலுள்ள மிகச்சிறிய இடைவெளியிலும் நுழைந்து, அவ்விடத்தை நிரப்பிப் பலப்படுத்தக்கூடியவை.

கொங்கிரீட்டினுள் மிகச்சிறியளவிலான நீரோ, காற்றோ இருப்பதற்கு இடமளிக்காமல் கொங்கிரீட்டைப் பலப்படுத்துவதனால் ஏனைய அட்மிக்சர்களை விட பறக்கும் சாம்பல் மிகவும் உபயோகமானதாகும். இதுபோன்ற சீமெந்துகள் நீர்மட்டம் குறைவாக உள்ள கடற்கரைப் பிரதேசங்களுக்கு விஷேடமாக உகந்ததாக உள்ளதுடன் நீரிலிருந்து பாதுகாப்பு அவசியமான அணைக்கட்டுகள் பாலங்கள் மற்றும் நிலத்தடி கழிவுநீர் கால்வாய் ஆகியவற்றுக்கும் உகந்ததாகும்.

சீமெந்துக்கு நீர் கலக்கும்பொழுது. தண்ணீரின் pH பெறுமானம் ஆறுக்கு மேற்பட்டதாக இருக்கவேண்டும் என டோர்டி தெரிவித்தார். சீமெந்தின் பலத்தைக் குறைக்கும் உப்புத்தன்மை கடல் நீரில் அதிகரித்துக் காணப்படுவதனால் சீமெந்துடன் எப்பொழுதும் கடல்நீரை கலக்கக் கூடாது என அவர் தெரிவித்தார். அசுத்தமெதுவும் இல்லையாயின் கடின நீரையும் இதற்காக உபயோகிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கை இராணுவத்தின் விநியோக கட்டளையதிகாரி மேஜர் ஜெனரல் எச்.எம்.என். கிரிஷ்ணரட்ன தெரிவிக்கையில், இதுபோன்ற கருத்தரங்குகள் மூலம் கொங்கிரீட் தொடர்பான அதன் அறிவைப் பகிர்ந்துகொள்ள அதிநவீன சீமெந்து நிறுவனமான இலங்கை அம்புஜா சீமெந்து மேற்கொண்ட முயற்சிகள் உலக அபிவிருத்திகளுக்கு இணையாக உள்ளூர் துறையை வைத்திருப்பதில் பிரதான பங்குவகித்தது என்றார்.

சைரஸ் மினோச்சர், டோர்டி நிர்மாணம் தொடர்பான 98 விடயங்களடங்கிய தொழில்நுட்ப வெளியீடுகளின் எழுத்தாளராக உள்ளதுடன் சர்வதேச புகழ்பெற்ற ஒரு இந்தியப் பேச்சாளராவார். கௌரவமிக்க இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் 1991ஆம் ஆண்டு பட்டம் பெற்ற டோர்ட் பின்னர் தொழில்நுட்பத்தில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். அவரது முதலாவது பணி டாட்டா குழுமத்தில் ஆரம்பமானது. 1994ஆம் ஆண்டு அவர் குஜராத் அம்புஜாவில் இணைந்துகொண்டார்.

நிர்மாணத்துறையில் வித்தியாசமான நிலைகளிலுள்ள தனிநபர்களுக்கு தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆலோசனைகளை வழங்குவதன்மூலம் நிர்மாணத்துறையில் நிபுணத்துவத்தை ஊக்குவிக்கும் இலங்கை அம்புஜா சீமெந்தின் பல் - பிரிவு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமாகவே அம்புஜா தொழில்நுட்ப விரிவுரை வரிசை உள்ளது.

இலங்கை அம்புஜா சீமெந்து 1999ஆம் ஆண்டு இலங்கையில் தனது பணிகளை ஆரம்பித்தது. இந்நிறுவனம் இந்தியாவின் சீமெந்து உற்பத்தியின் 30 சதவீதத்தைக் கொண்டுள்ள குஜராத் அம்புஜா சீமெந்தின் துணை நிறுவனமாகும். அதற்கு சொந்தமான தொழில்நுட்ப சேவைகள் பிரிவினூடாக இலங்கையில் ஆலோசனை சேவைகளை வழங்கும் ஒரே சீமேந்து நிறுவனம் இலங்கை அம்புஜா சீமெந்தாகும்.

தாய் நிறுவனமான குஜராத் சீமெந்து தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் அம்புஜா சீமெந்து இலங்கைக்கு மொத்தமாக ஏற்றுமதி செய்யப்பட்டு காலி துறைமுகத்திலுள்ள மொத்த சீமெந்து டேர்மினலில் பொதி செய்யப்படுகிறது.









# டுபாய் விசா வழங்கும் அலுவலகம் எமிரேட்ஸ் நிறுவனத்தால் ஆரம்பம்

டுபாய் பயணிக்கும் அல்லது டுபாயிலிருந்து பிற நாடுகளுக்கு மாறிச் செல்லும் இலங்கையர்க்கு உலகிலேயே அதி வேகமாக வளர்ச்சியடைந்துவரும் விமான சேவையான எமிரேட்ஸ் நிறுவனம் கொழும்பு நகரில் விசா வழங்கும் நடைமுறை அலுவலகத்தைத் திறந்துள்ளது.

இந்த நிலையத்தைத் திறந்ததன்மூலம் எமிரேட்ஸ், டுபாய்க்கு அல்லது டுபாயைத் தாண்டிச் செல்லும் இலங்கைப் பயணிகள் தரிசிப்பு விசாவை (visit) (60 நாட்கள்) அல்லது மாறிச் செல்லும் விசாவை (96 மணித்தியாலங்கள்) எமிரேட்ஸ் அனுசரணையாளர்களைக் கொண்டு பெறமுடியும்.

பயணிகளின் தகுதிகாண் நடைமுறையும் சமர்ப்பிக்கப்படும் பத்திரங்கள் ஒழுங்காக இருக்கும் பட்சத்திலும் ஒரு இலத்திரனியல் விசா மூன்று நாட்களுக்குள் வழங்கப்படும். இந்த புதிய இடம் அமைந்திருக்கும் விலாசம் ஹேமாஸ் ஹவுஸ், 75, பிரேபுரூக் பிளெஸ், கொழும்பு- 2.

வர்த்தக முறையிலோ அல்லது விடுமுறையைக் கழிப்பதற்காகவோ செல்லும் இலங்கையருக்கு டுபாய் ஒரு பிரபல்யமான நகரமாக விளங்குகிறது. அது மட்டும் அல்லாமல் ஐரோப்பா அல்லது அமெரிக்காவுக்குச் செல்லும் பயணிகளுக்கு இது ஒரு தரிப்பிடமாகவும் விளங்குகின்றது. எமிரேட்ஸின் விசா வழங்கும் உதவியின் மூலம் நாங்கள் கூடுதலான இலங்கைப் பயணிகளை எதிர்பார்க்க முடியும்'' - என்றார்.

நபில் மேலும் கூறியதாவது, இலகுவாக்கப்பட்ட விசா நடைமுறை இந்தியாவில் ஒக்டோபர் 2002 இல் அறிமுகம் செய்யப்பட்டது. அங்கு எமக்குக் கிடைத்த அமோக வரவேற்பு இலங்கையிலும் மேற்படி விசா வழங்கும் அலுவலகத்தைத் திறப்பதற்குத் தூண்டுகோலாக அமைந்தது.

இந்திய உபகண்டத்தின் மற்றைய நாடுகளுக்கும் இந்த நடைமுறையை நாங்கள் விரிவு படுத்த இருக்கின்றோம். ஏனெனில், அத்தகைய நாடுகளுக்கு நாங்கள் 101 வாராந்த விமான சேவையை நடத்தி வருகின்றோம்.

கடந்த காலங்களில் இலங்கையிலிருந்து கூடுதலான பயணிகள் டுபாய் வருவதை அவதானித்திருக்கின்றோம். 2004 இல் 146,691 பயணிகள் கொழும்பிலிருந்து டுபாய் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். டுபாய் சர்வதேச. விடுதிகளில் தங்கியிருந்த இலங்கை விருந்தினர் எண்ணிக்கை சென்ற ஆண்டில் 7 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளது.

எமிரேட்ஸின் இலங்கை பிராந்திய முகாமையாளர் திஸ்ஸ பிபிலேவின் கருத்துப்படி, ''எமிரேட்ஸால் எமது பயணிகளுக்கு வழங்கப்படும் பெறுமதியூட்டப்பட்ட சேவை இந்தப் புதிய அலுவலகத்தைத் திறப்பதன் மூலம் கிடைப்பதுடன், தொல்லைகள் இல்லாத சேவையும் எமது பயணிகளுக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

எமது கிளைக்கு வரும் விண்ணப்பதாரிகளுக்கு வழிகாட்டலும், அறிவுறுத்தலும் கிடைக்கப்பெறுவதால் சரியான பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுவதுடன் விரைவான சேவை கிடைப்பதும் உறுதிப்படுத்தப்படுகின்றது'' - என்றார்.



புதிதாகத் திறக்கப்பட்டுள்ள எமிரேட்ஸின் 'டுபாய்க்கான விஸா வழங்கும் நிலையம்.'

மேலும், இலத்திரனியல் முறைமூலம் விசா வழங்கப்படுவதால் டுபாய் சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும் பயணிகள் விசா வழங்கும் கருமபீடத்தில் வரிசையில் நிற்க வேண்டிய தேவை ஏற்படாது. அத்துடன், அவர்கள் நேரடியாகக் குடியகல்வு கருமபீடத்திற்குச் செல்ல முடியும்.

விசா வழங்கும் நிலையம் விடுமுறை விண்ணப்பதாரிகளினதும், வர்த்தக பயணிகளினதும், நண்பர்கள் உறவினர்களைச் சந்திக்க இருப்பவர்களினதும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும். பயணிகள் தங்களுடைய விசா விண்ணப்பங்களுடன் பத்திரங்களின் மூலப்பிரதிகளையும் இந்த நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வகளின் மூலம் பெறப்படும் தகவல்கள் இந்த நிலையத்தினால் பரிசீலிக்கப்பட்டு டுபாயிலிருக்கும் குடிவரவு அதிகாரிகளிடம் விசா வழங்குவதற்காகச் சமர்ப்பிக்கப்படும்.

விண்ணப்பதாரியின் தகைமைகள் ஒழுங்காக இருப்பின் விசாவானது பயணிகள் பிரயாணச் சீட்டில் இலத்திரனியல் நடைமுறை மூலம் PNR இல் பதிவு செய்யப்படும்.

டுபாய் விசா பரிசீலனை செய்யும் கிளை, தொழில்வழங்கும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளமாட்டாது. இந்த வசதி எமிரேட்ஸ் விமான சேவையைப் பயன்படுத்தி டுபாய்க்கும் அதற்கு அப்பாலும் பயணம் செய்யும் பயணிகளுக்கு மட்டுமே வழங்கப்படும்.

முதல் மூன்று
இலக்கங்களும்
உங்களுடையவை.

___ 2 357 357

எமது 24 மணிநேர அழைப்பு நிலையத்தின்
தற்போதைய தொலைபேசி இலக்கங்கள்:

• 077 2 357 357 • 071 2 357 357 • 072 2 357 357 • 011 2 357 357

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
முன்னோடியின் முழுமையான பாதுகாப்பு என்றும் உங்களுக்கே.

LEO BURNETT

# த பினான்ஸ் கம்பனியின் செயற்பாடுகள் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கும்



த பினான்ஸ் கம்பனியின் சட்ட இயக்குநரும், வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பணிப்பாளருமான மாலா சபாரட்ணத்திடமிருந்து வாடிக்கையாளர் ஒருவர் வைப்புச் சான்றிதழைப் பெறுகின்றார்.

த பினான்ஸ் கம்பனி அண்மையில் நெல்லியடி மற்றும் சாவகச்சேரி ஆகிய இடங்களில் இரண்டு புதிய சேவை நிலையங்களைத் திறந்துள்ளது. வடக்கு - கிழக்குக் கிளைகளில் சாதகமான. வர்த்தக வளர்ச்சியைத் தொடர்ந்து இந்தக் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் மேலும் பல கிளைகளையும், சேவை நிலையங்களையும் திறப்பதில் கம்பனி திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது.

த பினான்ஸ் கம்பனியின் சட்டப்பிரிவுப் பணிப்பாளரும், வடக்கு - கிழக்குக்குப் பொறுப்பான பணிப்பாளருமான திருமதி மாலா சபாரட்ணம் கூறுகையில், "த பினான்ஸ் கம்பனியால் (TFC) 1976இல் ஆரம்பிக்கப்பட்ட முதலாவதுகிளையான எமது யாழ்ப்பாணக் கிளை தற்போது நெல்லியடி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் செயற்பாடுகளை மேற்பார்வை செய்துவருகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் எமக்குள்ள மூன்று தசாப்த உறவானது வாடிக்கையாளருக்கு எம்மீது நம்பிக்கையைக் கட்டியெழுப்பியுள்ளது. சுமுகமான செயற்பாட்டுக்கும் அது வழி வகுத்துள்ளது. எமது வாடிக்கையாளர்களின் வசதிக்காகவும், அவர்களின் அவசர வேண்டுகோளையடுத்தும் கொழும்பு-6 வெள்ளவத்தையிலும் எமது சேவை நிலையத்தை ஸ்தாபித்துள்ளோம்.

வடக்குக்கும் தலைநகருக்கும் இடையிலான ஒரு உறவுப் பாலமாக அது செயற்படுகின்றது. வடக்கையும், கொழும்பையும் இணைக்கும் இந்தப் பாலம் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விரைவாகக் கொடுக்கல் வாங்கல்களை வழங்குகின்றது."

இதற்கு மேலதிகமாக திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய கிளைகளும் முழு அளவில் செயற்படுகின்றன. எமது 33 கிளை வலைப்பின்னல்களில் ஒரு அங்கமாக வடக்கு - கிழக்குக் கிளைகளும் அமைந்துள்ளன.


"எமது கிளைகள் யாவும் நாடு முழுவதும் உள்ள நகரங்களின் கேந்திர நிலையங்களில் அமைந்துள்ளன. வங்கி மற்றும் காப்புறுதித் துறைக்கு அப்பால் இதுவே மிகப் பெரிய நிதி நிறுவனமாகும்."- என்று சபாரட்ணம் மேலும் விளக்கினார்.

"இந்தக் கிளைகளின் ஊழியர்கள் அழிவுக்குள்ளான பகுதிகளில் வாடிக்கையாளரின் தேவை கருதி அர்ப்பணத்துடன் சேவையாற்றி வருகின்றனர். ஒரு பொறுப்பு மிக்க கம்பனி என்ற வகையில் எமது பங்கு குறித்தும் நாம் சனையுடன் பணியாற்றி வருகின்றோம். எமது தலைவர் தேஷமான்ய லலித் கொத்தலாவலவின் தூரநோக்குச் சிந்தனைக்கு ஏற்ப நாம் பணியாற்றி வருகின்றோம்."- என்று அவர் மேலும் கூறினார்.

வாடிக்கையாளர்களுடன் சிநேகபூர்வமாக உறவாடக்கூடிய நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் துணையோடு கிராம விரிவாக்கத் திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து த பினான்ஸ் கம்பனி செயற்படுகின்றது. வீட்டுக்கு வீடு சேவையின் மூலம் சந்தை விரிவாக்கப் பணிகளையும் அது மேற்கொண்டு வருகின்றது.


மின்சக்தி இலவசம் ஆம்!!

சூரிய சக்தியில் இயங்கும் மின்சார விளக்குகள்



★ சிறப்பம்சங்கள்:

1, இரவில் தானாகச் செயற்ப்பட்டு பகலில் தானாக அணைந்துவிடுகிறது.
2, தண்ணீர் உட்புகாதது, துருப்பிடிக்காது, நிறை குறைவு, பாரமரிக்கத் தேவையில்லை.
3, உங்களின் தோட்டம், முற்றம், நடைபாதை, பூங்கா, மொட்டைமாடி போன்றவற்றிற்கு இலகுவான முறையில் பொருத்தி இலவசமாகவே வெளிச்சத்தைப் பெறலாம்

இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள் :-

Falcone Enterprises
19, Keyzer Street, Colombo-11.
Tel: 2399640/1, Fax: 2439409
E-mail: falcone@lanka.ccom.lk



S-lon இல்லம்

உங்களுக்கு மிகவும் பெறுமதியானவற்றை பாதுகாக்கின்றோம்.




Authentic Certification
KEMA KEUR
KEMA - HOLLAND

அறிமுகப்படுத்துகின்றோம்
KEVILTON
Protection Systems

கெவில்டன் Protection device (RCCB/RCBO) இனை பொருத்திய பின் நீங்களும் உங்களின் அன்புக்குரியவர்களும் பாதுகாப்பினை பற்றிய அச்சமின்றி நிம்மதியாக இருக்கலாம். கெவில்டன் உங்கள் வீட்டில் அல்லது அலுவலகத்தில் ஏற்படும் மின்னொழுக்கு தீ அபாயமாக மாறாமல் பாதுகாக்கும்.

கெவில்டன் Protection System மூலம் உங்களின் பெறுமதியான உயிரையும், உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

- Rating upto 63A
- 30, 100, 300mA Sensitivity
- 2P & 4P
- 6KA Breaking Capacity

என்றும் KEVILTON

Complete range · High breaking capacity · International standards

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
31.07.2005

# ஈழத் தமிழர் விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் போக்கு மாறவேண்டும்!

"ஈழத் தமிழர்களுடைய வரலாற்றில் எப்பொழுது, எப்பொழுதெல்லாம் அவர்கள் தங்களுடைய விடுதலைக்காக பெரும் புரட்சியை நடத்தத் தயாராகின்றார்களோ அப்பொழுது, அப்பொழுதெல்லாம் இங்கு ஒப்பந்தங்களும், பேச்சுகளும் வந்துவிடுகின்றன. அவர்களது போராட்ட உணர்வு தணிந்த பின் அவர்களை நசுக்கும்பணி வெகு லாவகமாக முன்னெடுக்கப்படுகின்றது" என்று வரலாற்று ரீதியாகவும், தீர்க்கதரிசனமாகவும் தியாகி திலீபன் கூறினார். சர்வதேச சமூகத்தின் இன்றைய போக்கையும் ஈழத் தமிழரின் வரலாற்றையும் ஒப்புநோக்கும் ஒருவருக்கு மேற்படி கூற்றின் நியாயத் தன்மை புலப்படும்.

புதிய உலக ஒழுங்குகளிற்கேற்ப சமாதான வழியில் சர்வதேச அனுசரணையுடனான பேச்சுகளை ஆரம்பிக்குமுகமாக 2002ஆம் ஆண்டு புரிந்துணர்வு உடன்படிக்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையில் செய்து கொள்ளப்பட்டது. இதன் புலிகள் தரப்பு நோக்கம் சர்வதேச அனுசரணையுடன் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வைப் பெற்றுவிடுவதேயன்றி இலங்கையில் நடக்கும் போரை முற்றாக நிறுத்திவிடவேண்டும் என்பதல்ல. ஏனென்றால், தமிழ் மக்கள் ஏ–9 பாதையால் பயணிக்க வேண்டுமென்ற ஆவலுடனோ அல்லது மேற்குலகின் பொருள்கள் தாராளமாக எமது சந்தையில் பெற்றுவிட வேண்டு மென்பதற்காகவோ இத்தனை ஆண்டு காலமாக இவ்வளவு உயிர்களையும் இழந்து எண்ணுக்கணக்கற்ற சொத்தழிவுகளையும் சந்தித்து தமது வீரம் செறிந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. மாறாக அவர்கள் தமது சொந்த நிலத்தில் எவருக்கும் அடிபணியாது சுயநிர்ணய உரிமையுடனான தமது வாழ்வை உறுதிப்படுத்துவதற்காகவே போராடினர்.

## வெறுமை நிலை நீள்கிறது

கடந்த மூன்றரை ஆண்டு காலத்திற்கும் மேலாக நோர்வே அனுசரணையுடன் அமுல்படுத்தப்பட்டுள்ள போருமற்ற, தீர்வுமற்ற வெறுமைநிலை நீண்டுகொண்டே செல்கின்றது. தமிழ் மக்களின் அபிலாசைகளிற்கேற்ப தீர்வைப் பெற்றுத் தருவதற்கு சர்வதேச சமூகம் தவறிவிட்டது. இதனால் ஈழத் தமிழர்களின் விரக்தியும், வெறுமையும், வேதனைகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. அவர்கள் பொறுமையின் எல்லையைக் கடந்துவிட்டார்கள். தமிழர் தாயகமெங்கணும் ஆங்காங்கு ஒன்றுகூடுகின்ற தமிழ் மக்களும் அவர்களது பிரதிநிதிகளும் போரை உடனடியாக ஆரம்பிக்கும் ஆணையைத் தமிழீழத் தேசியத் தலைவருக்கு அனுப்பி வருகின்றனர். அதுமட்டுமல்லாமல் புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழ் மக்களும் தமது தேசத்திற்கு விடிவு கிட்டும் நாளை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் அவர்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து அவர்களை அடக்குமுறையிலிருந்து விடுவித்து, நிம்மதியான சுதந்திரமான வாழ்விற்கு வழிசமைக்க ஆயத்தமாகியுள்ளதாகத் தெரிகிறது.

## சர்வதேசம் எங்கள் பக்கம் எப்போது பார்த்தது?

அமைதியான முறையில் – நீதியான வழிகளில் – சிங்களத் தலைவர்களிடமிருந்து தீர்வு கிடைக்காது என்பது புலிகளின் பட்டறிவுக்கு நன்கு புலனான விடயம். சர்வதேசத்தின் விருப்பத்திற்கு மதிப்பளித்து அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தையே புலிகள் வழங்கினார்கள். ஆனால், சர்வதேச சமூகத்தாலும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாமல் அவலங்கள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன. இங்கு இன்னொரு விடயமும் ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டியதாகின்றது. இத்தீவில் பல்லினங்கள் வாழ்கின்றன என்பது உலகிற்கு நன்கு தெரியும். பிரித்தானியாவின் காலனியாகக் கூட 1948 வரை இலங்கை இருந்தது. நிலைமை இப்படியிருக்க 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோதும், 1956,1958, 1971,1977,1981, 1983 என நீண்டு கொண்டே சென்ற பாரிய அளவிலான தமிழின சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் போதும் பௌத்த மதம் அரச மதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டபோதும், 1981இல் தென்னாசியாவிலேயே தனித்துவமான நூலகமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையம் தீ மூட்டி எரிக்கப்பட்டபோதும், ஸ்ரீலங்கா இராணுவத்தால் எம் மக்கள் தாயக நிலப்பிரதேசங்களிலிருந்து அடித்து விரட்டப்பட்டு இப்போதும் அந்த நிலங்களைக் கையகப்படுத்தி வைத்திருக்கின்ற போதும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் தொடர் விமான,ஷெல் தாக்குதல்களால் எம்மக்கள் சொத்தழிவுகளையும், உயிரழிவுகளையும், அங்க இழப்புகளையும் சந்தித்துக் கொண்டிருந்தபோதும், எல்லாவற்றிற்கும் மேலாக 1995 செப்ரம்பர் 30இல் ஒரே நாளில் வலிகாமத்தில் இருந்த 5லட்சம் மக்களும் இடம்பெயர்ந்து புலிகளுடன் சென்றபோதும் எம்மைக் கண்டுகொள்ளாத சர்வதேச சமூகம் 2000ஆம் ஆண்டு புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றி பெரும் இராணுவ சாதனையைப் புரிந்தவாறு யாழ்ப்பாணத்துள் காலடி எடுத்து வைத்த போதுதான் கண்டுகொள்ள முன்வந்தது.

அன்றைய நாள்களை நினைத்துப் பாருங்கள், புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றிவிட்டார்கள் என்ற செய்தி வெளிநாடுகளிலுள்ள உறவினர்களால்தான் கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலுள்ளவர்களில் அநேகரிற்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது. எந்த நிமிடமும் யாழ்ப்பாணத்தில் புலிக்கொடி பறக்கும் என்ற அங்கலாய்ப்பிலிருந்தனர் மக்கள். சொந்த இடங்களுக்கு மீண்டு விட்டதாகவே எல்லோரும் கனவு கண்டு கொண்டிருந்தோம். எங்கோ சதி நடந்ததால் அன்று எமது கனவுகள் கைகூடாமல் போயிற்று.

அதற்குப் பிறகுதான் சர்வதேச அனுசரணையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது. பொதுக் கட்டடங்கள், பாடசாலைகள், பயிர்செய் நிலங்களிலிருந்து இராணுவம் முற்றாக விலகி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிசெய்யும் வகையிலான சரத்துக்கள் உடன்படிக்கையில் மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இந்த மூன்றரை வருட காலத்தில் ஸ்ரீலங்கா அரசு அவற்றை நடைமுறைப்படுத்தியதா? இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? வெளிநாட்டுப் படைத்துறை வல்லுநர்கள் இங்கு வந்தார்கள், அறிக்கைகள் எழுதினார்கள், சமர்ப்பித்தார்கள், சென்றார்கள் என்பதைத் தவிர மக்களின் அவலங்களைத் தீர்க்கும் வகையிலான நடவடிக்கைகள் எவையுமே இங்கு நடைபெறவில்லை. தெல்லிப்பழை, வயாவிளான், மாவிட்டபுரம், கீரிமலை என்ற அளவு கணக்கில்லாத ஊர்களை உயர் பாதுகாப்பு வலயமென்று ஆக்கிரமித்து வைத்துள்ளார்கள். எத்தகைய செழிப்புமிக்க மண்வளத்தைக் கொண்ட பூமி அது. எவ்வளவு பொருளாதார வளங்கள் நாசமாக்கப்படுகின்றன. இப்போது மக்களற்ற அந்தப் பூமியிலுள்ள சுண்ணக் கற்களையும் அகழ்ந்தெடுக்கின்றார்களாம். இந்த அநியாயங்கள் எதுவும் சர்வதேச பூதக் கண்ணாடிக்குட் புலப்படுவது கிடையாதா?

**ஐந்து லட்சம் மக்கள் இடம்பெயர்ந்த போதல்ல..... ஆனையிறவு வீழ்ந்தபோதே உலகம் எங்களைப் பார்த்தது.....!**

எம்மை அழிக்கின்ற இராணுவத்தை, எமது சொந்த நிலத்தை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை இங்கிருந்து விரட்டி எமக்கான ஒரு சுதந்திர தேசத்தை நிர்மாணிக்கும் பணியில் எமது மக்கள் சுயத்தில் ஈடுபடும் போதான செயற்பாடுகளில் குறைகளைக் காண விழையும் சக்திகள் மேலுள்ள விடயங்களைக் கவனத்திற் கொள்ளாதது ஏன்?

பொதுக் கட்டமைப்புக்கு நேர்ந்த கதியைப் புரிந்தாவது சர்வதேச சமூகம் தமிழர் தாயகத்திற்கு நீதி வழங்க முன்வர வேண்டாமா?

'மனிதப் படுகொலைகளைப் புலிகள் நிறுத்த வேண்டும்.'

இவை இன்று பெரிய நாடுகளால் கூறப்படுகின்ற குற்றச் சாட்டுக்களாகிவிட்டன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் எவ்விதமான மனிதப் படுகொலைகளும் நடைபெறுவதில்லை என்ற விடயமும் புலிகளுடன் இணையும் சிறுவர்களை புலிகள் உடனடியாக விடுவித்து விடுகின்றனர் என்பதும் இன்று உலகறிந்த செய்திகள். இவற்றை இந்நாடுகள் நன்கு அறிந்தும் இவ்வாறான சில்லறைக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது ஏனென்பதுதான் புரியவில்லை.

## செப்ரெம்பர் 11இற்குப் பின்னர்....

2001 செப்ரம்பர் 11இற்குப் பின்னரான உலக நிலைமைகளை ஆராய்ந்து பாருங்கள். ஆப்கானிஸ்தானில் பின்லேடனும் அல்கெய்டா இயக்க உறுப்பினர்களும் ஒளிந்திருக்கிறார்கள் எனக் கூறி பாரிய தாக்குதல் நடத்தப்பட்டு, பாரிய உயிர், உடைமை அழிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இறுதியில் நடந்தது என்ன? பின்லேடன்தான் பிடிபட்டாரா? அவரது இயக்கந்தான் அழிந்ததா? அழிந்தது யார்? அதற்கு பிறகு சதாம் ஹூசேய்ன் இரசாயன மற்றும் அணு ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருக்கின்றார். இது உலக சமாதானத்திற்கு பெரும் ஆபத்து என்றார்கள். தொன்கணக்கில் குண்டுகளைக் கொண்டுபோய்க் கொட்டினார்கள். சதாமையும் பிடித்தார்கள். அங்கு இரசாயன ஆயுதங்களோ, அணுகுண்டுகளோ இருந்தனவா? ஆகவே அங்கு அழிந்தவர்கள் யார்? இப்போது நடந்து கொண்டிருப்பதுதான் என்ன? எனவே உலக நாடுகள் இவற்றைச் சரியான முறையில் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

இங்கு யாரையும் குற்றங்கூறிப் பிழைப்பு நடத்த நாம் முயலவில்லை. எங்களையும் வாழ விடுங்கள் என்றுதான் நாம் கேட்கின்றோம். எமது நியாயமான அரசியல், பொருளாதார வாழ்வியல் உரிமைகளை நீதியான முறையில் அங்கீகரியுங்கள் என்றுதான் ஈழத் தமிழ் மக்கள் கேட்கிறார்கள். மேற்படி உரிமைகளை ஸ்ரீலங்கா அரசு காலங்காலமாக மறந்து எம்மீது வன்முறையைத் திணித்து தமிழர்களை அழிக்க முற்பட்டபோதுதான் நாங்கள் ஆயுதங்களைக் கையிலெடுத்தோம். இன்று விடுதலைப் புலிகள் பலமான மக்கள் இயக்கமாக வளர்ந்து நிற்கின்றார்கள். சர்வதேசத்தின் அனுசரணை காரணமாகத் தொடர்ந்தும் அவலங்களைச் சகித்தபடி பொறுமை காக்கின்றோம். ஆனால், எதற்குமே ஓர் எல்லையுண்டல்லவா? எனவே, நாங்களாகவே எங்களின் தலைவிதியைத் தீர்மானிக்க வேண்டிய அவசியம் தோன்றிட உள்ளது.

சர்வதேச சமூகமே! புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு இதுகாலவரையும் எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அவலங்கள் உங்கள் கண் முன்னாலேயே இடம்பெற்றன. இவை யாவும் உங்களிடம் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. கொல்லப்பட்ட எமது பொதுமக்களின் எண்ணிக்கைகள், கொல்லப்பட்ட, தாக்கப்பட்ட போராளிகளின் எண்ணிக்கைகள், புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப் படாத ஏராளமான விடயங்கள், முடக்கப்பட்ட போராளிகளின் பயண ஒழுங்குகள் என யாவையும் உங்களிடம் பட்டியலாக உள்ளன. எல்லா விடயங்களையும் விடுதலைப் புலிகள் தெளிவுபடுத்தி உள்ளனர்.

தமிழனின் தேசியத் தலைமை எப்போது 14 நாள் கால அவகாசம் ஸ்ரீலங்கா அரசிற்கு வழங்கி அதிலுள்ள முழு விடயங்களும் ஏற்கப்படாமல், புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள அந்த விடயங்களை நடைமுறைப்படுத்த எப்பொழுது ஸ்ரீலங்கா அரசு பின்னடித்ததோ அப்பொழுதே புரிந்துணர்வு உடன்படிக்கை உயிரற்றுப் போயிற்று என்றே கொள்ள வேண்டியதாகிறது. இத்தகைய ஒரு சூழ்நிலையில், பின்னணியில் தமிழர் தாயகத்தின் வாழ்வை, எதிர்காலத்தை முன்னேற்றகரமான வழிகளில் கட்டியெழுப்பும் வகையிலான தமிழீழத் தேசியத் தலைமையின் முன்னெடுப்புக்களிற்கு பூரண ஆசியும், ஆதரவும் வழங்குவதற்கு சர்வதேச சமூகம் திடசங்கற்பம் பூணவேண்டும்.

சுவேதன்

# யாழ் பாணம்



**யாழ்.** குடாநாட்டில் நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழா அண்மித்து வருகிறது. நாட்டில் முருகப்பெருமானுக்கு பல பிரசித்த திருத்தலங்கள் அமைந்துள்ள போதிலும் அலங்காரக் கந்தனெனப் போற்றப்படும் நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவகாலம் குடாநாட்டு மக்களை மனஎழுச்சி கொள்ளவைப்ப தொன்று. யாழ்ப்பாண இந்துக்களின் ஆன்மீக ஈடுபாட்டை ஆண்டாண்டு காலமாய் நிரூபித்துவரும் இது, அண்மைக் காலமாய் இளம் சமூகத்தினரின் கேளிக்கைப் பொழுதுபோக்குக்கான வாய்ப்பாகவும் அமைந்துவிட்டமை கால ஓட்டத்தின் திரிபுகள். மனக்கவலைகள், வாழ்க்கைச் சிரமங்கள் என்பவற்றுக்கு விடிவு கிட்டக் கந்தனின் அனுக்கிரகம் வேண்டிப் பக்தர்கள் பெருமளவில் கூடுவது இத்தலத்தின் வரலாற்றுப் பதிவுகள்.

சரி, விடயத்துக்கு வருவோம்! கடந்த மாதம் தமது எழுபதாவது வயதைப் பூர்த்திசெய்துள்ள அவர், தாம் தற்போதும் திடகாத்திர உடல் நிலையும், சிக்கல், சிரமமற்ற வாழ்க்கையும் பெற்றிருப்பதற்கு கடந்த பல ஆண்டுகளாய்த் தாம் நம்பித் தொழும் நல்லூர் முருகனின் கருணையே காரணமெனத் திடமாக நம்புகின்றார்.

பொதுவாகவே மனிதர்களிடையே பலவித மன நிலைப்பாடு, கொள்கை காணப்படுவது இயற்கையே. அந்த வகையில் அவரிடத்தும் சில விசித்திர குணவியல்புகள் காணப்பட்டன. இறுக்கமான ஆன்மீக ஈடுபாடு, கலாசார பண்பாடுகளுக்கமைந்த பழக்கவழக்கங்கள் என்பன கொண்டிருந்ததால் ஊரில் அவருக்கு மதிப்பு அதிகம். 'பழசு' எனக் குறிப்பிட்டு இளைஞர்கள் அவரை இனம் காண்பதுண்டு.

அவருக்கு சந்ததி என்று சொல்லிக்கொள்ள ஒரேயொரு ஆண் பிள்ளை மட்டுமே. 22 ஆண்டுகளுக்கு முன்பு தனது 22 ஆவது வயதில் மேற்படிப்புக்காக வெளிநாடு - லண்டனுக்குச் - சென்ற அவன் படிப்பு முடிந்ததும் அங்கேயே பல ஆண்டுகளாய் வாழ்ந்து வந்த யாழ்ப்பாணத்துப் பெற்றோரின் மகளைத் திருமணம் செய்து நிரந்தரமாக அங்கேயே தங்கிவிட்டான். அது குறித்த பேச்சு அடிபடும் வேளையில் 'எல்லாமே நல்லூரான் திருவிளையாடல்' என அவர் சொல்லிக்கொள்ளத் தவறுவதில்லை.

தனது மனதுக்குப்பிடிக்காத எதனையும் வெளிப்படையாகவே தெரிவிக்கும் இயல்பு

## நா காக்க! காவாக்கால்...

கொண்டவர் அவர். தவறு எனக் காண்பதைப் பூசிமெழுகிப்பேசிச்சமாளிக்க அவருக்குத் தெரியாது. யாழ்ப்பாணத்துப் பாரம்பரியம் மிக்க சமூக, கலாசார, ஆன்மீக விழுமியங்கள் மாற்றமின்றி தொடர்ந்து பேணப்படுவதில் அதீத அக்கறை கொண்டவர். இவற்றின் தொன்மையும், மூலமும் மீறப்படும் வேளையில், அதனுடன் சம்பந்தப்படு வோரின் அந்தஸ்து, அவர்களுடனான உறவின் நெருக்கம், தனிப்பட்ட நட்பு என்பவை குறித்து கணக்கில் எடுக்காது, குறிப்பிட்ட விடயம் குறித்த கடுமையான - உறுதியான கண்டனம் அவரிடமிருந்து வெளிப்படத்தவறாது. இதனால் பல சந்தர்ப்பங்களில் தமது நெருங்கிய உறவினர், நண்பர்கள் என்போரின் அதிருப்தியை அவர் சம்பாதித்துக் கொண்டதுண்டு. ஆனால், இதற்காக அவர் ஒரு போதும் தமது கருத்து நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டதில்லை. 'பழசு' என்ற பட்டம் அவருடன் ஒட்டிக்கொள்ள இதுவுமொரு காரணம் ஆயிற்று.

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவகாலம் வரும் முன்னரே அவர் சுறுசுறுப்பாகி விடுவார். விழாக்காலம் முழுவதும் நாளின் பெரும்பகுதி ஆலயத்திலேயே கழியும். பல்லாண்டுகளாய் அவரிடம் தொடரும் பழக்கம் இது. வழமைக்கு மாறாக இம் முறை அவர் உற்சாகமாக இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. காரணம் வினாவிய என்னிடம் தனது மனக் குமுறலைக் கொட்டித் தீர்த்துவிட்டார்.

இருபத்திரண்டு வருடங்களுக்கு முன் லண்டன் போய் நிரந்தரமாகத் தங்கிவிட்ட அவரது ஒரே மகன் முதற்றடவையாக யாழ்ப்பாணம் வரவிருக்கிறான். மனைவி மற்றும் லண்டனில் பிறந்து வளர்ந்த இரு மகள்மாரையும் அழைத்துக் கொண்டு பெற்றோரைக் காணும் நோக்கில் மகன் வருவது குறித்து மகிழ்ச்சி அடைய வேண்டிய அவர் மாறாக கவலை அடைவதன் காரணம் தான் என்ன?

அவரது விரக்திக்கான காரணம், என் ஒருவனுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம். அந்த இரகசியத்தை வெளிப்படுத்தாது இந்தப் பந்தியை நிறைவு செய்ய இயலாது.

இரண்டு வருடங்களின் முன்னர் தொழில் ரீதியான புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஆறுமாத காலப் பயிற்சிநெறி யொன்றுக்காக லண்டன் சென்றிருந்த நான், குறிப்பிட்ட ஆறுமாத காலமும் அவரது மகனது வீட்டிலேயே தங்கியிருக்க நேர்ந்தது. அவரது மகன் எனது சிறுவயதுப் பள்ளித் தோழனாதலாலும், அவர்களுடன் ஆறு மாத காலம் தங்க நேர்ந்ததாலும் அவரது மகனது லண்டன் வாழ்க்கை நிலை குறித்து அவனது தந்தைக்கு விவரமாய் எடுத்துரைக்க வேண்டிய நிலையும் பின்னர் எனக்கு ஏற்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மண்ணில் பிறந்து வளர்ந்த அவரது மகன் லண்டன் சென்ற பின்னர் தனது பிறந்த மண்ணுக்குரிய கலாசார, பண்பாட்டு, பழக்கவழக்க விழுமியங்களை முற்று முழுதாகக் கைவிட்டு விட்டதை நான் அவதானித்திருந்தேன். போதாததற்கு லண்டனிலேயே பிறந்து வளர்ந்து வாழும் அவனது மனைவி, பிள்ளைகள் மேற்கத்தேச கலாசாரத்துடன் ஒன்றிப்போய் விட்டிருந்தனர். தான் பிறந்த மண்ணின் பெருமை குறித்து அவர்களுக்கு எடுத்துக்கூற மறந்த இமாலயத் தவறைப் புரிந்தது மட்டுமன்றி அவனும் கூட மேற்கத்தேச கலாசார சூழலுடன் ஒன்றிப் போய்விட்டது எனது மனதை உறுத்தியதால் அவனது தகப்பனுடன் எனது மன ஆதங்கத்தைப் பகிர்ந்து கொண்டதுண்டு;


இன்று அவரது மகன் தனது குடும்பத்தவருடன் முதற்றடவையாக யாழ்ப்பாணம் வர விருப்பது ஊரில் தாம் காணும் ஆன்மீக கலாசார சீர்கேடுகள் குறித்து விமர்ச்சிக்கும் அவரைக் கவலைக்குள்ளாக்குவதும் நியாயமே. இவரது விமர்சனங்களாலும் கண்டனங்களாலும் மனம் கோணிப்போனவர்கள், இவரது மகனது குடும்பத்தவர் இங்கு தங்கும் வேளை - அவர்களது நடையுடை பாவனை, பழக்க வழக்கங்கள், தமிழ்மொழி அறியாத்தன்மை இவை குறித்து கேலியும் கிண்டலும் அல்லவா செய்யப்போகிறார்கள். போதாததற்கு இவரைப் 'பழசாக'க் கருதி எரிச்சல்படும் இளைஞர்கள் 'ஊருக்கடி உபதேசம்; உனக்கல்லடி கண்ணே' என்றல்லவா இவரது முதுக்குப் பின்னால் நையாண்டி செய்யப்போகிறார்கள்? இவரைப் போன்றோர் தமது சொந்த வாழ்க்கையில் விரவியுள்ள பொட்டுக்கேடுகளை நிவர்த்திக்க இயலாவிட்டால் விமர்சனங்களை மட்டுப்படுத்திக் கொள்வது மனச் சிரமத்துக்குப் பரிகாரமாய் அமையும்.

அவரது கவலை நியாயமானதே. ஆனால் , அதனைப் போக்கிடும் வழியேதும் தெரிவதாய் இல்லை. இப்போது இது குறித்து கேட்டால் கூட, 'இதுவெல்லாம் நல்லூரானின் திருவிளையாடல்' என வேதாந்தம் பேச ஆரம்பித்து விடுவார்.

தவறுகள் குற்றங்கள் அல்ல; அவை திருத்தப்படக் கூடியவையே.

— பொன்வேளன்

# 'தந்தால் வாங்கலாம்' என்கின்ற கையேந்து நிலை வேண்டாம்!



அன்று சங்கானை கலாசார மண்டபம் கூடியிருந்தது. சமூக சேவகர்கள், அதிகாரிகள், ஊர்மக்கள், நலன் விரும்பிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் துறையினர் , போராளிகள் என்று.... ஊர் முன்னேற்றத்துக்காக உழைக்க விரும்பும் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் மாணவர்கள், ஆற்றுகையில் அரங்க செயற்பாட்டுக் குழுவினர் என அந்த மண்டபவெளி நிரம்பியிருந்தது.

ஊர் கூடுதல் என்பது இன்று அருகிக்கொண்டு போகின்றது என்போர் மத்தியில் கொஞ்சப்பேர் கூடியிருந்தனர். ஏனெனில், எம்மைப் பார்க்க எமது ஊருக்குள்ளும் சரி, நாம் தற்காலிகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் முகாம்களுக்குள்ளும் சரி எம்மைத் தேடி வந்தாலும் 'தந்தால் வாங்கலாம்' என்ற கையேந்தும் நிலைக்கு நம் சமூகம் இன்று பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இலாபகரமான கைங்கரியத்தை சில அரச சார்பற்ற அமைப்புகள் தம்மையும் அறியாமல் மேற்கொண்டு வருகின்றன. மக்களின் நலன்களில் அக்கறை கொள்வதாகக் கருதி வெறும் அசைவற்ற சோம்பேறிகளை உற்பத்தி செய்கின்றன. ஆனால், எல்லோரி டமும் தன் சுயத்தில் தான் வாழ வேண்டும் என்ற விருப்பு இருக்கின்றது. அந்த [illegible]ப்பைப் பயன்படுத்த களம் இல்லை. அவனின் கடலும் கரைகளும், பச்சை [illegible]ல்வெளிகளும், வயல்களும் வரம்புகளும் ஆக்கிரமிக்கப்பட்டு இயற்கை வளங்கள் இயங்குவாரின்றிக் கிடக்கின்றன. உண்மையில் எங்கள் வளங்களின் சொத்துக்கள் எல்லையற்றவை. அவை எம் கையில் இருக்குமானால் நாம் யாரையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. இதுவே எமது தேவையும் கூட. இந்தத் தேவைகளை செயற்படுத்தும் நோக்கில் யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் மாணவர்களினால் 'ஊர் உயர உழைப்போர் அரங்கு' செயற்படுத்தப்பட்டது. அரங்க ஆற்றுகை மூலம் மக்களின் சாதாரண இருப்பையும், எதிர்கால இருப்பையும் எடுத்துக் காட்டினார்கள். இந்த அரங்கு பாடல், இசை, ஆற்றுகை, உரையாடல்கள் இணைந்த ஒரு 'பகிர்வரங்காக' அமைந்திருந்தது. அனைவரும் ஆர்வத்தோடு ஈடுபட்டு தமது எண்ணங்களை வெளிப்படுத்தினர். தமது சூழலில் சுதந்திரமான, சுபீட்சமான வாழ்வை விரும்புகிறார்கள். அவ்வாறு வாழ்வதற்கு அவர்களின் கிராமம் முன்னேறவேண்டும். அபிவிருத்தி நடைபெறவேண்டும் என விரும்புகிறார்கள்.

இதுபற்றி அரச உயர் அதிகாரிகள் கூறும்போது "நாம் அவர்களின் முன்னேற்றச் செயற்பாடுகள் பற்றிக் கதைக்க அழைத்தால் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்ள வருவதில்லை. விளையாட்டுக் கழகங்களை அழைத்தாலும் அவர்கள் வருவதில்லை. ஏதும் 'தந்தால் வாங்கலாம்' என்றே எதிர்பார்க்கின்றனர். மக்கள் எல்லோரிட்டையும் கையேந்தி வாங்கிப் பழகிட்டினம்" என்கின்றனர். ஆயினும் ஊரும் மக்களும், ஊரை முன்னேற்றவேண்டும் என்ற விருப்பம் அனைவரிடமும் இருந்தது. எனினும் அதுபற்றி நம்பிக்கை மட்டும் தொனிக்கவில்லை. அந்த நம்பிக்கையுடனான உண்மையானதோர் ஈடுபாட்டுடன் அவர்கள் தம்மை வெளிப்படுத்தி, பகிர்ந்து, ஒன்றிணைந்து

### "சில தொண்டு நிறுவனங்கள் சோம்பேறிகளையே உருவாக்குகின்றன....."

செயல்முனைப்பு பெறுவதற்கான ஒரு களமாகவே 'ஊர் உயர உழைப்போர் அரங்கு' செயற்பட்டது.

இது பற்றி அரங்க செயற்றிட்ட ஒழுங்கமைப்பாளர் ஜே.கிரிதரன் கூறுகையில் - "வலி.மேற்குப் பிரதேச சபையின் ஊர் தோறும் நாம் மக்கள் வீடுகளை நாள்தோறும் தேடிச் சென்றோம். அவர்களின் இருப்பையும், விருப்பையும் எதிர்கால வாழ்வு பற்றியும் அவர்களுடன் அருகிருந்து கேட்டோம். அவர்களின் ஊர் முன்னேற்றம் கருதி கிராம மட்ட அமைப்புப் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசியல்துறையினரும், பல்கலைக்கழக கல்விமான்களும் ஒன்றுசேரக் கலந்துயோசிப்போம் என இந் நிகழ்வை நாடகமும் அரங்கியலும் பாடத்தின் செயற்றிட்டமாக ('Theatres Project ) திட்டமிட்டு அதற்கு 'ஊர் உயர உழைப்பவர் கூடும் அரங்கு' எனப் பெயரிட்டோம்" - என்றார்.

இந்த அரங்கின் ஊடாக தமது கிராமங்களினை, ஊர்களை தாமே திட்டமிட்டு நிர்மாணிப்பவர்களாக, தமது கிராமங்களின் சுயத்தை தாமே நிர்ணயிப்பவர்களாக ஊர் மக்கள் மாறவேண்டும். அப்போதுதான் தமது சுயமான வளர்ச்சியினை பாதிக்கும் காரணிகளை இனங்கண்டு அவற்றோடு போராடித் தமது வாழ்வுக்காக குரல் கொடுக்கின்ற மக்களாக ஒவ்வொரு கிராமங்களின் மக்களும் எழுச்சியடைவார்கள். தமது தேசத்தினதும் அபிவிருத்திக்குமான வளர்ச்சியாக பரிணமிக்கும். அதற்கு அரங்கின் வலுவும் பலம் சேர்க்கின்றது.

இங்கு அரச அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக புலமை சார்ந்தோர், சமூகமட்ட அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், சமுர்த்தி அலுவலர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், அரசியல்துறையினர் சார்ந்த 150 இற்கும் மேற்பட்டோர் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

- தர்மினி பத்மநாதன்.

# பெண்கள் முன்னேற்றத்தில் சமுதாயத்தின் பங்களிப்பு...

உலக சனத்தொகையில் பெண்களின் வீதம் அதிகமாகக் காணப்படுகின்றது. இவர்களது வளங்கள் நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்றவகையில் முற்று முழுதாக பயன்படுத்தப்படுவதில்லை. இவர்களின் வளங்களை முழுமையாகப் பெற்று அபிவிருத்தி மேற்கொள்ளவேண்டுமானால் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அகற்றப்படவேண்டும். பெண்களுக்கான உரிமைகள் முற்றுமுழுதாக அவர்களைச் சென்றடைய வேண்டும். அவர்கள் உரிமைகளை முழுமையாக அனுபவிக்க வேண்டும்.

பெண் பிறக்கும்போது சுதந்திரமாகத்தான் பிறக்கிறாள். பின் அவளை வளர்க்கும் போதுதான் ஒவ்வொரு வகையான கட்டுப்பாடுகளுக்குள்ளாகிறாள். தாய், மகள், சித்தி, மனைவி என்ற பாத்திரத்திற்குள் கட்டுப்பட்டு பாசம் அன்புக்கு இலக்கணமானவள் என்று வரையறுக்கப்பட்டு பொறுமைசாலியாகப் பூசிக்கப்பட வேண்டியவள் என்ற கோட்பாடு திணிக்கப்படுகிறது. இந்நிலைமை தாய் வழியாக தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு பால் ரீதியான வேறுபாடு விதிக்கப்படுகிறது.

ஆண் தலைவன். ஆணுக்குக் கீழ்தான் பெண் அடங்கி வாழ வேண்டும். ஆண் வீரமுடையவன் பெண் கொடியிடையாள், பூமாதேவியானவள், பொறுத்துப்போவாள் என்கிற வறட்டு வேதங்களுக்குட்பட்டு தாமே தமது ஆசைகளை, உணர்வுகளைப் பூட்டி வைத்து வளர்க்க வளர வைக்கப்படுகிறார்கள். இந்நிலைமை ஆணாதிக்கம் மேலோங்கக் காரணமாகியதுடன், ஆண்களை எவ்வகையிலும் மிஞ்சிவிடக் கூடாது என்கின்ற பாரபட்சத்திற்கும் இட்டுச் சென்றது. இத்தகைய பால் ரீதியான வேறுபாடானது பெண்ணினது ஆளுமையினையும் தன்னம்பிக்கையினையும் சிதைத்துப் போகப் பொருளாக மாறியது.

இன்றைய நிலையில் அடக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் இப் பெண் மாமியார் கொடுமை, கணவனின் கொடுமை, சீதனக்கொடுமை, போக்குவரத்தில் துன்புறுத்தல், வேலைக்குச் செல்லும் போது ஏற்படும் கொடுமைகள், பெண்கள் மீதான பாலியல் உறவு நாளாந்தம் பல்வேறு வன்முறைகளுக்கு ஆளாகிறார்கள்.

அன்பு, கருணை, இரக்கம், பாசம் எனும் பதங்களைப் பெண்களுக்கே உரித்தானவை என்று கூறி அவர்களை அன்பினால் அடி பணியவைத்து வன்முறைகளை அவர்கள் மீது திணிக்கும் ஒரு நாசுக்கான தந்திரத்தை இல்லங்களிலுள்ளவர்கள் கையாண்டு வருகின்றனர். பெண்கள் மீது திணிக்கும் வன்முறைகள் சமூகத்திற்கு விரோதமான

சி. மணிமாலா

மனிதகுலம் வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம். பெண்கள் இத்தகைய அடக்கு முறைகளுக்கும் வன்முறைகளுக்கும் இடையில் இருந்து விடுபட்டுக் கொள்ளவேண்டுமானால் உணர்வு நிலையைத் தாண்டி, பழைய சம்பிரதாய முறைகளை மூடை கட்டி விட்டு அறிவு சார்ந்த முடிவுகளைச் சுயமாக எடுத்துக் கொள்ளவேண்டும். சில காலத்தின் முன்பு தலை நிமிர்ந்து தமது சொந்தக் காரியங்களையே துணிச்சலாகச் செய்ய முடியாமலும் இருந்தனர். இந் நிலை மாற வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அழிக்கப்பட வேண்டும்.

பெண் சாதனைகள் பல படைத்து புகழ்களும், பாராட்டுதல்களும் பெற்றுக் கொள்கிறாள். ஆற்றலும், ஆளுமையும் அறிவும் மிக்க பெண்கள் சமூகப் போலித்திரைகளைக் கிழித்து வெளிவந்து தாங்களும் செயற்பட முடியும் என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். பெண்ணின் கல்வி வளர்ச்சியும், பெண் அமைப்புக்களின் விழிப்புணர்வும் இவற்றை எல்லாம் சாத்தியமாக்கி இருக்கின்றன.

பெண் சமூகம் விடிவு பெற பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஒழிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு பெண்கள் வன்முறைகளற்ற சமுதாயத்தில் வாழ வேண்டும். தமக்கெதிரான தடைகளை உடைத்தெறிய வேண்டும். பெண்கள் தமது உரிமைகள் என்னவென்று ஊக்குவிக்க வேண்டும். இச் செயற்றிட்டத்தைப் பல்வேறு மட்டங்களிலும் நடைமுறைப்படுத்தவேண்டும்.

பெண்கள் விழிப்புணர்வு பெற நிறுவனங்கள் சார்ந்த அறிவு சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்தப் புரட்சியின் மூலம் ஒவ்வொரு பெண்ணையும் விழிப்புணர்வு பெற வைக்கவேண்டும். இதன் மூலம் வீட்டினதும், நாட்டினதும் அபிவிருத்தி மேம்படும். பெண்கள் சுதந்திரமாகவும் சந்தோசமாகவும் வாழ்வார்கள்; பிறரையும் வாழவைப்பார்கள்.




## அக்கினிப் பரீட்சை ஆரம்பமாகின்றது

குழந்தையில் காலாட்டவும்
கைவீசவும் கற்றுத்தந்த
பெற்றோர் - இன்று
வாய்திறந்தோர் வார்த்தை
பேசத் தடை..... ஏன்?
பெண்ணாகப் பிறந்ததற்காகவா?
குதூகலித்த கணங்கள் குறண்டி விட
ஊருக்குப் பறைசாற்றல்
என்பிள்ளை தாயாகத் தயார்
அவள் மேனியில்
கருங்கம்பளங்கள்
இரும்புப் பூட்டுக்கள்
இயற்கையின் இருப்பை
சடங்காக்குகின்றது சமூகம் -
இல்லை....

அவளைச்
சடலமாக்குகின்றது
சடலக் குவியல்களினால்
மௌனங்கள் மலிந்தன
மங்கள வாழ்வென எண்ணி
மரண ஓலங்கள் வாழ்வில்
அவளோ அவனோ
துயிலுரிகை
ஆதிக்க அரணில்
அவனோ படுக்கையில்
இங்குதான்...
அக்கினிப் பரீட்சை
ஆரம்பமாகின்றது....
இந்த சமூக இருப்பு
சாம்பலாகும்போது
நிலம் வெடிக்கும்
'கொற்றவை' பீறிட்டெழுவாள்.

– தர்மினி பத்மநாதன்

## வெண்டையோ வெண்டை.....



- பிஞ்சு வெண்டைக்காயை விதைகளோடு கற்கண்டு சேர்த்து தினமும் இருமுறை சாப்பிட்டுவர உள்ளங்கால் வலி, கண் எரிச்சல் குணமாகும்.
- வெண்டைப் பிஞ்சைக் கூழாக அரைத்து கட்டிகள், புண்கள், காயங்கள், நகச்சுத்தி என்பவற்றில் தடவினால் குணமாகும்.
- வெண்டைப் பிஞ்சைக் கூழாக அரைத்து - வெந்தயத்தை உறவைத்து அதனுடன் சேர்த்து அரைத்து தலையில் தேய்த்து குளித்தால் பொடுகு போகும்.
- துண்டுகளாக நறுக்கி வேக வைத்து ஆறிய பின் சிறிது தேனும் உப்பும் சேர்த்து பிசைந்து சாப்பிட தொண்டை, வயிறு எரிச்சல், நீர்க்கடுப்பு என்பன குணமாகும்.

## கறுப்பான பெண்களே நீங்களும் அழகுதான்...



பெண்கள் அனைவரும் அழகுடன் இருக்கத்தான் ஆசைப்படுவார்கள். ஆனால் எல்லோராலும் அழகுடன் ஜொலிக்க முடிவதில்லை. ஏனெனில், சில பெண்கள் வீட்டில் இருந்தபடியே வெளியே எங்கும் செல்லாமல் வீட்டு வேலைகளிலேயே பாதி நேரத்தைக் கழித்து விடுவதால் அழகுக்கு அக்கறை காட்ட முடிவதில்லை.

வேலைக்குப் போகும் பெண்கள், படிக்கும் பெண்கள், வீட்டு வேலைகளில் அக்கறை காட்டும் பெண்கள் எவராயினும் தன் சருமத்திலும் சிறிது அக்கறை காட்ட வேண்டும்.

ஏனெனில், எந்த ஒரு சரும கோளாறாக இருந்தாலும் முதலில் நம்முடைய முகத்தில் தான் வெளிப்படும். அதுவும் இந்தக் கொளுத்தும் வெயிலில் முகத்தைச் சரிவரப் பராமரிக்காவிட்டால் முக அழகு சிதைந்து சின்னாபின்னமாகிவிடும்.

நாம் அன்றாடம் வீட்டு வேலை செய்த பிறகும் வெளியே சென்று வீடு திரும்பிய பிறகும் குளிர்ந்த நீரினால் முகத்தை அலம்ப வேண்டும். ஏனெனில், நம் சருமம் வெப்பத்தி னால் பாதிக்கப்படக் கூடும். இதனால் முகத்தில் முகப்பரு போன்ற பல்வேறு கோளாறுகள் வர வாய்ப்பு உண்டு.

வாரத்திற்கு இரண்டு, மூன்று தடவை ரோஜா இதழ்கள் நன்கு அரைத்து முகத்தில் தடவி வந்தால் முகத்தில் பளபளப்பு வரும்.

கோவா, கரட், உருளைக் கிழங்கு ஆகிய மூன்றையும் அரைத்து முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்து கழுவினால் முகம் பொலிவுடன் விளங்கும்.

தோடம்பழநீர், முள்ளாங்கி நீர், உழுத்த மாவு ஆகிய மூன்றையும் சேர்த்து முகத்தில் தடவி வந்தால் கருமை நிறம் நீங்கி முகம் பளபளக்கும். வெற்றிலைச் சாறு எடுத்து உதட்டில் தடவினால் உதட்டில் ஏற்படும் வெடிப்பு நீங்கும்.

அகமும் புறமும் பொலிவுடன் விளங்க திராட்சை, தோடம்பழம், மாதுளம் பழச்சாறுகளைப் பருகவேண்டும். நமது அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

நன்றி : மாலைமலர்

### அர்த்தமுள்ள வாழ்விற்கு...

குடும்பத்தின் பொது நலன்தான் முக்கியம் என்று கணவனும் மனைவியும் எண்ணத் தொடங்கி விட்டால் பிரச்சினைகள் தோன்ற வழியில்லை. இதில் பரஸ்பர நம்பிக்கைதான் முக்கியம்.

## சந்தியாவின் கடிதங்கள்



ஹாய் பிரியா

நீ அனுப்பிய கடிதம் கிடைத்தது. உன் உள்ளத்துக் குமுறல் களை அதில் எழுதியிருந்தாய். வாசித்த எனக்கு உண்மையில் வே[illegible]னைதான் ஏற்பட்டது.

நீ எழுதிய அனைத்துமே உண்மைதான். பெண்ணாகப் பிறந்ததால்தான் இந்தச் சமூகம் நம்மை அடக்கி ஆள்கின்றது. இது வீட்டில் மட்டும் நிகழ்வதில்லை; நாம் வேலை செய்யும் அலுவலகங்களிலும் இந் நிலைதான்.

நீ உன் கடிதத்தில் எழுதிய சில வரிகளை இங்கு மீள நினைவூட்டுகின்றேன். ஏனடி நாம் பெண்ணாய் பிறந்தோம். அதனால் தானே எமக்கு இந்த வேதனை. என் அலு வலகத்தில் பெண்களுக்கு எந்தவித உரிமையுமில்லை. சிறு விடயங்களுக்குக் கூட அனுமதி பெறவேண்டும். எம்மையறியாமல் ஒரு சிறு விடயத்தை அனுமதியின்றி (அது என் அலுவலகத்திற்குப் பயன்தரக்கூடியது) செய்து விட்டால் உடனே தட்டி அடக்கப்பட்டு விடுவோம். ஏனெனில் நாங்கள் பெண்கள்.

இது உன் அலுவலகத்தில் மட்டும் நடக்கும் விடயமல்ல. அநேக அலுவலகங்களிலும் இந்தத் தன்மை காணப்படுகின்றது.

பல அலுவலகங்களில் ஓர் ஆணைவிடப் பெண்ணே அதிக பணியாற்றுவார்கள். ஆனால், அதே தரத்தில் சம உத்தியோகத்தராக இருக்கும் – ஆனால் குறைந்த பணியாற்றும் ஆண்களிற்கு வழங்கும் ஊதியத்தில் அரைவாசியே பெண்களிற்கு ஊதியமாக வழங்குவார்கள்.

சில அலுவலகங்களில் நீ பெண். உனக்கு இதுதான் லிமிட் என்று அடக்கியும் வைப்பார்கள். இதற்கு என்ன தீர்வென்று கேட்டிருந்தாய். தீர்வை நானோ நீயோ எடுக்க முடியாது. ஆனால், அதற்கு சில வழிமுறைகளை மட்டும் (வழிமுறைகளைச் சொல்வதில் கூட அலுவலகங்களில் பிரச்சினைகள் தோன்றலாம்) என்னால் சொல்ல முடியும்.

எமது குடாநாட்டிலுள்ள, பெண்களின் அபிவிருத்தியில் அக்கறையுள்ள அமைப்புக்கள் அலுவலகங்களில் சகல மட்டத்திலும்பணிபுரியும் பெண்கள் மட்டிலும் அக்கறை கொள்ளவேண்டும்.

அவர்களுக்கென்றொரு சங்கம் அமைத்து அச் சங்கத்தின் மூலம் அவர்களின் குறைகள் கேட்டறிந்து தீர்க்கும் வழிகள் குறித்து ஆராயப்பட வேண்டும். பெண்கள் மட்டில் பெண்கள் அதிக அக்கறை கொள்ளவேண்டும். அதாவது ஓர் அலுவலகத்தில் உயர் பதவியிலுள்ள ஒரு பெண் அதிகாரி தன் கீழ் வேலை செய்யும் பெண்கள் மட்டில் கூடிய கவனம் எடுத்துச் செயற்பட வேண்டும்.


இவையெல்லாவற்றையும் விட பெண்கள் தொழில் புரியும் நிறுவன உரிமையாளர் அப் பெண்களின் உரிமைகளை வழங்குவதில் பின்னிற்கக் கூடாது.

அடுத்த கடிதத்தில் தொடரும் வரை....

பிரியமுடன் சந்தியா

# அத்திலாந்திக் கடல் தாண்டி அமெரிக்கா சென்ற 'அன்னபூரணி அம்மாள்'

ஊழிமுதல்வனாய் நின்ற சிவனை ஆழியான் என்றழைப்பது சைவத் தமிழ் மரபு. மந்திரமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு தேவர்கள் ஒருபக்கமும், அசுரர்கள் ஒரு பக்கமும் நின்று பாற்கடலைக் கடைந்த வரலாறு எங்கள் சமய வரலாறு. நஞ்சைக் கக்கி வந்த அமுதத்தை நஞ்சாக்க வாசுகி முனைந்தபோது, 'பெயர்க்கண்டும் நஞ்சுண்டு அமர்ந்தவர்' சிவனார். அதைக் கண்டத்தில் நிறுத்திக் காத்தவர் உமையாள். இதனால் நஞ்சுண்ட கண்டனாகவும் நீலகண்டனாகவும் அவர் விதைந்துரைக்கப்பட்டார். இன்னொரு பக்கம் பாற்கடலில் பாம்பின் படுக்கையில் பள்ளிகொண்டார் பரந்தாமன் - முனிவர்களுக்கு முதல்வனாக அகத்திய மாமுனி, கடலை உள்ளங்கையில் எடுத்து பருகினார். கோபம் கொண்ட ஒரு தமிழ் அரசன் அம்பு எறிந்து ஆழியையே வற்றச்செய்தான். தவவலிமையால் முனிவர்கள் கடல் மீது நடந்து சாதனை படைத்தனர். சீதையை மீட்டெடுப்பதற்காக அனுமனின் படைகள் இராமர் அணை போட்டு ஈழத்துக்குச் சென்றனர்.



### கடாரம் வென்ற தமிழ் மன்னர்கள்

இரண்டாம் உலகப்போருக்கு முன்னரும், போர்த்துக்கேயர் காலத்திற்கு முன்னரும் பல நூற்றாண்டு காலமாகத் தமிழ் பேரரசர்கள், ஆழ் கடலை தங்கள் வலிமையாலும், கடலோடும் மற்றும் கப்பல் கட்டும் திறனாலும் கட்டி ஆண்டிருக்கிறார்கள். சேர, சோழ, பாண்டியர்கள் கடல் கடந்து கடாரம் சென்று தத்தம் கொடிகளை பறக்கவிட்டனர். தமிழ் நாட்டில் இருந்து பிற நாட்டினரின் ஆதிக்க காலத்திலும், கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் வலுவான வாழ்க்கையை பார்க்கிறோம். இவற்றை விடக் கடற்கொள்ளைக்காரரிடமிருந்தும், அரேபியரிடமிருந்தும் தம்மை பாதுகாப்பதற்கான ஒரு பாதையை வகுத்து தமிழ் நாட்டிலுள்ள செட்டிமார் வாணிபம் செய்தனர். இவர்கள் கனவான்களாக இருந்து ஒரு பெரும் வணிக சமூகத்தையே உருவாக்கி இருந்தனர். இவர்களில் பெரும் செல்வந்தவர்கள் எல்லாம் ஈழத்து வல்வெட்டித்துறையில் வந்து தங்கி அங்குள்ள கப்பல் கட்டும் துறைமுகத்தில் கப்பல்களை கட்டுவித்து, விசாக பட்டினம், கொச்சின், கல்கத்தா மற்றும் தூரகிழக்கு, மத்தியகிழக்குத் துறைமுகங்களுக்கு, வாசனைத்திரவியங்கள், அரிசி, ஒடு, தேக்கமரம், சந்தனமரம் போன்றவற்றை ஏற்றியும் அந்தந்த நாட்டிலுள்ள பொருள்களைக் கொண்டுவந்து இறக்கியும் பாரிய வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

### மரபுபேணிக் கப்பல் கட்டி வல்லமை படைத்த தமிழர்கள்

மன்னார், சிலாபம் போன்றவற்றிலும் தமிழ் நாட்டிலுள்ள விசாகப் பட்டினம் போன்றவற்றிலும் முத்துக் குளிப்பித்தும் ஆனையிறவு, பரந்தன், அம்பாந்தோட்டை போன்ற இடங்களில் உப்பு விளைவித்தும் சங்கு குளித்தும், வேறு கடல்படு திரவியங்களை எடுத்தும், வாணிபத்தில் ஈழத் தமிழரும் செட்டிமாரும் மேலோங்கி இருந்தனர். இந்த வகையில் ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலுள்ள துறைமுகங்கள் உதவின. இவற்றுள் வல்வெட்டித் துறைமுகம், கப்பல் கட்டுதல், நங்கூரமிடல், பருவகாலங்களில் கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்கல் என்பவற்றிக்கு சிறந்த இடமாகவும் இருந்தது. அந்தக் கிராமத்தில் வாழையடி வாழையாக மரபு பேணிக் கப்பல் கட்டும் திறனில் வல்லமை படைத்த வல்லாளர்களின் குடும்பங்கள் பல இருந்தன. கடல் பற்றிய பல திறம்பட்ட அறிவும், அனுபவமும், ஆளுமையும் இவர்களிடம் நிரம்ப இருந்தது படகு செலுத்துவதிலும் பருவக் காற்றுக் காலங்களிலும், கப்பற்பாய்களை உரியவாறு பாய்மரங்களில் ஏற்றியும், அலைகளுக்கு ஏற்றவாறு கப்பல்களைக் கையாண்டு சுக்கான் மூலம் திசை மாற்றுவதிலும், கடற்கலை கைவந்த தண்டயல்களும், மேஸ்திரிமாரும் அங்கிருந்தனர். இது எழுதிப் படிக்கும் கலை அல்ல. குலவித்தையாக அவர்களிடம் கல்லாமற் பாகம் பட்டிருந்தது. அன்று இலங்கையிலிருந்த கப்பல் கட்டும் துறைகளில் மிகச் சிறந்ததாக வல்வெட்டித்துறை திகழ்ந்ததென்பதை பிற நாட்டுக் கடற்றுறை வல்லுநர்களும் ஏற்றுக்கொண்டனர். அக் காலத்தில் வல்வெட்டித் துறைமுகத்தில் எந்தநாளும் 50 இக்கும் மேற்பட்ட கப்பல்களின் நடமாட்டம் இருந்தாக அறியக் கிடக்கின்றது. ஏற்றுமதி, இறக்குமதியும், கொள்வோர் ஓசையும் கொடுப்போர் ஓசையும் பல்கியிருந்தது.

### மூழ்கிய கப்பலை மீட்டெடுத்த வல்வைச் செல்வந்தர்

*1850 ஆம் ஆண்டளவில் (12000) பன்னிராயிரம் தொன் எடையுடைய* **'Atlantic King'** *என்ற பிரித்தானியக் கொம்பனிக்குச் சொந்தமான பாரிய கப்பல் ஒன்று திருகோணமலைக்கு அண்மையில் கடலில் மூழ்கிப் போனது. அதன் உரிமையாளர்கள் எவ்வளவோ முயற்சித்தும் அதனை வெளிக் கொண்டு வரமுடியவில்லை. வல்வெட்டித்துறையச் சேர்ந்த, ஸ்ரீ.ரீ.வெங்கடாசலம் என்ற செல்வந்தரான கப்பற் சொந்தக்காரர் ஒருவர் மூழ்கிய நிலையில் இருந்த அந்தக் கப்பலை விலைக்கு வாங்கினார். பெருமுயற்சி செய்து பிற கடலோடிகளின் உதவியோடு அதனை வெளிக் கொண்டு வந்து விற்றுப் பெரும் பணம் சம்பாதித்தார்.*

நா.க.சண்முகநாதபிள்ளை

இந்த நிதியைக் கொண்டு வல்வெட்டித் துறையில் சிவன் கோயிலொன்றைக் கட்டினார். இவர் தமது 58ஆவது வயதில் சிவபதமடைந்தார். இந்தச் செய்தி அவரைப் பாடிய சமரகவியில் அறியக் கிடக்கிறது.

இதைவிட 1916 ஆம் ஆண்டில் S.S.St.Johns என்ற மற்றொரு கப்பல் காங்கேசன்துறைக்கு அண்மையிலுள்ள கடலில் மூழ்கியது. கப்பல் உரிமையாளரினால் இதனை எடுக்க முடியாமல் போகவே வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மற்றுமொரு கப்பற் சொந்தக்காரரான வடிவேலுமேஸ்திரியார் என்ற செல்வந்தர் அதனை வெளிக்கொணர்ந்து பெரும் தொகைப் பணத்தைப் பெற்றார். இந்த நிதியைக் கொண்டு கப்பல் அமிழ்ந்த இடத்திற்கு அண்மையில் 'நகுலகிரி நாராயண சுவாமி' என்ற விஷ்ணு ஆலயத்தைக் கட்டினார். மேற்கூறிய இரண்டு ஆலயங்களும் இன்றும் இருப்பதைக் காணலாம்.

(வளரும்)

# சமகாலச் சூழலை தொட்டுச் சென்ற 'தாயகம்' நாடகம்!

கண்டி ராஜ்ஜியத்தின் கடைசி மன்னனான ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனை மையமாக வைத்து ஒரு சில கற்பனை நிகழ்வுகளுடன் வரையப்பெற்ற நாடகமே 'தாயகம்'.

2005 - 07- 10 அன்று நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினர் இளங்கலைஞர் மண்டபத்தில் அரங்கேற்றிய இந்த ஒன்றரை மணி நேர நாடகத்தை அரங்கை நிறைத்திருந்த மக்கள் பார்த்து மகிழ்ந்தனர்.

கண்டியைத் தாயகமாகக் கொண்ட தமிழ் நாயக்க வம்சத்தில் பிறந்து வளர்ந்த கண்ணுசாமி 1798இல் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் என்ற பெயரோடு கண்டி அரசனாகி அரசாட்சி செய்து கொண்டிருந்த காலகட்டத்தில், அவிசாவளையைக் கைப்பற்றி ஆண்டுகொண்டிருந்த வெள்ளையர்கள் கண்டி இராஜ்ஜியத்திலும் கண் வைக்கின்றனர். அது கண்ட மன்னன் தனது நிரந்தர படைக்கு உதவியாக 'தனித்தமிழ்ப் படையணி' என்ற ஒன்றை உருவாக்கி 1915 ஜனவரியில் வெள்ளையரோடு போர்புரிவதை எடுத்துக் காட்டும் கதையாகவே 'தாயகம்' சித்திரிக்கப் பெற்றுள்ளது.

கதை, வசனம், பாடல்கள், மெட்டமைப்பு, நடிப்புப் பயிற்சி, நெறியாள்கை ஆகிய பொறுப்புக்களை நாடக ஆசிரியரான நவாலியூர் நா.செல்லத்துரை கையாண்டிருக்கின்றார். இவருக்கு இணையாகவும் ஆடை அலங்காரத்தையும் வைரம் சந்திரசேகரம் கவனித்திருக்கின்றார். ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனின் தனித்தமிழ் படையணிகள் தளபதிகளான அரிமன்னனும் மாயவனும் மன்னனுக்கு எதிராக மாறி அப் படையணியின் பெரும்படைத் தலைவனான வில்லவனைக் கொல்வதையும் அதனால் வில்லவன் வேதனைப் படுவதையும் பார்த்த ரசிகர்களின் கண்கள் பனித்ததைக் காண முடிந்தது.

அதே நேரம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய தளபதிகளான முத்து வீரனும் சிங்கமலையும் அந்தச் சதிகாரர் இருவரையும் சுட்டுக் கொன்றது காட்சியிலே ஒரு திருப்பத்தையும் அவையினர் கண்களிலே ஒரு மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.

மாவீரரான வில்லவனின் வித்துடலுக்கு வீரவணக்கம் செலுத்திய ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் தனது உரையில்....

'வில்லவா, தாயகச் சுதந்திரம் காப்பதையே மூச்சாக, பேச்சாகக் கொண்டு மாவீரன் ஆனவனே! உன் நினைவாக ஓர் ஆலயம் மிக விரைவில் எழும்பும். மக்களின் மனதிலே சுதந்திரத்தின் மகிமையையும் அவசியத்தையும் ஒவ்வொரு வினாடியும் அது நினைவூட்டிக் கொண்டேயிருக்கும்' - என்று கூறி சோகத்தின் உச்சியில் அவர் நின்ற காட்சியும் வில்லவனின் தந்தை வேல்மாறன் (தனித்தமிழ் படையணியின் முன்னை நாள் பெரும்படைத் தலைவன்) வில்லவனின் மனைவி நிர்மலா ஆகியோர் கத்திக் கதறி அழுத காட்சியும் மன்னனின் பணிப்புரைக்கேற்ப முத்து வீரன் - சிங்கமலை - அநுஞன் ஆகிய தளபதிகள் வில்லவனின் உடலை மக்கள் பார்வைக்கு வைப்பதற்காகச் சுமந்து செல்லும்போது பின்னணிக் குரலில் -

*'வீரத்தின் வித்தே நீ சுதந்திரம் காப்பதற்கு*
*இன்னும் பல வீரரை விளைப்பதற்கோ*
*வித்தானாய் இன்று வித்தானாய்... வித்தானாய்...'* - என்று ஒலத்தபாடலும் மக்கள் மனதை உருக்கிக் கண்களைக் குளமாக்கி விட்டன. இது எமது மாவீரச் செல்வங்களின் நினைவுகளைக் கிளர்த் தியது. நிகழ்வின் முடிவாக வரும் காட்சி எல்லோர் மனதையும் கவர்ந்த ஒன்றாகவே அமைந்தது. கண்டிராஜ்ஜிய அரண்மனை யில் இருந்து போர் முரசு ஒலி எழுப்புவதும் அது கேட்ட மன் னன் வீறு கொண்டெழுந்து 'போர்...! போர்...! போர்...!' என்று தனது உணர்ச்சித் தொனியை திசையெல்லாம் பரப்புவதும் போர்க் களம் செல்வதும்,

அதே நேரம்

*'யுத்தமுரசு கேட்குது எங்கள் உடலில் வீரம் தேக்குது*
*செல்வோம் நாங்கள் திரண்டு எழுந்து*
*கொல்வோம் எதிரிப் படையை அழித்து'*
.....................
.....................
.....................
*வாலைக் குமரிகள்*
*வாலிப மட்டங்கள்*
*தாய் தந்தை வட்டங்கள்*
*செல்லட்டும்*
*நஞ்சுகளான அந்நியப்*
*படையை*
*போரில் நொருக்கிக் கொல்லட்டும்* - என்ற பாடல் தொனிப்பதுவும் அப்பாடலுக்கு ஏற்ப ஒரு போர் நடனம் ஆடப்படுவதும் போர் நடனம் முடியும் தறுவாயில் நடிகர்கள் அவையினருக்கு அறிமுகமாவதும் அந்த நடிகர்கள் அவைக்கு நன்றி கூறிப் பாடுவதும் எதிர்பாராத காட்சிகளாக அமைந்தன. அவையினருக்குப் புளகாங்கிதத்தைத் தந்தன.





நாடகத்தில் ஒரு காட்சி.....

நடிகர்கள் அத்தனை பேரும் தத்தம் பாத்திரங்களை உணர்ந்து மிகச் சிறப்பாக - அளவாகச் - செய்தமை பாராட்டுக்குரியது.

சுதந்திர தாகம் - வீரம் - தீரம் - ஆனந்தம் - சிந்தனை - சிரிப்பு ஆகிய சுவைகளைச் சேர்த்து உருவான இக்கதை கண்டி ராஜ்ஜிய மண்ணுக்கு மட்டுமல்ல சுதந்திரத்திற்காகப் போராடும் எமது இன்றைய சூழலுக்கும் பொருந்தும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆசிரியர் அப்படி நினைத்துத்தான் எழுதினாரோ என்ற ஐயத்தையும் பார்வையாளர்கள் எழுப்பாமலில்லை.

எது எப்படி இருப்பினும் ஒரு காட்சி நாடகமான இது அழகுத் தமிழையும், அடுக்குத் தமிழையும் வீரத் தமிழையும், உணர்ச்சித் தமிழையும் தன்னகத்தை கொண்ட விறுவிறுப்பான ஒன்று. இவைகள் 'தாயகம்' நாடகத்தின் கனதி எனலாம்.

ஒளி, ஒலி இரண்டும் ஆசிரியருக்கு கைகொடுக்கவில்லை. நடிகர்கள் ஒரு பக்கத்தில் இருந்து பேசும் ஒலி சீராக வருவதும், மறுபக்கதில் இருந்து பேசும் போது விட்டுவிட்டு வருவதும் பார்வையாளர்களுக்குச் சங்கடமாகவே இருந்தது. ஒளியும் தனது பூரணத்துவத்தை வெளிப்படுத்தவில்லை. இது தாயகத்தின் குறை. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் நீண்டதொரு இடைவெளிக்கு பின்னர் சலிப்போ அலுப்போ தட்டாத ஒரு நல்ல நாடகந்தான் 'தாயகம்' என்பது பார்வையாளர்களின் கருத்து. கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை பாராட்டுப்பெற வேண்டியவர்தான். அவர் கையாண்ட கண்டிய மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் என்ற பாத்திரம் (வை.சந்திரசேகரம்) துடிப்பும், மிடுக்கும், எடுப்பும் பேசும் திறனும் வாய்க்க நடித்தமை நாடகத்தின் மெருகேற்றத்திற்கு இன்னொரு சிறப்பு ஊக்க மாத்திரையாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சாரங்கி

## சிலந்தி போல சில....

இருளில்
ஒரு துளி
அசைவது போல்...
சுவரின்
விளிம்பில் நழுவியது...
ஒளியூட்டி,
எண்ணியபோது
எட்டல்ல கால்கள்
ஏழுதான்....
இருந்தாலும்
'சிலந்தி' என்றது
வெளிச்சம்
தென் ஈர்க்குக்
கற்றைகளின்
கால் தீண்ட உவப்பில்லா
இடுக்கில்
இருந்தது சிலந்தி
பாதி அடிபட்டு
பதறிப் பதைபதைத்து
நாசினியில்
நாசி
நாற்றமிசைத் துயருற்று
நான் ஓடும்
ஈருருளி மீது
இடுக்கில் ஒளிந்துள்ளது!

இறந்ததுவோ?
இல்லை
இறங்கி
மறைந்ததுவோ?
உறுதிப்பாடில்லாது
இருக்கையினில் ஏறி
இருப்பதுதான்
எவ்வாறு?

சக்கரத்தன்
மேலிடுக்கில்.....
'சீற்' அடியில்
'செயின் கவரில்....'
சிக்கியதோ என்று
பெருந்தேடல்!
ஆளுக்கு ஆள் மாறித்
தேடியதில்;
திகில் கொண்டு
ஓடியதில்; வந்து
கூடியது அயல்!

அரைமணியின் பின்
அமைதி தொலைந்திருக்க
சற்றுத் தொலைவில்
எப்போதோ
செத்துப்போய்
அமைதியாய்
கிடந்தது
'சிலந்தி'!

*வே.சாரங்கன்.*

## இயலாமை....

பேச்சற்றுப்போன
காட்டில்
ஒளியின்
கிளைகள் தேடி
அலைகிறேன்
நெடுந்துயருள்
மூழ்கியது
ஊர்.
யாரிடமும்
புன்னகையில்லை
நிலவு வராத
இரவுகள்
நீண்டன.
ஒரு நொடியில்
சுவடுகளற்றுப்
போனது வாழ்வு
கனவுகளைத்
தொலைத்தவரின்
கவிதைகள்
நனைந்தன.
பூக்களே
இல்லாத ஊரிற்கு
வண்ணத்திகள்
எப்படி வரும்?
இறுதியில்
ஏதுமியலாது
நாங்கள்
துயரங்களை
விற்கத்
தொடங்கினோம்.

த.அகிலன்.

# உள்ளூர் உற்பத்திகளின் வீழ்ச்சியைத் தடுப்போம்!

பாரம்பரிய தொழில்கள் அருகிவருவது பற்றி முன்னரொரு தடவை இப்பத்தியின் கவனம் குவிந்தது. பாரம்பரிய தொழில்கள் மட்டுமல்ல. சுதேசிய உற்பத்திகளும் கூட வலுவிழந்து மெல்லமெல்ல அழிந்து வருகின்றன.

சுயசார்புப் பொருளாதார முறைமை நிலவிய போது உள்ளூர் உற்பத்தியாளர் பெரிதும் நன்மைகளை அடைந்தனர். உற்பத்தியாளர் தமது உற்பத்திகளை இலகுவாகச் சந்தைப்படுத்தக் கூடியதாக இருந்தால், தமது உற்பத்திகள் தொடர்பில் நஷ்டமடையவோ, பிரச்சினைகளை எதிர்கொள்ளவோ வேண்டியிருக்காவிட்டால் பிரச்சினையில்லை. மேலும் மேலும் தமது உற்பத்திகளை மேற்கொள்வதில், உற்பத்தியின் அளவையும் தரத்தையும் பேணுவதில் கரிசனை கொள்வர்.

1977 ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கை அமுலுக்கு வரும் வரை உள்ளூர் உற்பத்தியாளர்களின் காட்டில் நல்ல மழைதான்!. ஆனால், அதன் பின் தொடர்ந்த ஆண்டுகளில் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பெரிதும் நஷ்டமடையவும், அதனால் உற்பத்திகளை நிறுத்த வேண்டியும் ஏற்பட்டது. பன்னாட்டு வணிக நிறுவனங்களின் போட்டிச் சந்தையாதிக்கத்துக்கு முகம்கொடுக்க முடியாமல் உள்ளூர் நிறுவனங்கள் முடங்கிப் போயின. இத்தகைய முடக்கத்துக்கு யுத்தமும் ஒரு புறநிலைக் காரணி என்பது மறுக்க முடியாததே!.

முன்னர் வடபகுதி விவசாய உற்பத்திகளே தென்னிலங்கைச் சந்தைகளை நிறைத்தன என்பது மிகைக் கூற்றல்ல. ஆனால், யுத்தத்தாலும், அரச உதவிகளின் பாரபட்சத்தாலும் வடபகுதி விவசாயப் பொருளாதாரம் சிதைந்தழிந்து போயிற்று. மறு புறத்தில் மகாவலி பலநோக்குத் திட்டம் போன்ற நீண்டகால நன்மையைத் தரும் கூட்டுத்திட்டங்களால் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் விவசாயம் அபிவிருத்தி கண்டது. இப்போதோ தம்புள்ள சந்தை மரக்கறிகளை எதிர்நோக்கியிருக்கின்றன வடபகுதிச் சந்தைகள்.

தென் பகுதியில் சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் ஏற்றுமதிக் கிராமங்கள் பல உள்ளன. இவற்றை நிர்வகிக்கும் மக்கள் கம்பனிகள் பலவும்உள்ளன. இவற்றின் மூலமாக உற்பத்திகள் சர்வதேச தரம் வாய்ந்தவையாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இதனால் அங்குள்ள மக்களின் பொருளாதார வாழ்வு மேம்பாடு கண்டிருக்கின்றது.

யுத்தப் பாதிப்புகள் ஏற்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பல தொழிற்சாலைகள் இயங்கின. அளவெட்டியில் பேனா மை தயாரிக்கும் தொழிற்சாலையொன்று இருந்தது. தும்புத் தொழிற்சாலைகள், நெசவுத் தொழிற்சாலைகள், மெழுகுதிரி உற்பத்தித் தொழிற்சாலைகள் எல்லாப் பிரதேசங்களிலும் இயங்கின. பெயர் பெற்ற 'ரோஸ் பிராண்ட்' ரொபித் தொழிற்சாலை மானிப்பாயில் இயங்கியது. சர்வதேச தரம் வாய்ந்ததாக, இலங்கையில் முன்னணி வகித்ததாக இந்த ரொபிகள் விளங்கின. கண்ணாடித் தொழிற்சாலை நீர்வேலியிலும், வாளிகள் தயாரிக்கும் தொழிற்சாலை மாவிட்டபுரத்திலும், ரயர் தொழிற்சாலைகள் நாவற்குழி, கைதடி - நுணாவில் பகுதியிலும் இருந்தன. இறால் பதனிடும், கடலுணவுகள் தயாரிக்கும் படகுக் கட்டுமானம் செய்யும் தொழிற்சாலைகளும் இருந்தன. சுன்னாகம், உரும்பிராய் உட்பட பல

### யாரோடு நோவோம்...?

இடங்களிலும் அலுமினியத் தொழிற்சாலைகளும் இயங்கின. சோடா உள்ளிட்ட மென்பானத் தயாரிப்பு நிலையங்களும் இருந்தன. பெரிய பண்ணைகள், அரிசி ஆலைகள் பலவும் கூட இருந்தன. ஆனால் இவற்றில் பல இன்றில்லை. சிவவற்றை மீள இயக்கிய போதிலும் வரையறைக்கு உட்பட்ட உற்பத்திகளையே மேற்கொள்ள முடிகிறது. உற்பத்தி செய்யும் பொருள்களைச் சந்தைப்படுத்துவதிலும் பெரியளவில் இடர்பட நேரிடுகின்றது.

போட்டி வணிகச் சூழலில் பல்தேசிய நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்டு, கவர்ச்சிகரமான விளம்பரம் மூலம் நுகர்வோரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பொருள்களோடு உள்ளூர் உற்பத்திகள் போட்டி போடுவதென்பது பெரும்பாடுதான்.

ஒரு காலத்தில் இலங்கை முழுவதும் அறியப்பட்ட - அனைவராலும் பயன்படுத்தப்பட்ட மில்க்வைற் சவர்க்காரம் போன்றவை கூட இன்று மிகச் சிறிய அளவிலே உற்பத்தி செய்து தமது வாழ்வாதாரத்துக்கு ஏற்ற வகையில் சந்தைப்படுத்தலைச் செய்யவே முடிகின்றது.

பல்தேசிய நிறுவன உற்பத்திகளின் பலமே விளம்பரந்தான். கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலமே அவை நுகர்வோரைச் சிறைப் பிடிக்கின்றன. ஆனால் இங்குள்ள உற்பத்தியாளர்களிடம் விளம்பரம் செய்யவும், நவீன தொழில்நுட்பத்துடன் உற்பத்திகளை மேற்கொள்ளவும், சந்தைப்படுத்தல் நுட்பங்களைப் புரிந்து அதற்கேற்ப உற்பத்திகளை விநியோகம் செய்யவும் கூடிய அறிவும் அனுபவமும் பணமும் இல்லை. மூலதனப்பற்றாக்குறையைச் சீர் செய்து - உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதிலோ, மானியங்கள், கடன்களை வழங்குவதிலே அரசுக்கும் அரச நிறுவனங்களுக்கும் விருப்பமில்லை.

காணிகளை வாங்கி, மாளிகைகளை எழுப்புவதில் காட்டும் ஆர்வம் தொழிற்சாலைகளை உருவாக்குவதில் நமது புலம் பெயர் உறவுகளுக்கு இல்லை.

எல்லா ஆர்வங்களையும் உதாசீனப்படுத்தி விட்டு 'யுத்தம்' என்ற அச்சமிகு அரக்கன் காத்திருக்கிறான். யுத்தமற்ற -

அமைதியான - சமாதானமான சூழல் எப்போது சித்திக்கும் என்ற எதிர்பார்ப்பிலேயே பலரும் உள்ளனர். அவ்வாறானதொரு சூழல் கனியும் வரை - 'யுத்தம் வருமோ?' என்ற அங்கலாய்ப்பு எழும் வரை - நமது உற்பத்திகள் வலுவிழந்து அழிவதே கதி என்றாகிவிட்டது.

அவ்வாறு அழியாமல் காப்பதும், யுத்தத்தின் மத்தியில் நமது உற்பத்திகளைப் பயனுறுதியும் வினைத்திறனும் மிக்கதாக ஆக்குவதும் அவசியமாகும்.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்துக் காப்பது தேச விடுதலையோடு இணைந்த பணியாகும். இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்திலும், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்திலும் இது தொடர்பில் பெரிதும் கவனம் செலுத்தப்பட்டது.

இப்போதுள்ள போட்டிச் சூழலில் உள்ளூர் உற்பத்திகளின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்துவது தேச நலன் நோக்கிய மிகமிக்கிய பணியாகும்.

**ஏகலைவன்**

# ஹொலிவூட் பாணியில் தமிழில் வந்திருக்கும் 'அந்நியன்' படம்

பலத்த எதிர்பார்ப்புகளுடன் ஒரு வழியாகத் திரைக்கு வந்துவிட்டது 'அந்நியன்'. சட்டத்தரணி விக்ரம் நேர்மையானவர். போக்குவரத்து விதிகளை யாராவது மீறினால் 'டென்ஷன்' ஆகிவிடுவார். வேலை வெட்டி இல்லாமல் நாள் முழுவதும் யாராவது குடிபோதையில் இருந்தால் விக்ரமால் அதைச் சகிக்க முடியாது இப்படி ஒரு பாத்திரம்.

இந்நிலையில் அவருக்குள் ஒரு நோய் குடிபுகுந்துவிடுகிறது. அநீதியை சகிக்கவே முடியாதபோது 'அந்நியன்' என்ற பெயரில் இன்னொரு பாத்திரமாக மாறுகிறார். தவறு செய்பவர்களைக் கொலைசெய்துவிடுகிறார்.

குடுமியுடன் இருக்கும் தன்னை சதா வெறுப்பதால் மற்றொரு பாத்திரமாகவும் மாறுகிறார். அதில் ஜீன்ஸ், ரீசேட்டுடன் ஆங்கிலத்தில் பேசி சதாவை தனது வழிக்குக்கொண்டு வரும் ரெமோவாக வருகிறார்.

அந்நியனாக மாறி கொலைகளை செய்ததால் கைதாகிறார் விக்ரம். கடைசியில் தனது நோய் பற்றித் தெரியவரும்போது தனக்கு தண்டனை தருமாறு நீதிபதியிடம் கோருகிறார். விக்ரமுக்கு பலத்த பாதுகாப்புடன் மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும், அவர் குணமடைந்துவிட்டால் விடுதலை செய்யலாம் எனத் தீர்ப்பளிக்கிறார் நீதிபதி.

2 ஆண்டுகளுக்கப் பிறகு விடுதலையாகிறார் விக்ரம். அவர் குணமாகிவிட்டாரா, இல்லையா என்பதுதான் மர்மம். 'இந்தியன்' படத்தை அப்படியே கொஞ்சம் மாற்றி, ஹொலிவூட் படங்களிலிருந்தும் சில விஷயங்களை எடுத்து 'அந்நியனி'ல் புகுத்தியிருக்கிறார் ஷங்கர்.

'இந்தியனி'ல் தனது கணவர் இறந்தபின் தனக்கு வரவேண்டிய நிவாரணத் தொகையைக் கேட்க செல்வார் மனோரமா. அதைத் தரக்கூட அதிகாரி ஒருவர் லஞ்சம் கேட்பார். லஞ்சம் தராததால் மனோரமாவின் கணவர் பெயரைச் சொல்லி அவருக்கு நீ மனைவி அல்லவப்பாட்டி எனக் கூறி, மனோரமாவுக்கு சேரவேண்டிய தொகையும் தரமாட்டார். அப்போது கமல் அந்த அதிகாரியை கொல்லும்போது அந்த முழுக் காட்சியுடன் ரசிகர்கள் அப்படியே மூழ்கிப் போவார்கள். கமல் செய்வதில் நியாயம் இருப்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்டியிருப்பார் ஷங்கர்.



'அந்நியனி'ல் அப்படி ஒரு காட்சியைக் கூட கூறமுடியாது. இதிலும் தவறு செய்பவர்களைக் கொல்கிறார். ஆனால், இவ்வளவு பெரிய படம், அதுவும் முன்னணி இயக்குநர், ஹீரோவின் படம், அதில் வில்லன்களைக் கொல்வதற்கான காரணமாவது வலுவாக இருக்க வேண்டாமா?

மினிவான் பிரேக் அறுந்து போனதற்காக ஒருவரைக் கொல்கிறார் , வீதி விபத்தில் அடிப்பட்டவருக்கு உதவாதவரைக் கொல்கிறார். வேலைக்குச் செல்லாமல் குடித்துக் கொண்டிருப்பவரைக் கொல்கிறார். ரயில் பயணிகளுக்கு சரியாக உணவு தயாரிக்காதவரைக் கொல்கிறார்.

இதையெல்லாம் பார்க்கும்போது விக்ரமுடைய பாத்திரம் மீது ஈர்ப்பு ஏற்படுவதற்கு பதிலாக, இதற்கெல்லாம் கொல்கிறாரே என்ற வெறுப்புதான் ஏற்படுகிறது.

அந்நியனாக மாறும் விக்ரம், ரெமோவாகவும் மாறுவது ஓவர், ரெமோ வரும் காட்சிகள் படத்துடன் சிறிதும் ஒட்டாமல் தொங்குகின்றன. சதாவுடன் பேசிக்கொண்டே இருக்கும்போது விக்ரம் அந்நியனாக மாறி, அவரைக் கொல்லவரும் காட்சியில் பேய் படம் பார்க்கும் உணர்வு ஏற்படுகிறது.

படத்தில் பாராட்டுக்குரிய விஷயங்களில் விக்ரம், பிரகாஷ்ராஜின் நடிப்பு, ஹரிஸ் ஜெயராஜின் இசை, முதல் பாதியில் சதாவிடம் காதலைச் சொல்ல விக்ரம் அலையும் காட்சிகள் ஆகியவை அடங்கும். ரசிகர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்யும் விஷயத்தில் திணறி இருக்கிறார் ஷங்கர்.

-ராம்

## செல்லையாத் தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்....-06

விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் தாத்தாவைக் கண்டதும் புளியமரத்தடிக்கு ஓடி வந்தனர். "தாத்தா சில சந்தேகங்கள்" என்றான் பிரியன். "சந்தேகம் அறிவு ரீதியாக வரேக்கை அது சந்தோசமான விடயம். இப்படிச் சந்தேகங்களை, கேள்விகளை முன்வைச்சதாலைதான் இண்டைக்கு அறிவியலிலை அளப்பரிய பல கண்டுபிடிப்புக்கள் கிடைச்சிது. சரி, உமக்கென்ன சந்தேகம், சொல்லும்" என்று கூறிச் சிரித்தார் தாத்தா.

"போன கிழமை சௌரமான, சந்திரமானக் கலண்டர்கள் பற்றிச் சொன்னீங்கள்... உண்மையிலை தமிழ் - வருசம் எப்ப தொடங்குது?" கேட்டான் பிரியன்.

"தமிழ்-சிங்கள புதுவருசம் சித்திரையிலை வருகுது. இது கூட உனக்குத் தெரியாதே ?" என்று கடிந்தாள் சாந்தி.

"அவன் கேக்கிறது சரி பிள்ளை. உண்மையிலை இந்து சமயத்தவர்கள் தங்கடை சமய அனுஷ்டானங்களையும், சடங்குகளையும் தமிழுக்கு வரும் திதிகளிலேயே செய்வினம். ஆனால், இது ஆரிய வருடம் என்பதே சரியானது" என்றார் தாத்தா.

"அப்ப ஏன் ஆரிய வருசத்தை நாங்கள் பின்பற்றுகிறம்?" எனக் கேள்வி யெழுப்பினான் இனியன்.

"ஆரியர்கள் வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள். அவர்களின்ரை கையிலையே அப்போது ஆதிக்கம் இருந்தது. அவர்கள்தான் வானசாஸ்திரத்திலையும் சிறந்து விளங்கினவை. பண்டைய வானசாஸ்திரக் காரர்களிலை ஆரியப்பட்டர் என்பவர் முன்னோடியாய் விளங்கியிருக்கிறார். அதாலை, இந்து மதத்தைப் பின்பற்றுகிற மக்கள் ஆரியர்களாலை வகுக்கப்பட்ட சாஸ்திரங்களுக்கு அமைவாகத் தங்கடை கருமங்களைச் செய்யினை. தமிழர்கள் என்போர் திராவிடர்கள் என்ற இனப் பிரிவினர். ஆனாலும் ஆரிய வழக்கங்களைப் பின்பற்றிக் கொண்டு அதையே திராவிட, தமிழ் வழக்கங்களாகக் கருதி விட்டினை"

"அப்ப தமிழ் வருசம் எண்டுறது.....?" என்று கேட்டாள் பிரியங்கா.



"தமிழ் வருசம் எண்டுறது திருவள்ளுவர் ஆண்டையே. இப்ப திருவள்ளுவர் ஆண்டு 2036. யேசுகிறிஸ்து வருசத்துக்கு 31 ஆண்டுகள் முன்னாக அமைகிறது. உலகப்பொதுமறை என்று போற்றப்படும் திருக்குறளை ஆக்கியளித்த திருவள்ளுவரின் பெயரில் இந்தத் தமிழ் வருசம் அமைகிறது....

"ஓமோம்...வள்ளுவர் ஆண்டு எண்டு உதயன் பேப்பரிலை போடுறவை...நான் பாத்தனான்..." சாந்தி குறுக்கிட்டாள். "ஆரிய வருசம் சித்திரையிலை தொடங்குது. அதே போல தமிழ் வருசம் - திருவள்ளுவர் ஆண்டு - தைமாதம் முதலாம் நாளில் தொடங்குது. உழவர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தை முதலாம் நாளாகக் கொண்டு திருவள்ளுவர் ஆண்டு அமையுது. கதையோடை கதை... அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாஸா' செவ்வாய் கிரகத்திலை மூன்று பெரிய பாறைகளைக் கண்டு பிடிச்சிருக்கு. அதுகளுக்கு மூன்று இந்தியப் பெயர்கள்தான் சூடப்பட்டிருக்கு. சிறப்பு மிகு வைரக் கல்லான 'கோஹினூர்', பழம்பெரும் பல்கலைக்கழகமான 'நாலந்தா' ,தமிழர் திருநாளான 'பொங்கல்' ஆகியவையே அப் பெயர்கள்."

"தமிழ் மாதம் தை, மாசி,பங்குனி எண்டு போகும். என்ன தாத்தா?" என்றான் இனியன்.

"இல்லையில்லை. தையிலை இருந்து மார்கழி வரை வாற பன்னிரண்டு மாதமும் தமிழ் மாதமல்ல. தமிழ் மாதத்தை வரிசைக்கிரமமாகச் சொல்லுறன்.

சுறவம்,கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவை, கடகம்,மடங்கல்,கன்னி,துலை,நளி,சிலை என்பதாக தமிழ் மாதங்கள் அமையும். அதேபோல தமிழ் கிழமை நாள்கள் ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி என அமையும்."

"ஆக புதனும்,சனியுந்தான் பெயர் மாறுது என்ன தாத்தா?"

"ஓம் ஓம்...அதே போல எண்களும் தமிழ் எண்களாக வேறையிருக்கிறது. 1முதல் 9வரையான அராபிய இலக்கங்கள் முறையே க, உ, ங ,ச,ரு ,சா ,எ, அ, கூ என்று அமையும் தமிழ் நாட்டிலை தனித்தமிழ் இயக்கங்கள் இருக்குது. அவை வெளியிடும் நூல்களிலெல்லாம் தமிழ்ச் சொற்களும், தமிழ் இலக்கங்களுமே இருக்கும். 'தேன்மொழி நாள்காட்டி' முதலிய கலண்டர்களில இப்படி முழுமையாகத் திருவள்ளுவர் ஆண்டின் தமிழ் மாதங்களும்,நாள்களும், எண்களுமே இருக்கும்"


"நாங்களும் இப்படிப் பின்பற்றலாமல்லே தாத்தா" என்றான் இனியன்.

"பின்பற்றலாம். பின்பற்றும் காலம் வரும்" என்று சொல்லிய படி தாத்தா எழுந்தார். பிள்ளைகளும் பின் தொடர்ந் தனர்.

*தாத்தா மீண்டும் வருவார்*

**-பாபு அண்ணா**

## நிழலின் அருமை



**ஓர்** ஊரில் மனிதன் ஒருவன் வாழ்ந்து வந்தான், ஒரு வேலையும் செய்வதில்லை. வேலை தேட வேண்டும் என்ற எண்ணத்தில் அன்றுகாலை ஊரை விட்டுப் புறப்பட்டான்.

வெயில் ஏறியது ஒரே களைப்பாக இருந்தது. தூரத்தே ஒரு பூவரசம் மரம் கிளை பரப்பி நின்றது. அதனைக் கண்டதும் அந்த மனிதன் மரத்தின் கீழ் சென்று இளைப்பாறினான்,காற்று மெதுவாக வீசியது. களைப்பின் உச்சத்தில் தூங்கிவிட்டான் .

வெகுநேரம் சென்றதும் கண் விழித்துப் பார்த்தான். 'குடை பரப்பி நின்ற இந்த மரத்தை வெட்டி விற்றால் நல்ல வருமானம் வருமே' என்று எண்ணியவன் அதனைச் செயலாக்கினான்.

மரக் கிளையை வெட்டி எடுத்துக் கொண்டு சென்று விற்றான் பணம் வந்தது. அகமகிழ்ந்தவன் இவ்வாறு ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு கிளையாக வெட்டிக்கொண்டு சென்று விற்றுப்பணத்தைத் தேடினான்.

பணம் மீது கொண்ட ஆசையால் அவன் வீதியோரம் நின்ற மரத்தின் கிளைகளையும் வெட்டி விற்க ஆரம்பித்தான்.

ஒரு நாள், பக்கத்து ஊருக்கு அவசர வேலையாகச் சென்றான். வெயில் கொளுத்தியது. உடல் களைத்து விட்டது எங்காவது ஓரிடத்தில் தங்கலாமா? என்று அவனது கண்கள் தேடின, தூரத்தில், வெட்டிய மரத்தின் அடிக்குற்றிதான் தெரிந்தது.

அப்போது தான் அவனுக்கு தங்கி ஓய்வெடுத்த மரநிழலின் அருமை தெரிந்தது. 'இனி எந்த மரங்களையும் வெட்ட மாட்டேன்' என முடிவெடுத்தான் அந்த மனிதன்,

***'மரங்கள் மனிதரின் நண்பன், அதனை அழிப்பதால் எமது ஆயுளை இழக்கிறோம்.'***

**- அப்பம்மா**




## பள்ளிக்கூடம்(School)

பள்ளிக்கூடத்தை நாம் ஆங்கிலத்தில் 'ஸ்கூல்' என்று அழைக்கின்றோம். இந்த 'ஸ்கூல்' என்பதற்கு அழகிய பொருள் உண்டு. அது என்ன என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| S - Sincerity | *நேர்மை* |
| C - Capacity | *திறமை* |
| H - Honesty | *உண்மை பேசும் குணம்* |
| O - Obedience | *மரியாதை* |
| O - Orderliness | *ஒழுக்கம்* |
| L - Learning | *கல்வி அறிவு* |

*இத்தகைய பண்புகளைப் போதிக்கும் இடம் பள்ளிக்கூடம் என்பதை விளக்குவதே (School) என்தாகும்.*

**சிவசுப்பிரமணியம் வாமதீபன்,**
*கொக்குவில் இந்துக் கல்லூரி.*

## கண்ணாடி

*பொன்னாய் மின்னும் கண்ணாடி*
*முன்னால் நின்றால் முகங்காட்டும்*
*கண்ணால் நம்மை நாம் காண*
*பின்னால் தன்னுள் ரசம் பூசும்.*

*அகத்தில் படியும் அழுக்கெல்லாம்*
*எடுத்துக் கூறும் நண்பன் போல்*
*முகத்தில் தெரியும் குறையாவும்*
*முழுக்கக் காட்டும் கண்ணாடி*

*சற்றே கவனம் இழந்தாலும்*
*கையில் நழுவும் கண்ணாடி*
*முற்றும் சிதறித் தூளாகி*
*முகத்தைக் காட்டும் ஒவ்வொன்றும்.*

*சிதறித் தூளாய் விழும் போது*
*சிரிக்கும் விதமாய் ஒலிகூட்டும்*
*எதிலும் கவனம் வரவேண்டும்.*
*இதனை விளங்கும் கண்ணாடி*

*ஒளிதான் விழியில் குறைந்தாலும்*
*அணிகின்றார்கள் கண்ணாடி*
*விளக்கில் திரிகள் எரிந்தாலும்*
*வெளிச்சம் பெருகும் கண்ணாடி.*

*கடுகானாலும் பெரிதாகக்*
*காட்டும் பூதக் கண்ணாடி*
*படிக்கும் நாளில் கண்ணாடி*
*பரிசோதனையில் துணையாகும்.*

*படங்கள் மாட்டும் சட்டத்துள்*
*பளிங்காய் மின்னும் கண்ணாடி*
*குடிக்கும் கிளாஷாய் உருமாறும்.*
*கொடுக்கும் பயன்கள் பலவாகும்.*

**தொகுப்பு: கிருஸ்ணா கிரிஜா.**

## சிந்தனைக்கு...

- நீ துன்பத்தில் சிந்துகின்ற
  கண்ணீர்த் துளிகளே
  உனது வாழ்வுக்கான
  அத்திபாரமாக அமைகின்றது
- ஓய்வை விவேகத்துடன்
  பயன்படுத்துவதே
  கல்வியின் குறிக்கோள்.
- எங்கு ஒரு நூலகம்
  திறக்கப்படுகின்றதோ
  அங்கு ஒரு சிறைச்சாலை
  மூடப்படுகின்றது.
- எனக்கொன்று உள்ளதை எவரும்
  தடுக்கமுடியாது
  எனக்கென்று இல்லாததை எவரும்
  கொடுக்க முடியாது.

ஆக்கம்:
***சிறீஸ்கந்தராஜா அசோக்கமாலா***
*2006A/L கலைப்பிரிவு*
*யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.*

**தம்பி, தங்கைகளே!**

'சிறுவர் பொழில்' பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.



***வை.தர்மினி***
*தரம் - 11*
*யா/இந்து மகளிர் கல்லூரி.*

## வசந்த காலத்தில் மட்டுமே குயில் கூவும்

வசந்தகாலம் தொடங்கியதுமே காற்றுடன் கலந் தொலிக்கும் குயில்களின் இனிய கீதம் செவிகளில் இன்பத்தேனைப் பாய்ச்சுகிறது. பெண் குயில்தான் இவ்வளவு இனிமையாகப் பாடுகிறது என்றுதானே நினைத்திருக்கிறீர்கள்? உண்மை இதுவல்ல. ஆண் குயிலின் குரல்தான் தேனில் குழைத்தாற் போன்று இனி மையானது.

ஆண் குயிலையும், பெண் குயிலையும் தனியாகப் பிரித்தறியலாம்.



ஆண் குயில் பார்வைக்குக் காகம் போன்றே இருக்கும். பெண் குயில் சாம்பல் நிறமானது. அதன் உடலில் சில வெண்புள்ளிகளும் உண்டு.

வசந்த காலத்தில் தான் குயில் இணை சேருகிறது. 'கூ,கூ' என்ற இனிய நாதம் எழுப்பி ஆண் குயில், பெணணைத் தன்பால் கவர்ந்து இழுக்கிறது. இணை சேரக்கூடிய பருவம் முடியும்போது பாட்டும் நின்று போகிறது. வசந்த காலத்தில் மட்டுமே குயில் பாடுவதற்கு இதுதான் காரணம்.

பெண்குயில், தனது முட்டைகளைத்தானே அடைகாப்பது இல்லை. குயில் முட்டையிடுவதே காகத்தின் கூட்டில்தான். காகம் குயில் முட்டையையும் சேர்த்து அடைகாக்கும். காகம் மனிதர்களது குடியிருப்புக்கு அருகிலேயே கூடு கட்டுவதால, குயிலும் வேனிற் காலத்தில் இங்கே முட்டை இட வருகிறது. முட்டையிட்டபின் அது அடர்ந்த காட்டுப் பகுதியை நோக்கிப் பறந்து செல்கிறது. எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள வசதியாக இலைகள் மிகுந்த பெரிய மரங்களில் வாழ்வது தான் இப்பறவைக்குப் பிடித்தமானது.

– கவிதா

# புலிகளைப் புறக்கணித்துச் செய்த ஒப்பந்தத்தின் தோல்வி!



இலங்கையில் இந்தியப்படைகள் தரையிறங்குவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்பாக புதுடில்லியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைச் சந்தித்த போது......

கொந்தளிப்பான இந்த நாள்களில் கிட்டு எம்மிடம் சென்னைக்கு வந்தார். யாழ்ப்பாணத்தில் கிட்டுவைக் கொல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் அவர் தப்பிப் பிழைத்திருந்தார். அந்தத் தாக்குதலில் கால் துண்டிக்கப் பட்ட நிலையிலே மருத்துவச் சிகிச்சைக்காகச் சென்னை வந்திருந்தார். இதே காலகட்டத்தில், இலங்கைத் தேசிய நெருக்கடிக்கு, அரசியற் தீர்வு ஒன்றை உருவாக்கும் முயற்சி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தீவிரம் பெறுவதாக ஊடகச் செய்திகள் தெரிவித்தன. இந்த முயற்சி புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையில் மட்டுமே நடந்துகொண்டிருந்தது. விடுதலைப் புலிகளுடன் காத்திரமானஆலோசனை எதுவும் நடக்கவில்லை. இந்தப் புதிய அரசியல் முயற்சி பாலாவுக்குத் திருப்தி தரவில்லை. விடுதலைப் புலிகளைக் கலந்தாலோசிக்காமல், ஓர் அரசியற் தீர்வை அவர்கள் எப்படி எடுக்க முடிவு செய்யலாம் என்பதே அவர் வாதம். எவ்வளவுதான் ஆழமான பேச்சுகளை நடத்தினாலும் சரி, இரு நாடுகளுக்கும் மத்தியில் அரசியல் இணக்கம் காணப்பட்டாலும் சரி, விடுதலைப் புலிகளைப் புறக்கணித்து எடுக்கும் முடிவானது புலிகள் மீதும் தமிழினம் மீதும் திணிக்கப்பட்ட ஓர் தீர்மானமாகவே இருக்கும். அதேசமயம், தமது தேசம் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து விவாதிக்கும் தமிழ் மக்களின் சனநாயக உரிமை மீறப்பட்டதாகவும் இருக்கும். நிலை இவ்வாறு மாற்றமடைவதை யொட்டி, நாம் கவலையோடு இருக்கும்போது, தமிழ் நாட்டு முதலமைச்சருடன் கலந்தாலோசனை நடத்துவதற்காக மாநில காவல்துறையினர் பாலாவை அழைத்துச் சென்றனர். பிரபாகரனும் அவருடைய அணியும் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்படுவதாக அவரிடம் அங்கே கூறப்பட்டது. அவர்களோடு சேர்ந்து பாலாவும் சென்னை விமான நிலையத்தில் இருந்து புதுடில்லிக்கு அரசியல் கலந்தாலோசனைக்காகச் செல்ல வேண்டும் என்று அவருக்கு அங்கு கூறப்பட்டது. பிரபாகரனுடைய அணியில் யோகியும், யாழ்ப்பாண அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீபனும் இருந்தனர். புதுடில்லியில் இருந்து பாலா எனக்குத் தகவல் தந்தார். இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை ஒன்றிலே புதிய யோசனைகள் தங்களுடைய அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் பார்வையிலே அந்த உடன்படிக்கை ஏற்க முடியாத ஒன்று என்றும் கூறினார். தாம் தங்கியிருந்த பயணிகள் விடுதி அறைக்குள்ளேயே தமது நடமாட்டம் முடக்கப்பட்டிருப்பதாகவும், கரும்பூனை அதிரடிப் படையினரால் தாம் சூழப்பட்டிருப்பதாகவும் பாலா அறிவித்தார். யோகரத்தினம் யோகியின் கருத்து வெளிப்படையாகவே இருந்தது. தமது அணியினர் அச்சுறுத்தப்படுவதாகவும், தாம் வீட்டு மறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் யோகி கூறினார். தொலைபேசியில் அவருடைய சீற்றம் தெரிந்தது. தங்கியிருந்த விடுதியில் இருந்து வெளியே தொலைபேசித் தொடர்பு கட்டுப்படுத்தப்படுவதாகவும், அது காரணமாகச் சிறிது காலத்துக்கேனும் பாலாவிடமிருந்து தொடர்பு எதுவும் கிடைக்காமல் போகலாம் என்றும் அவர் கூறினார். புதுடில்லியிலிருந்து சில நாள் கழித்து அவர்கள் சென்னை மீண்டபோது புதுடில்லியில் தாங்கள் நடத்திய பேச்சுவார்த்தை பற்றியே பாலா ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தார். ஜெயவர்த்தனாவுக்கும், ராஜீவுக்கும் இடையே கைச்சாத்தாக இருந்த ஒப்பந்தம் தொடர்பாகத் தமது ஆழமான நம்பிக்கையீனத்தை பாலா வெளியிட்டார். புதுடில்லியிலே விடுதலைப் புலிகளின் அணி கடுமையான நெருக்குவாரத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக என்னிடம் அவர் ஒப்புக் கொண்டார். வெளித் தொடர்பு துண்டிக்கப்பட்டு, பலத்த பாதுகாப்புடன் விடுதி அறைகளில் அவர்கள் விடப்பட்டிருந்தார்கள். ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தையும் படித்துப் பார்த்துத், தங்கள் ஒப்புதலை வழங்க, சில மணி நேர அவகாசமே அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஒப்பந்தத்துக்கு விடுதலைப் புலி அணி ஒப்புதல் அளிக்க மறுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவர் டிக்சிற் அச்சுறுத்தியிருந்தார். விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தை ஏற்றால் என்ன? நிராகரித்தால் என்ன? அது கைச்சாத்திடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் நிர்தாட்சண்யமாகக் கூறியிருந்தார். டிக்சிற் அவர்களுடைய வரம்பு மீறிய, அடாவடித்தனமான இராஜதந்திர அணுகுமுறை குறித்து பிரபாகரன் அவர்களும், பாலாவும் சினமடைந்திருந்தார்கள். தமிழ் மக்களின் அரசியல் வேணவாவை அந்த ஒப்பந்தம் சிறிதேனும் நிறைவேற்றாததால், விடுதலைப் புலிகளோ, ஈழத் தமிழ் மக்களோ, அதை ஏற்கமாட்டார்கள் என்று இந்திய இராஜதந்திரியிடம் விடுதலைப் புலிகளின் தலைவர் திட்டவட்டமாகக் கூறியிருந்தார். கடும் நெருக்குவாரம், தொந்தரவு, அச்சுறுத்தல் ஆகியவனவற்றை எதிர்கொண்ட போதும், விடுதலைப் புலிகள் தங்கள் நிலைப்பாட்டில் இருந்து தளரவில்லை. இறுதியில், இந்தியப் பிரதம மந்திரி ராஜீவ்காந்தி அவர்கள், பிரபாகரன் அவர்களையும் பாலாவையும் தமது இல்லத்துக்கு அழைத்தார். ஒப்பந்தம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை

**இந்திய - இலங்கை ஒப்பந்தம் எழுதப்பட்டு இந்த மாதத்துடன் 18ஆண்டுகள் நிறைவடைகின்றன. விடுதலைப் புலிகளைப் புறந்தள்ளிவிட்டு இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி எடுத்த ஒருதலைப்பட்சமான - ஏகாதிபத்திய நோக்கிலான - முடிவு கடைசியில் பாரத தேசத்துக்கே பெரும் அவமானத்தைத் தேடிக் கொடுத்தது. 1987 இல் உடன்படிக்கை கைச்சாதிடப்பட்ட காலச் சூழ்நிலையை நினைவுகூரும் கட்டுரை இது. திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய 'சுதந்திர வேட்கை' என்ற நூலில் இருந்து இதனை நன்றியுடன் மறுபிரசுரம் செய்கின்றோம்.**

பாலாவும், பிரபாகரனும் பிரதமருக்குத் தெளிவுபடுத்தினார்கள். அதில் கூறப்படும் மாகாண வடிவமைப்பில் உள்ள வரையறைகளையும் குறைபாடுகளையும் விளக்கினார்கள். வடக்கும், கிழக்கும் ஒன்றானது; இணைந்தது. தமிழ் மக்களின் தாயகம்; இந்திய ஐக்கிய ஒன்றிணைவை ஒப்பந்தத்தில் கூறுவது போல கருத்து வாக்கெடுப்புக்கு விடுவது அநியாயமானது; ஏற்கமுடியாதது - என்றும் அவர்கள் வாதாடினார்கள். ஜெயவர்த்தனாவைத் தமிழ் மக்கள் நம்பவில்லை என்றும் ஒருபோதும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அங்கீகரிக்கமாட்டார் என்றும் ராஜீவ்காந்திக்கும் அவர்கள் விளக்கி உரைத்தார்கள். அதே சமயம், ஒப்பந்தம் கூறும் வடிவம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னதாக, ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறு, அது கைச்சாத்தான எழுபத்திரண்டு மணிநேரத்துக்குள் தமிழ் விடுதலை அமைப்புகளின் ஆயுதங்களைக் களையவேண்டும் என்ற கோரிக்கையானது ஒரு பெரிய தவறு என்றும் இந்தியத் தலைவருக்கு விளங்கப்படுத்தப்பட்டது. ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது என்ற போதிலும், அதை அவர்கள் எதிர்க்கக்கூடாது என்று ராஜீவ் அவர்கள் வற்புத்தினார். வடகிழக்கில், இடைக்கால நிர்வாக அரசு ஒன்றை குறைந்த அதிகாரங்களோடு விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதாகவும் உறுதியளித்தார். ராஜீவின் யோசனை மட்டில் பிரபாகரன் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும், இந்திய அரசுடன் மோதலைத் தவிர்க்கும் பொருட்டு ராஜீவின் திட்டத்திற்குத் தாங்கள் சம்மதித்ததாகவும் பாலா என்னிடம் கூறினார். புதுடில்லியில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பாகப் பிரபாகரன் அவர்களுக்குத் திருப்தி இல்லை. சென்னையில் உள்ள எமது வீட்டுக்கு அவர் வந்தபோது, அவருடைய போராளிகள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் உள்ளடக்கமானது போராட்டத்தை எவ்வாறு பாதிக்கப்போகிறது என்பதை அறியும் பதகளிப்போடு போராளிகள் இருந்தார்கள். தம் மட்டில் இந்திய அதிகாரிகள் அடாவடித்தனமாகவும் அராஜகத்துடனும் நடந்துகொண்டதாகக் கருதிய பாலாவும் பிரபாகரனும் கடுப்புடன் இருந்தார்கள். ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலம் முழுவதும் இதே உணர்வே அவர்களிடம் மேவி நின்றது. டிக்சிற் அவர்களை ஒரு புத்தி சாதுரிய இராஜதந்திரியாகப் பலர் கருதியபோதும், விடுதலைப் புலிகளின் தலைமை அவரைக் குரூபியாகவும், கபட தாரியாகவும் நம்பிக்கைக்கு அருகதையற்றவர் என்றுமே கருதியது. இந்த ஒப்பந்தத்தைத் தயாரிக்கும் போது, தமிழ் மக்களை இது எவ்வளவு தூரத்துக்குப் பாதிக்கும் என்பது கவனத்துக்கு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் புலிகளின் வகித்த முக்கிய பங்கையும் கருத்தில் எடுத்திருக்க வேண்டும். ஒப்பந்தம் தொடர்பாகத் தெளிவாகவும், விரிவாகவும் விவாதிப்பதற்கு அவர்களுக்குப் போதிய காலமும், இடைவெளியும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இவற்றையெல்லாம் புறந்தள்ளி, புதுடில்லியில் விடுதலைப் புலித் தலைவர்கள் மிகவும் கீழ்த்தரமாக நடத்தப்பட்டமை வியப்பையே தருகிறது. இந்த வரலாற்று முக்கியம் பெற்ற நிகழ்வு தொடர்பாக நாம் புரிந்துகொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால், விடுதலைப் புலிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை என்பதும், அது உருவாக்கப்பட்டபோது அவர்கள் புறந்தள்ளப்பட்டார்கள் என்பதுமாகும். விடுதலைப் புலிகளின் போராட்டம் மட்டிலும், புதுடில்லி சென்ற அவர்களின் பிரதிநிதிகள் மட்டிலும் அடாவடித்தனமான போக்கைக் கடைப்பிடித்தமையால் இறுதியில், இந்தியா அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பெரிய விலை கொடுக்க வேண்டிநேர்ந்தது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து இலங்கையில் இரண்டு இனங்களினிடையேயும் நேர்மாறான கருத்துக்களே நிலவின. சிங்களத் தென்னிலங்கையில் இந்திய எதிர்ப்பு உணர்வு தலைதூக்கியிருந்தது. இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையீடு செய்திருப்பதை சிங்கள மக்கள் குறைகூறி ஆர்ப்பாட்டங்கள் நடத்தி எதிர்ப்புத் தெரிவித்தார்கள். வடக்கையும் கிழக்கையும் பொறுத்த வரையிலே, காலாகாலமாக இந்தியாவை ஒரு நேச நாடாகவும், பாதுகாப்பாளராகவும் கருதி வந்த தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரச



கொழும்பில் வைத்து, இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவரினால் தாக்கப்படும் ராஜீவ்காந்தி......

படைகளுக்கும் இடையே போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க வந்த இந்திய அமைதிப் படை தமக்குப் பாதுகாப்பையும் அமைதியையும் தரும் எனக் கருதினார்கள். 1987ஜூலை 30இல் பலாலி வந்திறங்கிய இந்தியப் படையினர், யாழ்ப்பாண தீபகற்பத்துக்குள் பிரவேசித்த போது, படையினருக்குப் பரவலாக மலர் மாலை சூட்டி வரவேற்பளித்தார்கள். அமைதிப் படை வந்த மூன்று மாதங்களுக்குள் அந்தப் படை தொடர்பாக இரண்டு இனங்களும் கொண்டிருந்த கருத்து நேரெதிர்த் துருவங்களைத் தொட்டன. இந்தியப் படைகளை வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள், ஆக்கிரமிக்கும் படையாக வெறுத்து எதிர்த்தார்கள். சிங்களவரிற் சில பிரிவினர், விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தாம் இது வரை நடத்திய போரை, தமக்குப் பதிலாக இந்தியப் படைகள் நடத்திக் கொண்டிப்பதையொட்டி மகிழ்ச்சியடைந்தனர். விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரச படைகளுக்கும் இடையே போர் நிறுத்தத்தை நமைமுறைப்படுத்துவதற்காகவே இந்திய அமைதிப் படை வந்திருப்பதாகப் புலிகள் நம்பிக்கொண்டிருந்தார்கள். ஒப்பந்தத்துக்கு அமைவாகப் புலிகள் நடக்கத் தவறினால், புலிகளிடமிருந்து வலுக்கட்டாயமாக ஆயுதங்களைக் களையவும் அமைதிப் படையைப் பயன்படுத்தத் தீர்மானித்திருந்தது என்பது விடுதலைப் புலிகளுக்குச் சிறிதும் தெரியாது.


(VIIIபக்கம் பார்க்க)

# உலகப் பொலீஸ்காரனை வளைக்கப் பார்க்கிறதா இந்தியா?

அண்மையில் இந்தியாவும் அமெரிக்காவும் செய்து கொண்டுள்ள அணுப்பாவனை தொடர்பான கூட்டு ஒப்பந்தம் உலக அரசியலில் சில முக்கியமான மாற்றங்களை கோடி காட்டுவதாகவுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் படி இந்தியா அணுசக்தி கொண்ட ஒரு நாடு என்பதை வெளிப்படையாக ஏற்றுக் கொண்ட அமெரிக்கா, ஐ.நா.சபையில் இந்தியாவுக்கான நிரந்தர உறுப்புரிமை தொடர்பாகவும் சாதகமான சமிக்ஞைகளைக் காட்டியிருக்கிறது.

மூன்று நாள் அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்க நாடாளுமன்றிலும் வெள்ளைமாளிகையிலும் உரை நிகழ்த்தினார். அத்துடன் பல முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து இந்தியாவின் நிலைப்பாடு குறித்தும் விளக்கியிருக்கிறார்.

அமெரிக்க - இந்திய உறவில் ஏற்பட்டிருக்கும் இந்த ஒப்பந்தம் விண்வெளி ஆராய்ச்சி, தகவல் தொழில்நுட்பம், அணு உற்பத்தி போன்றவற்றிலும் தீவிரவாதத்திடமிருந்து உலகைப் பாதுகாப்பதிலும் இரு நாடுகளையும் இணைந்து செயற்பட வகை செய்கிறது. இதனால் இந்திய அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ நலன்களில் இவ்வொப்பந்தம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இந்தியக் காங்கிரஸ் தரப்புக் கருதுகிறது. தமது வெளியுறவுக் கொள்கைக்கு கிடைத் வெற்றியாகவே இதனைக் கருதமுடியும் என காங்கிரஸ் பேச்சாளர் கருத்துத் தெரிவித்ருக்கிறார்.





## சேதுகால்வாய்த் திட்டம்

தமிழ் நாட்டில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள சேது கால்வாய் வெட்டும் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. உண்மையில் இக்கால்வாய் இந்தியாவின் வர்த்தக, இராணுவ நடவடிக்கைகளில் மிகவும் பயனுள்ள ஒன்றாகவே கருதப்படுகிறது. இந்தியாவின் ஆசியப் பிராந்திய வல்லாதிக்கத்தை இது வலுப்படுத்தும் என்பதிலும் சந்தேகமில்லை.

அடுத்தடுத்து இந்தியாவின் இராணுவ, பொருளாதார மேம்பாட்டில் பெரிய நகர்வுகளைச் செய்துவரும் காங்கிரஸ் அரசு தன்மீதான மக்கள் நம்பிக்கையை வலுப்படுத்தி வருகிறது என்பது அவதானிகள் கருத்து.

இந்தியா 1998களில் அணு ஆயுத பரிசோதனையை நடத்தி தனது அணுபலத்தை உலகத்துக்கு வெளிப்படுத்தியது. தொடர்ந்து பாகிஸ்தானும் கூட அணுஆயுத பரிசோதனைகளை நடத்தியது. உலகில் அணுஆயுத உற்பத்தி நாடுகளின் பாதுகாப்பு என்பதைக் கடந்து முழு உலகின் மீதான அச்சுறுத்தலாக உருவாகும் அபாயம் இருப்பதால் இதன் மீதான தடை ஐ.நாவின் கண்காணிப்பில் ஒப்பந்தமாகவே கைச்சாத்திடப்பட்டு இருக்கிறது.

இந்த நிலையில் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தை மீறி இந்தியாவுக்கு அமெரிக்கா எப்படி ஆதரவு வழங்க முடியும் என்ற சர்ச்சை இப்போது உருவாகி வருகிறது. ஈரான் மற்றும் வடகொரியா மீது அணு ஆயுத உற்பத்தி குறித்துப் பெரும் அச்சுறுத்தல் விடுத்து வரும் அமெரிக்கா, இந்தியாவை மட்டும் ஏற்றுக்கொள்ளும் தன் நடவடிக்கைக்கு என்ன நியாயத்தை முன்வைக்கிறது என்பதே எழுந்துள்ள சர்ச்சை.

எனினும், இந்த ஒப்பந்தம் தொடர்பாக வெள்ளைமாளிகையில் உரை நிகழ்த்தும் போது அமெரிக்க அதிபர் புஷ், இந்தியாவின் சிவில் அணுசக்தி திட்டத்தை அமெரிக்கா, ஏற்றுக் கொள்கிறது [அணுமின் உலை போன்ற மக்கள் பயன்பாட்டிலுள்ள] என்றார். இராணுவ ரீதியில் ஆயுத உற்பத்திக்கு அணு பயன்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பான கருத்துக்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதுமட்டுமன்றி, இந்தியா உட்பட பிரேசில், ஐப்பான், ஜேர்மனி ஆகிய நான்கு நாடுகளும் வீட்டோ அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்புரிமையை ஐ.நாவில் கோரி வருகின்றன. அத்துடன், ஆபிரிக்காவுக்கு நிரந்தரமற்ற உறுப்புரிமை கோரிக்கையும் விடப்படுகிறது. ஆனால், தற்போது கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் இந்தியாவின் வீட்டோ அதிகாரம் தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றில் தான் பிரேரிப்பதாக கூறியுள்ளார்.

## உள்நாட்டில் எதிர்ப்பு

இந்த நிலையில் அமெரிக்க - இந்திய ஒப்பந்தம் தொடர்பான எதிர்ப்பு அறிக்கைகளும் இந்தியாவில் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. அவற்றில் முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்திருக்கும் கருத்துகள் முக்கியமானவை.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் அது இந்தியாவின் தேசிய நலனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என்று கூறியிருக்கிறார். மேலும் இந்தியாவின் அணுப்பாவனை தொடர்பான விவரங்களை அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்வது நீண்ட கால நோக்கில் இந்தியாவின் நலன்களைப் பாதிக்கும் இராணுவ முன்னெடுப்புகளை கட்டுப்படுத்தும் - என்று கூறியிருக்கிறார்.

இவ்வாறு இடைசாரிகளும் குற்றம் சுமத்துகிறனர். இந்த எதிர்ப்புகள் பற்றி அமெரிக்காவில் இருந்த போதே பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதிலளித்த பிரதமர் மன்மோகன்சிங், “நான் வாஜ்பேயின் அறிக்கையை படிக்கவில்லை. ஆனால், இந்த அடிப்படையில் அவர் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தால் அது தவறான கணிப்பாகும்” - என்றார். அத்துடன், இந்தியாவின் பாதுகாப்பு நலனுக்கு எத்தகைய ஆபத்தையும் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தாது என்று உறுதி கூறினார்.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் பெரிய நிலப்பரப்பையும் சனத்தொகையையும் கொண்ட இந்தியா அதன் பிரதான சந்தைகளில் ஒன்றாக இருக்கிறது. இந்தியாவுக்கு பொருளாதார இராணுவ பலத்திற்கு இந்த ஒப்பந்தம் உதவும் நிலையுள்ளது.

இந்தியப் பிரதமர் அமெரிக்காவில் நாடாளுமன்றம், வெள்ளைமாளிகை ஆகிய இடங்களில் உரை நிகழ்த்தும் போதும் அதிபர் ஜோர்ஜபுஷ், துணை ஜனாதிபதி டிக் சென்னி, பாதுகாப்பு செயலர் ராம்ஸ்பீல்ட் வெளியுறவுச் செயலர் கொண்டலிசா ரைஸ் ஆகியோர்களைச் சந்தித்து பேசும்போது பாகிஸ்தானின் எல்லை தாண்டிய பயங்கரவாதம் பற்றியே வலியுறுத்திப் பேசினார்.

இப்போது உலக ஆட்சியில் ‘கொள்கைகளின்’ தாக்கம் வீச்சுக்குறைந்து செல்ல, பதில் சொல்லும் பொறுப்புடைய அரசுகளும் பதிலளிக்கும் கடப்பாடுகளைக் கடந்த தீவிரவாத அமைப்புகளும் செல்வாக்குப் செலுத்தி வருகின்றன. அத்தகையதொரு தீவிரவாத அமைப்பை உருவாக்கி அதன் மூலம் காஷ்மீர் பிரச்சினையை பாகிஸ்தான் கையாளுகின்றது என்பது இந்தியாவின் நீண்ட நாளைய குற்றச்சாட்டு. இந்த நிலையில் மன்மோகன் சிங் ‘பாகிஸ்தான் தீவிரவாத ஊக்குவிப்பைக் கைவிடவேண்டும்’ - என்று வலியுறுத்தியிருக்கிறமை நோக்கத்தக்கது.

எனவே, இந்த அமெரிக்க - இந்திய கூட்டு பாகிஸ்தானுக்கானது அன்றி பாகிஸ்தானைக் தளமாகக் கொண்ட முஸ்லிம் தீவிரவாத அமைப்புகளுக்கான அச்சுறுத்தலாகவும் நோக்கக் கூடியது.

இந்த நிலையில் அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவை விலக்கி உலகப் பொலீஸ்காரனை தன்பக்கம் இழுத்துக் கொள்ளும் நோக்கம் இந்தியாவுக்கு இருப்பதாகவேபடுகிறது. இதன் மூலம் ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவை அமெரிக்கா நம்பும் சூழலை ஏற்படுத்தும் எதிர்பார்ப்புடனும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். ஆனால், தொடர்ந்தும் அமெரிக்காவுடன் உறவுகளை பேணவே பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் விருப்பம் கொண்ட ஒரு நிலையில் இது சாத்தியமாவது கடினமே. ஏனெனில், அமெரிக்கா என்றைக்கும் தனது தேசிய நலனையே கருதும். பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ள இஸ்லாமிய தீவிரவாதிகளின் குண்டுத் தாக்குதல்கள் பிரித்தானியாவில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியிருப்பினும் அத்தகையதோர் அச்சுறுத்தலை அமெரிக்காவில் ஏற்படுத்த வாய்ப்பில்லை. ஏனெனில், பாகிஸ்தான் அதன் இராணுவக் கட்டமைப்புத் தொடர்பாகவும் தீவிரவாத அமைப்புகள் தொடர்பாகவும் அமெரிக்கா தன் தொழில் நுட்பத் திறனால் கண்காணிப்பை ஏற்கனவே வலுவாக்கியுள்ளது. எது எப்படியாயினும் பிரித்தானிய குண்டு வெடிப்புகள் அமெரிக்காவை தன் பாதுகாப்பு முயற்சிகளை உசார்ப்படுத்துமே யன்றி அதன் வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களை உருவாக்காது என்பதே இப்போதைக்கு அனுமானிக்கக் கூடியதாகவுள்ளது.

சிவசைலஜா.

---

## அவள் வருவாளா...?

கடுகுக் கதை



சுரேஸ் ஏனோ தெரியவில்லை சில நாள்களாக பித்துப் பிடித்தவன் போல் இருந்தான். ஏதோ ஒன்றைப் பறிகொடுத்தவன் போல் அவனுடைய செயற்பாடுகள் அமைந்திருந்தன.

அவனுடைய அந்தத் தவிப்புக்கு அப்படி என்னதான் காரணம்... இந்த மாற்றத்துக்கு அப்படி எதையிழந்தான்? இது சுரேஸின் நண்பர்கள் அவனுடைய மாற்றம் கண்டு தம்முடைய மனதில் தினம் நடத்தும் விவாதம்.

ஆனால், சுரேஸோ தன்னுடைய உள்ளத்தில் இருக்கும் அந்தச் சுமையை - தவிப்பை - யாரிடமும் இறக்கி வைக்கவும் விரும்பவில்லை. நித்திரைக்குப் போனாலும் அவன் விழிகளில் தூக்கம் வருவதில்லை. ஆனால், அவனுடைய உள்ளத்தின் அந்த ஏக்கம் மட்டும் அவனைச் சூழந்துவிடும். அக்கணப்பொழுதெல்லாம் அவன் தன்னையறியாமல் புலம்புவான்.

‘ச்சீ... 5வருஷமாய் என்னோட என் நிழலோடு எல்லாம் என்னுயிராய் என் இதயத்தில் எப்பவும் என்னுடன் குந்தியிருந்தவள் இப்ப ஏன் என்னை விட்டிப் பிரிஞ்சு போனாள். ச்சீ.. அவள் என்னை விட்டுப் பிரியேல நான் தான் சுயநலவாதி. எனக்கு தேவையென்ற போதெல்லாம் என்னுயிராய் அவளை நேசித்தேன். தேவையில்லாதபோது அவளைத் தூக்கி வீசினேன். இப்போதும்... அவள் நினைவு வந்தவுடன்தான் தேடுகிறேன்.

நான் ஒரு சுயநலவாதி.....இப்ப எங்க ... என்னுயிரான அவளைத் தேடுவது? எங்கெல்லாம் தேட வேண்டுமோ அங்கெல்லாம் அவளைத் தேடுகிறேன். என் விழிகளில் அவள் உருவம் படவேயில்லை. இத்தனையும் அவள் தூக்கத்தைப் பறித்துத் தினம் அவள் பிரிவு கொடுத்திருக்கும் தவிப்புகள்.....

அன்றும் வழமைபோல் தாயார் சாப்பாட்டைக் கொண்டுவந்து கொடுக்க அதை உண்ணாமல் அதனை வெறித்துப் பார்த்தவனாய் இருந்தான்... அப்போது அவனின் இளைய சகோதரி ஜீவா, ‘அண்ணா..... அண்ணா நீ தேடினது கிடைச்சிட்டுது...’ என்று கத்தியபடி அறைக்குள் இருந்தவாறு கையில் இரண்டு ஐ.சி களையும் கொண்டு ஓடி வந்தாள்.

இப்போது தான் சுரேஸிற்கு உயிர் மீண்டு வந்தது போல் இருந்தது. இரண்டு ஐ.சி. களையும் பக்குவமாய் தன்னுடைய பேர்ஸூக்குள் வைத்தவன். இனி என்னைக் காப்பாற்றப்போறதும் அடையாளப்படுத்தப் போறதுமான என்ர ஐ.சி இரண்டும் கிடைச்சிட்டுது என்று சந்தோசத்தின் உச்சியில் நின்று தன்னையறியாமல் புளகாங்கிதமடைந்தான்.

எஸ்.கவிதரன்.

---

## புலிகளை புறக்கணித்துப் செய்த ........

(VII ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும், பலாலி இராணுவத்தளத்தில் இந்தியர் கனரக இராணுவத் தளபாடங்களை இறக்கியபோது புலிகளுக்குச் சந்தேகம் முளைவிட்டது. அமைதி காக்கும் பணியுடன் பீரங்கி வண்டிகளும், கனரக ஆயுதங்களும், எவ்வாறு இணையலாம் என்ற கேள்வி சந்தேகமாக அப்போது உருவெடுத்தது.

இந்தியப் படைகள் யாழ்ப்பாணத்துக்குள் பிரவேசித்ததை அடுத்து, ஓகஸ்ட் 4இல் பிரபாகரன் அவர்கள், தமது மக்களுக்கு ஓர் உரை நிகழ்த்தினார். யாழ்ப்பாணம் சுதுமலையில் நிகழ்ந்த இப் பொதுக் கூட்டத்துக்கு மிகப் பெரும் சனத்திரள் அணிதிரண்டது. ‘நான் இந்தியாவை நேசிக்கிறேன்’ என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய மிகப் பிரபல்யம் வாய்ந்த உரை அது. ஒப்பந்தம் தொடர்பான தமது நிலைப்பாட்டையும் இந்திய அமைதிப் படையினரிடம் ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றியும் அவர் அதில் விளக்கினார். இந்தியாவின் அரசியல் மற்றும் இராணுவ பலத்தினால் தமது இலட்சியங்கள் கட்டுப்படுவதை அவர் ஒப்புக்கொண்டார். ஆயினும், தனித் தமிழ் நாடு தொடர்பான போராட்டத்தைக் கைவிட அவர் மறுத்தார். மிகக் கவனமாகத் தொகுக்கப்பட்ட இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையிலே தமிழ் மக்களின் வேணவாவை அவர் வெளியிட்டதோடு, இந்தியாவின் கேந்திர செல்வாக்கும் சுயநிர்ணயத்துக்கான தமிழ் மக்களின் போராட்டமும் உரசுவதையும் அவர் எடுத்துச் சொன்னார். அதன் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் அவருடைய கூற்றை, யதார்த்தமானவை என்று நிரூபித்தன. தொடக்கத்தில் இருந்தே ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் காணப்பட்டது. சிறிலங்காவினதும், இந்தியாவினதும் கருத்துக்கள் மட்டும் கவனிக்கப்பட்டதேயன்றி, பாதிப்புக்கு உள்ளான தமிழ் மக்களின் அங்கலாய்ப்புகள் பொருட்படுத்தப்படவில்லை. எடுத்துக்காட்டாக, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும் என்ற கட்டுப்பாடுகளைத் துரிதமாகச் செயற்படுத்த வேண்டும் என்பதில் இந்திய அமைதிப் படைத் தளபதிகளும் சிங்கள இராணுவ அதிகாரிகளும் வேகம் காட்டினார்களேயொழிய, ராஜீவ்காந்தி வாக்குறுதியளித்த இடைக்கால நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படுவதை வேண்டுமென்றே தாமதப்படுத்தினார்கள். இதனால், விடுதலைப் புலிகளிடையேயும் தமிழ் மக்களிடையேயும் சந்தேகம் எழுந்தது நியாயமானதே! விடுதலைப் புலிகள் கணிசமான அளவு ஆயுதங்களை ஒப்படைத்திருந்தனர். சிறிலங்கா அரசுக்கு எதிரான அனைத்துப் போர் நடவடிக்கைகளையும் நிறுத்தியிருந்தனர். இந்த நிலையிலே, வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாக அமைப்பை இந்திய அரசு நிறுவ வேண்டும் என்று விடுதலைப் புலித் தலைவர்களும் போராளிகளும் எதிர்பார்த்து நின்றார்கள். மாறாக, இந்தியர்கள் மௌனமாக இருக்க, தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை சிறிலங்கா அரசுத் தலைவர் ஜெயவர்த்தன தீவிரப்படுத்தியதோடு, கிழக்கிலே புதிய காவற்துறை நிலையங்களைத் திறந்து கொண்டிருப்பதை ஆற்றாமை நிலையில் நின்று விடுதலைப் புலிகள் பார்த்துக் கொண்டிருக்க நேர்ந்தது. ★